வாரப்பதிப்பு விலே சதம 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்



மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 ஐப்பசி திங்கள 22-ம் நாள் (8—11—1959) ஞாயிற்றுக்கிழமை ஐ.அவ்வல் பிறை 6 இதழ் 23

# ஸ்டான்லி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## வெற்றி பெறுவது அசாத்தியம்

## எதிர்க் கட்சியுள்ளே இது விஷயத்தில் பலத்த அபிப்பிராய பேதம்

## ஒருவர் மீது நம்பிக்கை இல்லை யென்ருல் மற்ற மந்திரிகள் மீது நம்பிக்கை உண்டா?

(சுதந்திரன் நிருபர்)

நிதியமைச்சர் திரு ஸ்டான்லி டி சொய்ஸாமீது எதிர்க்கட்சியினர் கொண்டு வர விரும்பும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் உருப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படவில்லை. அப்படி ஒரு தீர்மானத்தை லங்கா சமசமாஜக் கட்சியினர் தனித்து நின்று பிரேரித்தாலும் அது வெற்றிபெறுவது அசாத்தியம் என்றே தெரிய வருகிறது.

திரு ஸ்டான்லி டி சொய்ஸா இலங்கை திரும்பியதும் அவர் தாமாக ஸிலசமயம ராஜிஞமாச் செய்யக் கூடும். அல்லது பண்டார நாயகா படுகொலை வழக்கு தாக்கல் செய்யப்படும்வரை அவரைப் பதவியிலிருந்து தற்காலிகமாக ஒதுங்கியிருக்கும்படி பிரதமர் தஹநாயகா கேட்டுக்கொள்ளக் கூடும்.

ஆனல் அவருக்கு எதிராக எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தால் அது ஒரு போதும் நிறைவேருது என்பதைச் சுதந்திரன் நிச்சயப் படுத்திக் கூறக்கூடியநிலையிலுள்ளது.

### நடக்காத காரியம்

நிதியமைச்சர்மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றப்போவதாகவும் அரசாங்க கட்சியிலுள்ள பலர் அத்தீர்மானத்துக்குச் சாதகமாக வாக்களிப்பார்கள் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா கூறிஞரல்லவா? இது நடக்கிற காரியம் அல்ல என்று தெரிகிறது. இந்த விஷயத்தில் எதிர்க்கட்சியினருள் பலத்த அபிப்பிராயபேதம் நிலவுவதுதான் அதற்குக் காரணமாகும்.

### அர்த்தமற்ற செயல்

கூட்டுப் பொறுப்புள்ள ஒரு மந்திரி சபையில் ஒரு தனி மந்திரிமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதென்பது அர்த்தமற்ற காரியம் என்றும் அப்படியானல் முழு மந்திரி சபைமீதுமே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்றும் அரசியல் விவகார சட்ட திட்டங்களை அறிந்தவர்கள் சுட்டிக்காட்டினார்களாம். அண்மையில் முழு அரசாங்கத்தின்மீதும் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து தோல்வி கண்டபின், தனி ஒரு மந்திரிமீது நம்பிக்கையில்லையென்று மற்ருெரு தீர்மானத்தைக்கொண்டு வந்தால், அந்த ஒரு மந்திரியைத் தவிர இதர மந்திரிகளில் நம்பிக்கையுண்டு என்றும் பொருள்படுமே. இப்படியும் சிலர் வாதித்ததாகத் தெரிகிறது.

### மந்திரி சபையில் மாற்றம்?

தஹநாயகா மந்திரிசபையில் மாற்றம் ஏற்பட்டால் பின்வரும் மாற்றங்கள் ஏற்படலாம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

நிதி அமைச்சர் திரு ஸ்டான்லி டி சொய்ஸா வெளியேற்றப்பட்டால் நிதி மந்திரி பதவிக்கு செனட்டர் என். யு. ஜயவர்த்தன அல்லது செனட்டர் ஏ. பி ஜயசூரியா நியமிக்கப்படலாம்.

பல கம்பனிகளில் செனட்டர் என். யு. ஜயவர்த்தன டைரக்டராயிருப்பதால் அவர் அப்பதவிகளை விட்டெறிந்து விட்டு நிதியமைச்சராவது சுலபமல்ல. எனவே திரு ஏ. பி. ஜயசூரியாவே நிதியமைச்சராகலாம்.

திரு ஜயசூரியா நிதியமைச்சரானல், ஸ்தல ஸ்தாபன அமைச்சர் பதவிக்கு திரு ஆர் ஈ. ஜயதிலகாவை நியமித்துவிட்டு, சுகாதார அமைச்சு திரு எம். பி. டபிள்யு மெதிவாக்கையின் வசம் ஒப்படைக்கப்படலாம் என்று நம்பப்படுகிறது.

திரு ஸ்டான்லி வெளியேறினல நிதியமைச்சர் பதவி தமக்கு கிடைக்கலாம் என்று ஜனுப் எம். எம். முஸ்தபா காத்திருப்பதாகவும், அது ஒருபோதும் நடைபெருதென்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் கூறின.

## எலி போல் வெளியேறிய மூதூர் முகம்மது அலி!

## ராஜிஞமாவை வாபஸ் பெற்ற இரகசியம் என்ன?

[சுதந்திரன் நிருபர்]

மூதூர் பிரதிநிதி ஜனுப் எம். ஈ. எச். முகம்மது அலி கடந்த வாரம் ஒரு நாள் காலையில் அரசாங்கப் பாராளுமன்றக் கட்சியிலிருந்து ராஜிஞமாச் செய்து மாலையில் அந்த ராஜிஞமாவை வாபஸ் பெற்ருர் அல்லவா? இதன் இரகசியம் என்ன? சொந்தக் காரணங்களுக்காகவே ராஜிஞமாச் செய்ததாகச் சொல்லப்பட்ட போதிலும் அந்தரங்கக் காரணம் ஒரு பாராளுமன்றக் காரியதரிசிப் பதவியைப் பற்றியது என்பது பரகசியமாகும்.

நிலையற்ற முறையில் நடந்து கொண்ட ஜனுப் அலியின் போக்கு சுதந்திரன் வாசகர்களுக்கு ஆச்சரியத்தை விளைவித்திராது. ஏனென்ருல், இரண்டு வாரங்களுக்கு முன்பு சுதந்திரன் நிருபர் அரசாங்கத்தின் நிலைமை பற்றி வெளியிட்ட அபிப்பிராயத்தை அவர்கள் முன் கூட்டியே படித்துள்ளார்கள்.

சுதந்திரன் 25-11-59 இதழில் சுதந்திரன் நிருபர் பின்வருமாறு எழுதியிருந்தார்:

"வெளியூர் சென்றிருக்கும் திரு ஆர். ஈ. ஜயதிலகா இலங்கை திரும்பியதும் தொடர்ந்து அரசாங்கத்துடன் வாக்களிப்பார் என்பது நிச்சயமில்லை. ஒரு மந்திரிப் பதவியை அவருக்குக் கொடுக்க வேண்டிய

(9-ம் பக்கம் பார்க்க)

## "போதிசத்துவர்" புதைக்கப்பட்டதேன்?

### கல்லறையில் அடக்கம் செய்வது கிறிஸ்தவரின் வழக்கமல்லவா?

### பெளத்த ஸ்தாபனங்கள் விடுக்கும் வினு

பிரதமர் திரு தஹநாயகாவினுல் "போதிசத்துவர்" என்று புகழப்படும் காலஞ்சென்ற பிரதமர் திரு பண்டாரநாயகாவின் பூதவுடல் பெளத்த முறைப்படி தகனம் செய்யப்படாமல் கிறிஸ்தவ வழக்கப்படி புதைக்கப்பட்டதேன் என்று சில பெளத்த ஸ்தாபனங்கள் ஒரு கேள்வியைக் கிளப்பி வருவதாகத் தெரிகிறது.

பெளத்த மதத்தினர் தங்

(9-ம் பக்கம் பார்க்க)

## அசுத்த இரத்தம்?

### வேதனை தரும் பல பயங்கரமான நோய்களுக்குக் காரணமாகிறது!



இரத்தத்திலுள்ள அசுத்தங்கள் அகற்றப்படாவிட்டால அவை அங்கு பெருமளவில் தேங்கிக்கிடந்து நச்சுத் தன்மையை உண்டாக்கி விடுகின்றன. அதனல் கடுமையான வியாதிகள் பல ஏற்பட ஏதுவாகின்றன.

- வாத நோய்கள்: இடுப்புப் பிடி, சந்து, வாதம், கீல் வாயு, கை கால் பூட்டுகளில் பிடிப்பு—நோவு.
- இரத்த நாள இறுக்க நோய்: இரத்தக் கொதிப்பு, இரத்தக் கட்டுத் தொந்தரவுகள்.
- மந்தமான இரத்த ஓட்டம்: சோர்வு, பித்த மயக்கம், அசதி, நரம்புத் தடிப்பு, நரம்பு சுருளல், புண், பிளவை, கட்டி.
- சரும வியாதிகள்: பருக்கள், தேமல்கள், சொறி சிரங்குகள் (ECZEMA)
- மூலம்: உள் மூலம், வெளி மூலம், இரத்த மூலம்.




ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர்

(Richelet's Blood Purifier)

இரத்தத்தை சுத்திகரிக்கவும், அதற்கு சக்தியூட்டவுமாக விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டது. இது உடம்பில் எந்தப் பாகத்திலுமுள்ள நோய் நஞ்சையும் நீக்கி உடம்பைச் சீர்படுத்துகிறது. உள்ளூர ஏற்பட்ட நச்சுத் தன்மையால் உண்டாகும் நோய்களின் வலிகள்—வருத்தங்கள் படிப்படியாக ஒழிக்கப்படுகிறது இம் மருந்திஞல். மேலே சொன்ன எந்த ஒரு வியாதியால் கஷ்டப்படும் நோயாளியும் ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர் உபயோகிக்கவேண்டும். பூரண சுகம், பலம், சந்தோஷம் அப்பொழுது நிச்சயம் கிடைக்கும்.

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

வெஸ்டன் ஏஜன்சிஸ்.,

63, பாங்ஷால் வீதி, கொழும்பு—11.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் குறிப்புகள்:

# திட்டம் தீட்டுகிறது—ஆலோசனை கூறுகிறது

## கவிதை பாடுகிறது-இன்னும் சதுரங்கம் கூட ஆடுகிறது

### மின்னணுக் கணித இயந்திரத்தின் சாதனை

### சோவியத் யூனியனின் மகத்தான தயாரிப்பு

ஒரு சிறிய மின்னணு சாதனம், மிகவும் சிக்கலான கணிதம் பிரச்னைகளுக்கு முடிவு காணும் என்றும், பொருளுற்பத்தியின் நிகழ்ச்சிப் போக்குகளைக் கண்காணிக்கும் என்றும், கணக்குப் புத்தகங்களை ஒழுங்காக வைத்துக்கொள்ளும் என்றும், குறித்த வேலைகளை செய்து முடிக்கும் என்றும், ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குக் கடிதங்கள், புத்தகங்களை மொழி பெயர்க்கும் என்றும், சதுரங்க ஆட்டம் ஆடும் என்றும், கவிதையும் பாட்டும் எழுதும் என்றும், யாராவது 10 ஆண்டுகளுக்கு முன்பு கூறியிருந்தால் அவரை நாம் பைத்தியம் என்று கருதி இருப்போம். ஆனால் இன்று இயந்திரங்கள், மொழி பெயர்ப்பதையும் சதுரங்கம் ஆடுவதையும், திட்ட நிபுணனைப்போல் பொருளாதாரத் திட்டங்கள் தீட்டுவதையும் கண்கூடாகக் காண்கிறோம். “சைபர்னிடிக்ஸ்” என்ற புதியதொரு விஞ்ஞானத்தின் சாதனைகள் இவை.

#### கணக்கு போடுகிறது

விவரமான, துல்லியமான கணக்குகளும் மதிப்பீடுகளும் இல்லாது சோவியத் யூனியன் சோஷலிசப் பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிட முடியாது. தேசப் பொருளாதாரம்பற்றியும், பல்வேறு பொருளாதாரத் துறைகள்பற்றியும் பிரம்மாண்டமான அளவிற்குப் பல தகவல்களைச் சேகரிக்க வேண்டியுள்ளது. இதன்றி உற்பத்தி அளவையும் மக்கள் தேவையையும் சரிக்கட்டவும் வேண்டியுள்ளது. இவை யாவும்பற்றிய கணக்குகளை மிகவும் குறுகிய காலத்திற்குள் செய்து முடித்தால்தான் மேற்கொண்டு செயல்படுவது சாத்தியமாகும்.

#### மனிதனால் முடியாத காரியம்

இந்த இயந்திரங்கள் இலட்சம், கோடி என்ற அளவிலுள்ள ஏராளமான எண்ணிக்கைகளை “மனப்பாடம்” செய்யும் ஆற்றலைப் பெற்றுள்ளதுடன், இவற்றையெல்லாம் கூட்டியும், கழித்தும், பெருக்கியும், வகுத்தும் பல்லாயிரக்கணக்கான கணக்குகளை “ஒரு வினடிக்குள்” போட்டு முடித்து விடுகின்றன.

#### திட்ட அமைப்பு

சோவியத் தலைநகரிலே நூற்றுக்கணக்கான நிர்மாணத் தலங்களில் வேலைகள் நடந்து வருகின்றன. இவற்றிற்கான கட்டிடப் பொருள்களும், இயந்திரங்களும் குறித்த நேரத்தில் குறித்த அளவில், குறைந்த செலவில் வந்து சேர வேண்டுமல்லவா? எந்தெந்த தொழிற்சாலைகளிலிருந்து எந்தெந்தப் பொருள்கள், எந்தெந்த நிர்மாணத் தலங்களுக்குச் செல்ல வேண்டும்? இதுபற்றித் திட்டம் வேண்டும் அல்லவா? இதுபற்றி பலதரப்பட்ட திட்டங்களை வகுக்க முடியும் என்பது மெய்யே. அவற்றில் எது சிக்கனம், எதைப் பின்பற்றினால் போக்குவரத்து செலவு குறையும், காலதாமதம் ஏற்படாது, வேலை துரிதமாக முடியும்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் மின்னணுக கணித இயந்திரம் வெகு விரைவில் பதில் அளிக்கிறது.

#### பெறுபேறு

உதாரணமாக ஒரு இடத்தில் வேலை செய்யும் 20,000 தொழிலாளர்களின் சம்பளம் எவ்வளவு என்பதை மின்னணு கணித இயந்திரம் 30 விநாடிகளில் கணக்குப் போட்டுவிடுகிறது. இதேபோல் பல சிக்கலான நிர்மாண வேலைகளுக்கான செலவையும் சிறிது நேரத்தில் நிர்ணயித்துக்கூறி விடுகிறது இதனால் தொழிற்சாலைகள் முதலியவற்றைக் கட்டுவதற்கான முறையான தொழில் நுட்ப, பொருளாதாரத் திட்டத்தை எளிதில் தயாரிக்க முடிகிறது.

#### மத்திய கணித அமைப்பு

இந்த கணித இயந்திரங்கள் யாவும் ஒரு மத்திய அமைப்பில் இணைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் ஒவ்வொரு ஸ்தலத்தின் நிலவரத்தையும் தனித் தனியாகக் கணக்கிட வேண்டிய அவசியமின்றி, இவையாவும் மத்திய அமைப்பில் பதிவாகிவிடும்.

சோவியத் 7 ஆண்டுத் திட்டம் மேற்படி மின்னணு கணித இயந்திரங்களின் உற்பத்தியைப் பெருமளவிற்கு அதிகரிப்பதற்கு வகை செய்கிறது. எனவே, நாடு பூராவிலும் எல்லா கணக்கு வேலைகளையும் இயந்திரங்கள் செய்யும் நாள் வெகுதூரத்தில் இல்லை எனலாம்.

## கதிரியக்க மண்டலம் பற்றி புதிய கண்டுபிடிப்பு

### அமெரிக்க ஆறும் எக்ஸ்புளோரர் அணிமையில் தந்த தகவல்

ஆறும் எக்ஸ்புளோரர் என்னும் அமெரிக்கச் செயற்கைச் சந்திரன் பூமியின் மேற்பரப்பின் ஒரு பகுதியையும் அதன்மேலுள்ள மேகக் கூட்டத்தையும் 19,500 மைல் உயரத்திலிருந்து படம் பிடித்து அனுப்பியுள்ள செய்தி சமீபத்தில் வெளியாயிற்று.

ஆகஸ்ட் 7ம் தேதி விண்வழியில் சென்ற ஆறும் எக்ஸ்புளோரர் மத்திய பசிபிக் பிரதேசத்தின் பெரும் பகுதியைப் படம் பிடித்து மின் அலைக் குறிகள்மூலம் அனுப்பியது என்றும், அப்படம் செயற்கைக் கோள் நிலையறி நிலையத்தில்ஆகஸ்ட் 14ம் தேதி கிடைத்தது என்றும் தேசிய விமான இயல் விண்வெளி நிர்வாகம் தெரிவித்தது, இது திருத்தமற்ற படமாகும்.

#### புதிய கண்டுபிடிப்பு

பூமிக்கு 1250 மைல் உயரத்தில் மற்றுமொரு கதிரியக்க மண்டலம் உள்ளதென்று ஆறும் எக்ஸ்புளோரர் புதிதாகக் கண்டுபிடித்து அறிவித்துள்ளது. இம்மண்டலத்தில் உள்ள அணுப் பொருள் சக்தி மிக்க புரோட்டன்கள் ஆகும். கதிரியக்க மண்டலங்களுக்கு நேர்கீழே இப்புதிய மண்டலம் இருப்பதாகத் தெரிகிறது.

ஆறும் எக்ஸ்புளோரரின் ஆயுட் காலம் ஓராண்டுக்கும் அதிகமாக இருக்கும். அது பூமிக்குக் கிட்ட வரும்போது 156 மைல் உயரத்திலும்எட்டச் செல்லும்போது 26,000 மைல் உயரத்திலும் இருப்பதாக இப்பொழுது மதிப்பிட்டுள்ளனர். உலகத்தை ஒரு சுற்றுச் சுற்ற அதற்கு 12½ மணி நேரம் ஆகிறது.

#### மறு பெயர்

ஆறுவது எக்ஸ்புளோரரில் நான்கு துடுப்புகள் உள்ளன. இவற்றில் ஆயிரக்கணக்கான சூரிய மின்கலங்கள் இருக்கின்றன. வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் இத்துடுப்புகளின் சூரிய மின்கலங்கள் சூரிய ஒளியால் மின்சாரம் தோற்றுவித்து, உள்ளே உள்ள ரசாயன மின்கலங்களில் மின்சாரம் தீர்ந்து போனதும் அவற்றுக்கு மின்சாரம் ஏற்றும். இதனால் இதற்குத் துடுப்புக்கால் செயற்கைக்கோள் என்ற பெயரும் உண்டு.

பூமியைச் சுற்றியுள்ள கதிரியக்க மண்டலம், மேகமண்டலம், விண்வெளியில் எதிர்ப்படும் விண்வீழ்கொள்ளிகள் முதலிய வானியல் நிகழ்வுகளை ஆராய்ந்து தகவலறிவதற்கென்றே துடுப்புக்

(15-ம் பக்கம் பார்க்க)


## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறாமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

**வருடச் சந்தா ரூபா. 10-00**

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.

தபால் பெட்டி 1183,
கொழும்பு.



## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, இரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், “ஆனந்தா தைலத்தை”த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


## ‘பிளாஸ்டிக் மனிதர்’ தயார் அணுக்கதிர் வீச்சு தாக்குதலுக்கு!

### அமெரிக்காவில் சோதனை ஆரம்பம்

உயிர் வாழும் மனிதர் அணுச் சோதனைகளுக்கு உள்ளாக இணங்குவது அரிது அணுக் கதிர் வீச்சின் தாக்குதல் மனித உடலை எவ்வாறு பாதிக்கும் என்பதைக் காட்டுவதற்கு “பிளாஸ்டிக் மனிதர்” என்னும் கருவிகளை உருவாக்கியிருக்கிறார்கள்.

வைத்தியப் பரிசோதனையிலும், வைத்தியம் செய்யும் போதும், விண் வெளி விமானப் பயணத்திலும் விபத்துக்கள் நேர்ந்தால் கதிர் வீச்சுக்கு உட்படும் மக்களுக்குத் தீவிரமான வைத்தியம் தேவைப்படும். அதற்கு உரிய வழி வகைகளைக் கண்டு பிடிக்க விஞ்ஞானிகளுக்கு உதவி செய்யும் பொருட்டே, இந்தக் கருவிகள் அமைக்கப்பட்டன.

#### ஒற்றுமையான உறுப்புகள்

“பிளாஸ்டிக் மனிதர்” என்பவை ஒளி ஊடுருவக் கூடிய [illegible] தலை ஒரு [illegible] பருமனும் உள்ள வெறும் கூடுகள்; மனித உடல் போன்று பொருத்தப்பட்டவை. கூட்டில் மனித எழும்புக்கூடு ஒன்றும், பிளாஸ்டிக் நுரையீரல்கள் இரண்டும், ரசாயனக் கலவை உள்ள குழாய்களும் உள்ளன. மனித உடலின் மென்மையான திசுக்கள் அணுக் கதிர் வீச்சை கிரகிப்பது போல அந்த ரசாயனக் கலவை கிரகிக்கிறது. இந்தப் பிளாஸ்டிக் மனிதக் கூட்டுக்குள் பிளாஸ்டிக்கால் செய்த நுரையீரல், மண்ணீரல், சிறு நீர்ப்பை, குலை, தைராய்ட் ஆகிய முக்கிய உள் உறுப்புகளும் உள்ளன. ஒவ்வொரு உறுப்பிலும் குறிப்பிட்ட கதிரியக்கமுள்ள கலவை உள்ளது.

#### சோதனை

நியூமெக்ஸிக்கோவிலுள்ள லாஸ் அலாமாஸ் விஞ்ஞான ஆய்வுக் கூடத்துக்காக இந்தப் போலி மனித உருவங்களைச் செய்துள்ளனர். முதல் பிளாஸ்டிக் எலும்புக் கூட்டுருவம் பல வகை அளவான கதிர் வீச்சுக்களுக்குத் திரும்பத் திரும்ப உட்படுத்தப் படுகிறது. ஒவ்வொரு தடவையும் கருவிகளைப் பயன்படுத்தி, எலும்புக் கூட்டின் தலையும், பெரிய எலும்புகளும், கணுக்களும், பிளாஸ்டிக் குலைகளும் கதிரியக்கத்தால் எப்படிப் பாதிக்கப்படுகின்றன என்று அறியப்படுகிறது இரண்டாவது போலி மனிதனை வைத்து நடத்தும் சோதனைகளில், ஒவ்வொரு பிளாஸ்டிக் உறுப்பிலும் உள்ள கலவைகள் எவ்வளவு கதிரியக்கத்தைச் செலுத்துகின்றன என்பதை அளக்கிறார்கள். கதிர் வீச்சால் பாதிக்கப்படும் மனிதனின் உறுப்புக்களிலிருந்து புறப்படும் கதிர் வீச்சின் அளவையும் தன்மையையும் அளக்கும் கருவிகளை உருவாக்க இந்த அளவைகள் பயன்படும்.

#### பலன்

கதிர் வீச்சால் பாதிக்கப்பட்ட ஆளின் உடலிலுள்ள கதிர் வீச்சின் தன்மையை அளந்து பார்த்து வைத்தியம் செய்யலாம் கதிர் வீச்சைக் கிரகிப்பதால் எளிதாகப் பாதிக்கக் கூடிய மற்ற உறுப்புக்களுக்கும் வைத்தியம் செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்



குயுக்தி

செல்வி பரிமளா கிருஷ்ணன், கண்டி

கே: இலட்சிய நடிகர் திரு எஸ். எஸ். ராஜேந்திரனைப் பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?

ப: இதுகாலவரை ஒரே ஒரு கட்டத்தில் நன்ருக ஆடியிருக்கிருர். ஒரே ஒரு பாத்திரத்தில் நன்ருக நடித்திருக்கிருர். ரங்கோன் ராதாவில் 'ராஜாதேசிங்கு' ஆட்டம் பலே ஜோர். 'அன்பு எங்கே?' படத்தில் குடிகாரன் பாத்திரம் பிரமாதம். மற்றப்படி எல்லாம் 'டவுன்'தான்.

ஃ

அ. பஞ்சாட்சரம், வட்டக்கச்சி

கே: செட்டிமார்களின் வயிறு பருத்திருப்பதேன்?

ப: உடம்பசையாமல் உட்கார்ந்து வட்டிக் கணக்கைப் பார்க்கும் செட்டிமார்களின் வயிறுதான் உப்பியிருக்கும். மற்றப்படி ஓடியாடி உழைக்கும் செட்டிமார்கள் கெட்டியான உறுப்புகளுடன் தான் காணப்படுகிருர்கள்.

ஃ

எம். எஸ். எம். புஹாரி, நுந்துவை

கே: ஆண்டவனைப் பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?

ப: எந்த நாட்டை ஆண்டவனைப்பற்றிக் கேட்கிறீர்கள்? இலங்கை நாட்டை ஆண்டவன்தான் ஹொரகொல்லையில் அடக்கம் செய்யப்பட்டுவிட்டானே! இப்போது ஆள்கிறவன் பெயர் திரு டபிள்யு. தஹநாயகா.

ஃ

க. சேகர், வர்ணமேடு

கே: எங்களூர் கூட்டுறவுச் சங்கத்தில் கொள்ளையடிக்கிருர்களே இதிலிருந்து என்ன தெரிகிறது?

ப: கொள்ளையடிப்பதை அவர்கள் கூட்டுறவாகச் செய்யவில்லையென்று தெரிகிறது. அப்படிச் செய்திருந்தால் நீர் குறைப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிராதே.

ஃ

எம். துரைசாமி, ஓியல்லே

கே: கலியாணமான பெண்களுக்கு எத்தனை கண்கள்?

ப: மூன்று கண்கள்! தங்கள் அழகைத் தாங்களே கண்ணாடியில் பார்த்து ரசிக்கும் கண் ஒன்று. பிற பெண்களின் அழகை நேரில் பார்த்துப் பொருமைப்படும் கண் ஒன்று. தம் கணவர் வேறு எந்தப் பெண்ணின் கண்களை ஊடுருவிப் பார்க்கிருர் என்று கண்காணித்து நெருப்பைக் கக்கும் கண் ஒன்று. எல்லாமாக மூன்று!

ஃ

இ. கா. செல்வரட்னம், கொழும்பு.

கே: இலக்கியம் என்பது இலட்சியத்தில் இருந்து பிறந்தது என்கிருர் ஒருவர். இது பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: என் அபிப்பிராயம் எதற்கு? அதைவிட நல்ல அபிப்பிராயம் 25-10-59 சுதந்திரன் இதழில் 5-ம் பக்கத்தில் வெளியாகியிருக்கிறது. புரட்டிப் பாரும்.

ஃ

இளங்குமரன், கொழும்புத்துறை.

கே: சமீப காலமாக மந்திரி மரிக்காரைப் பத்திரிகைகள் மறந்துவிட்டிருக்கக் காரணம் என்ன?

ப: மந்திரி மரிக்காரை விடப் பெரிய கோமாளி ஒருவர் பிரதமராகியிருக்கும் போது மந்திரி மரிக்காரை எதற்காகக் கட்டியழ வேண்டும்!

ஃ

செல்வி பூமணி செல்லத்துரை, திருகோணமலை.

கே: வாள் வீச்சில் சிறந்தவர் எம். ஜி. ஆரா? சிவாஜியா?

ப: வாள் வாள் என்று வாயால் வீசுவதில் சிவாஜிக்கு நிகர் யாருமில்லை. ஆனால் கை வீச்சில் எம். ஜி. ஆர்தான் தமிழ்ப் படவுலகிலேயே சக்கரவர்த்தி!

கே: நடிப்பில் சிறந்தவர் எம். ஜி. ஆரா? சிவாஜியா?

ப: எம். ஜி. ஆர். இதுவரை ஒரே ஒரு படத்தில் தான் நன்ருக நடித்திருக்கிருர். அதன் பெயர் "மதுரை வீரன்". சிவாஜி தாம் தோன்றிய எல்லாப் படங்களிலுமே நன்ருக நடித்திருக்கிருர்.

ஃ

ஆர். முத்துசிவன், கேகாலை.

கே: கிராமணியாரின் "செங்கோல்" பத்திரிகையைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: நல்ல பத்திரிகை. உள்ளே படிக்க வேண்டிய பல கருத்துக்களைத் தாங்கி வருகிறது. ஆனால் பழுப்பு நிறத்தைப் போக்க பக்கத்தில் உள்ள 'லாண்டரி'யில் கொஞ்சம் போட்டு எடுக்க வேண்டும்போல் தோன்றுகிறது.

> மிஸ்டர் குயுக்தியார்
> C/o சுதந்திரன்.
> த. பெ. 1183
> கொழும்பு.—12

கே: தி. மு. க. தலைவர்களிடையே ஒரு தொற்று நோய் பிடித்திருக்கிறது. எது வென்று சொல்ல முடியுமா, குயுக்தியாரே?

ப: ஆகா, நன்ருகச் சொல்ல முடியுமே. தி. மு. க. தலைவர் என்ருலும் சரி, நடிகர் என்ருலும் சரி அவருக்கென ஒரு தனிப் பத்திரிகை வேண்டுமென்ற ஒரு தொற்றுநோய் எல்லோரையுமே பீடித்திருக்கிறது. இதன் காரணமாக ஒவ்வொருவரும் தனித் தனியாக பத்திரிகை என்ற பெயரால் பிட் நோட்டீஸ்களை வெளியிட்டுவருகின்றனர். எவ்வளவோ பணமும் உழைப்பும் நேரமும் வீணுகின்றன. எல்லா சக்திகளையும் ஒன்று திரட்டி ஒரு 'ஹிந்து'வைப் போல ஒரு 'தினமணி'யைப்போல ஆங்கில தமிழ் தினசரிகளையும், ஒரு ஆனந்தவிகடனைப் போல, ஒரு கல்கியைப் போல, ஒரு கலைமகளைப் போல, ஒரு மஞ்சரியைப் போல சஞ்சிகைகளையும் வெளியிட்டால் எவ்வளவு நன்ருகவிருக்கும்? அண்ணுவின் திராவிட நாடானது தனது 18 வயதில்கூடத் தங்கடை நாடாக வெளிவரும் போது பிறருடைய பத்திரிகைகளைப் பற்றிப் பேசித் தான் பயனென்ன?

ஃ

ச. அந்தோனிப்பிள்ளை, புத்தளம

கே: கர்ணனுடன்கொடை, கம்பனுடன் கவிதை போய் விட்டன. கோப்பாய்க் கோமானுடன்.........?

ப: தியாகம் போய்விட்டது!

ஃ

எஸ். பகபதி, காந்தியூர்

கே: தற்காலப் பெண்கள் கரை உள்ள சேலைகள் அணி [illegible] அவர்களிடம் அருகி வருவதால்.

கே: கொழும்பில் தீபாவளியின்போது திரையிடப்பட்ட திரைப் படங்களைத் தரவாரியாக வரிசைப்படுத்துங்கள்.

ப: கல்யாணப் பரிசு, பாக்கியதேவதை, மாமியார் மெச்சிய மருமகள், பாண்டித்தேவன்.

ஃ

பொ. ஆனந்தலிங்கம், கலட்டி

கே: சீன-இந்திய தகராறைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: பால் வார்த்த கையையும் பதம் பார்க்கும் பாம்பு பாம்புதான். கொம்யூனிஸ்டு கொம்யூனிஸ்டுதான் என்பதே.

ஃ

த. சுதாகரி, உரும்பராய்

கே: தாங்கள் விரும்பும் பூ எது? பழம் எது?

ப: தீபாவளியின்போது மத்தாப் பூ! எப்போதும் விரும்புவது சம்பளம்!

ஃ

மு. ஹமீத் தமனை

கே: தனி வழி போகப் பயமாயிருக்கிறதே என்ன செய்யலாம்?

ப: ஒரு மந்திரியைக் கூடக் கூட்டிக்கொண்டு போங்கள். அவரிடம் துப்பாக்கியிருக்கிறது.

ஃ

அ. பெஞ்சமின், தலைமன்னர்

கே: குளு நடேசனரின் குரல் மீண்டும் ஒலிக்கிறதே!

ப: ஆம், குளு நடேசனரின் குரல் சும்மா ஒலிக்குமா? சோழியன் குடுமி சும்மா ஆடுவதில்லையே!

ஃ

திருமதி கமலா சின்னத்துரை, கல்லடி

கே: சில ஆடவர்கள் கட்டிய மனைவி வீட்டிலிருக்க வெளியில் மேய்ந்து திரிவதேன்?

ப: வீட்டுச் சாப்பாடு நன்ருயிருந்தாலும் ஹோட்டலில் சாப்பிட்டு ருசிகண்டவர்களும் இருக்கிருர்கள் அல்லவா?

இளங்குமரன், கொழும்புத்துறை

கே: நீங்கள் 'சோப்' பாவிப்பதுண்டா?

ப: ஏன் இந்தக் கேள்வி? என் அழகின் இரகசியத்தைத் தெரிந்துகொள்வதில் உமக்கு என்ன அக்கறை? நீர் எந்த சோப்புக்கு அல்லது சீயக்காய் பவுடருக்கு ஏஜண்ட்?

கே: குயுக்தியார் ஒருவரா? அன்றிப் பலரா?

ப: அது ஒரு ஸ்தாபனம். மனேஜிங் டைரக்டர் டாக்டர் குயுக்தியார், செக்ரட்டரி திருமதி குயுக்தியார், மனேஜர் மாஸ்டர் குயுக்தியார் (வயது 6) டைபிஸ்ட் மிஸ் குயுக்தியார் (வயது 5)

ஃ

அ. பஞ்சாட்சரம், வட்டக்கச்சி

கே: யாழ்ப்பாணத்தில் பெண்கள் பஸ்ஸில் டிக்கட் பெற்றவுடன் கொண்டக்டரைப் பார்த்துச் சிரிப்பது ஏன்?

ப: அப்படிச் சிரித்தால் தானே சிற் கிடைக்கிறது!

ஃ

கே. கே. ஆறுமுகம், காரைதீவு

கே: புதிய பிரதமர் டெம்பிள் ட்ரீஸின் மதில் சுவரை உயர்த்திக் கட்டியது ஏன்?

ப: அப்போதுதான் உள்ளே நடக்கும் ஊழல் வெளியே தெரியாமல் இருக்கும் என்று அவர் கனவுகள் கண்டார். ஆனால் எதிர்க்கட்சியினரின் "எக்ஸ் ரே" கண்கள் மதில் சுவரையும் ஊடுருவிப் பாய்ந்துவிட்ட சமாச்சாரத்தை நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தின் போது நாடே கண்டுவிட்டது!

ஃ

எம். ஆர். தமிழ்ச்செல்வி, எட்டியாந்தோட்டை

கே: என் காதலர் தாம் தற்கொலை செய்துவிடுவதாக அடிக்கடி என்னிடம் சொல்லிவிடுகிருர். நான் என்ன செய்வது?

ப: ஒன்றும் செய்ய வேண்டாம். "நீர் உயிருடன் இருக்கும்வரைதான் நான் உம்முடன் இருப்பேன். நீர் தற்கொலை செய்வீரானல் நான் வேருெருவனைக் கட்டிக் கொள்வேன்" என்று கண்டிப்பாகச் சொல்லிவிடுங்கள். தன் காதலியைத் தான் இறந்த பின் கூடப் பிறர் கையில் ஒப்படைக்க எந்த உண்மைக் காதலனும் விரும்பமாட்டான். இந்த வெருட்டோடு தமது தற்கொலைப் பேச்சை விட்டொழிப்பார் உங்கள் காதலர்



## நமக்குத் தொழில் கவிதை

நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை எழுத விரும்புவோர் யாவரும் கலந்து கொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்பட வேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்கு மேல் எழுதக் கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப் பெருத அட்டைகள் கவனிக்கப்படமாட்டா.

### போட்டி இல : 10

இந்த எட்டாவது வெண்பாப் போட்டிக்கு "சிரித்தாளே அந்தச் சிலை" என்ற ஈற்றடி தரப்பட்டிருக்கிறது. இதை வைத்தே வெண்பா எழுதப்பட வேண்டும். இலக்கியச் சுவைக்கும், நகைச் சுவைக்கும், அங்கதச் சுவைக்கும் (Satire) முக்கிய மதிப்பு அளிக்கப்படும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற வெண்பாக்கள் சுதந்திரனில் வெளியாகும். மிகச் சிறந்த வெண்பாவை எழுதியவருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

—ஆசிரியர் : சுதந்திரன்.

> 'நமக்குத் தொழில் கவிதை'
> C/o ஆசிரியர்,
> சுதந்திரன்,
> த. பெ. 1183,
> கொழும்பு—12.

வெண்பாக்கள் கிடைக்க வேண்டிய முடிவு தேதி 10—11—59

"சிரித்தாளே அந்தச் சிலை"

அன்பர்களே!

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானல் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

ஸ்பேமடோன் கொம்பவுண்ட்
(Spermatone Compound)

ஒரு பிரபல ஜேர்மன் டாக்டரின் மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25
வி. பி. பி. தனி.

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,
டாக்டர்
'மோடர்ன் கிளினிக்'
(MODERN CLINIC)
255, காலி ரோட், கொழும்பு-4.
பம்பலப்பிட்டிய கன்வண்ட் எதிரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயத்தின் காரணமாகவே மதங்கள் தோன்றின என்பது அறிவியக்க வாதம்

## ஆண்டவனால் அருளப்பட்டவை அவை என்பது சமய வாதம்

## ஆத்மீகத்துக்கும் உலகாயதத்துக்கும் இடையே நடுவழி வகுக்கும் மதம் வள்ளுவம்

## இந்து வாலிபர் சங்கக் கூட்டத்தில் பேச்சு

“இளைஞரில் இருவகையினர் உளர். வயதால் இளைஞர்கள், ஆனால் உள்ளத்தால் கிழவர் ஒருவகையினர். உள்ளத்தால் இளைஞர், வயதால் கிழவர் மறுவகையினர். மனிதனுக்கு உள்ள பாலியப் பருவம், இளமைப் பருவம், கிழப் பருவம் என்ற மூன்று பருவங்களுள்ளும் இளமைப் பருவம் மிக முக்கியமானது. திறந்த வீடு போன்றது அது அந்தப் பருவத்திலே தான் பல்வேறு கருத்துக்களும் உள்ளே செல்லக் கூடிய சாத்தியக் கூறு ஏற்படுகிறது.

“இதைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு இளைஞரிடம் எந்தக் கருத்தையும் எவரும் திணிக்க முற்படக் கூடாது. ‘நான் சொல்லுகிறேன்—நீ நம்பு’ என்ற அடிப்படையில் குறிப்பாகச் சமய போதகர்கள் இளைஞர்களை அணுகக் கூடாது. இளைஞர்களின் கேள்விகளுக்கு அவர்களைத் திருப்திபடுத்தக்கூடிய விடை அளிக்க சக்தியற்றவர்கள் சமய போதனைக்கு கிளம்பவே கூடாது—” இவ்வாறு திரு. எஸ். டி. சிவநாயகம் ‘இளைஞரும் சமய வாழ்வும்’ என்ற தலைப்பில் உள்ள ‘இளைஞர்’ என்பது பற்றி கொழும்புஇந்துவாலிபர் சங்கக் கூட்டத்தில் அண்மையில் பேசியது கடந்த வாரம் விவரமாக வெளியிடப்பட்டது.

“இளைஞர்” என்பதற்கு அடுத்தபடியாக ‘சமயம்’ என்பதும் அதற்கு அடுத்தபடியாக ‘வாழ்வு’ என்பதும் தலைப்பில் உள்ளன அல்லவா? அவை பற்றியும் திரு சிவநாயகம் விரிவாகப் பேசினார்.

தமது சொந்தக் கருத்துக்களைத் தருவதற்குப் பதிலாக சமய பண்டிதர்கள் சமயச் சார்பாகச் சொல்லியவற்றையும், அதே வேளையில் வேறு அறிஞர்கள் சற்று விலகி நின்று அறிவுக் கண்ணோட்டம் செலுத்திக் கண்டறிந்து தெரிவித்திருப்பதையும் பொறுக்கு மணிகளாகப் படைப்பது தான் தமது நோக்கம் என்று திரு. சிவநாயகம் ஆரம்பத்தில் கூறிவிட்டே தமது பேச்சைத் தொடர்ந்தார்.

### சமயம் பலவிதம்

அவர் மேலும் பேசியதாவது:—

“சமயம் என்றால் என்ன?

“காரியாலயத்திலிருந்து களைத்துப் போய் வீடு திரும்பும் கணவனை மலர்ந்த முகத்தோடு எதிர் கொண்டு அழைக்கிறாள் மனைவி. அரை நொடியில் காபியும் கையுமாக அவனை அணுகிறாள். காபியை அவன் உறிஞ்சி விட்டு ஹாயாக இருக்கும் சமயம் பார்த்து தீபாவளிக்கு புதுத் தினுசு புடைவைக்கு அருக்கூட்டுவாள். அது ஒரு சமயம்.

“விடியற்காலையில் கடையைத் திறந்ததும் முதலாளி வந்துவிடுவார். அப்போது

> கடவுளுக்குக் கடிதம் அடுத்த வாரம் வெளிவரும்.

வியாபாரம் நடைபெறாது. சம்பளப்படி ஏற்றம் பற்றிப் பேசவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் தொழிலாளி அப்போது மூச்சு விடமாட்டான். மாடாக உழைப்பான். மத்தியான வேளை வந்து முதலாளியும் சாப்பிட்டுவிட்டு வெற்றிலை மடித்துப் போட்டுக் குதப்பிக் கொண்டிருக்கும் ‘குஷி’ச் சமயத்தில்தான் அந்தத் தொழிலாளி தன் பேச்சை ஆரம்பிப்பான். அது இன்னொரு வகை சமயம்.

### துப்பாக்கியால் திட்டினார்

“காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயகா பிரமுகர்களுக்கு பேட்டி அளிக்கும் சமயம் பார்த்து அங்கு போய் அக்கம் பக்கம் கண்ணோட்டம் செலுத்திவிட்டு அவருக்கு துப்பாக்கியால் திட்டினாராமே பிக்கு ஒருவர்—அது பிறிதொரு வகை சமயம்.

“அதிகம் ஏன்? தமிழ்த் தலைவர் திரு வன்னியசிங்கம் அமரராகிவிட்டார். இருக்கு மட்டும் இருந்துவிட்டு இந்தச் சமயம்பார்த்து கிளம்பியிருக்கிறார்கள் சில திடீர் பேர்வழிகள். அரசியல் வாதிகளாக வரப்போகிறார்களாம். மக்களுக்கு தொண்டு செய்யத் தாம் தயாராம். அதற்காக கோப்பாய்த் தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடப் போகிறார்களாம். விளம்பரம் செய்கிறார்கள். இதுவும் சமயம் தான்.

### தொடர்பும் சம்பந்தமும்

“ஆனால் நாம் இங்கு பேச்சுக்கு எடுத்துக்கொண்ட சமயம் இவற்றுள் எந்த ஒன்றுமல்ல. அது வேறு வகையானது. நாம் அறிந்த மட்டில் இதுதான் சமயம்: மனிதனுக்கும் தெய்வத்துக்குமுள்ள தொடர்பு இருக்கிறதே, அது சமயம். மற்றும், மனிதனுக்கும் [illegible] சம்பந்தம் [illegible] தான்.

“பௌத்த மதம் இரண்டாவது வகையைச் சேர்ந்தது. கடவுளுக்கு அதில் இடமில்லை. இப்போது உள்ள பௌத்தர்கள் சிலர் கடவுளை அந்த மதத்தோடுதொடர்புபடுத்துவது விந்தை.

“பௌத்தம் தவிர்ந்த ஏனைய சைவம், கிறிஸ்தவம், இஸ்லாம் முதலான மதங்கள் முதலாவது ரகத்தைச் சேர்ந்தவை. கடவுள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவை. கடவுளால் அருளப்பட்ட விஷயங்கள் அவரது தூதுவர்கள், தீர்க்கதரிசிகள், முனிவர்கள், அடியார்கள், அன்பர்கள் மூலமாக மக்களுக்கு வழிவழியாக வழங்கப்படுகின்றன என்ற நம்பிக்கை இந்த மதங்களிலே இழையோடி நிற்கிறது.

### சமயத்தில் உண்மையுண்டு

நம்பிக்கையின் அடிப்படையிலே எழுந்த புனிதமான மதங்களை மக்கள் சமுதாயம் பின்பற்றி ஒழுகுவது தவறானது என்று யாரும் சொல்ல முடியாது. உண்மையான கடவுள் பற்றும் உண்மையான பக்தியும் ஏற்பட முடியுமானால் அது மனிதனைத் தவறான காரியங்களைச் செய்ய விடாமல்தடுத்துஆட் கொள்ளும் என்ற தத்துவத்திலேயே மத போதனைகள் ஆண்டு ஆண்டுக் காலமாக நடைபெற்று வந்திருக்கின்றன. இப்படி சமய தத்துவ வேதாந்திகள் சமயத்தின் அவசியத்துக்கும், சமயத்தால் விளையக்கூடிய அரிய பெறு பேறுகளுக்கும் ஆதாரம் காட்டுகிறார்கள். இவற்றில் உண்மை எதுவும்இல்லை என்று முற்றாக விலக்கிவிட முடியாது.

### எப்படித் தோன்றியது?

“மதம் என்கிறோமே அது எப்படி தோன்றியது? ‘நம்பிக்கை என்பது பின்னால் புகுத்தப்பட்டது. பயத்தாலேதான் மதம் ஏற்பட்டது’ என்கிறார்கள் அறிஞர்கள் வெல்ஸ் (Wells), நேரு போன்றோர் இப்படித்தான் கூறுகிறார்கள்.

“பிரதமர் நேரு சாமான்யமான மனிதர் அல்ல. இந்தியாவின் முடிசூடா மன்னர் என்று அழைக்கப்படுகிறார். மகாத்மா காந்தியின் வாரிசு அவர். காந்தி இருந்தபோது அவரிடம் இருந்த கருத்துத் தான் இப்போதும் அவரிடம் இருக்கின்றன. மாற்றம் இல்லை.

“Glimpses of World History என்ற நூலிலே பிரதமர் நேரு சொல்லுகிறார் கடவுள் கொள்கை-மத நம்பிக்கை எப்படித்தோன்றியதென்று.

### நதிக்கரை வாழ்க்கை

ஆதி மனிதர் விலங்கொடு விலங்குகளாகக் காடுகளில் வாழ்ந்த காலகட்டம் போன பிறகு புதிய வாழ்க்கைஆரம்பித்தார்கள். காடுகளில் இருந்து பச்சை இறைச்சியும் கனிகளும் கிழங்குகளும் உண்டவர்கள் பயிர் செய்து உண்டு வாழ விழைந்தார்கள். ஆடு மாடுகளை வைத்து வளர்ப்பதும் பயன்படும் என்று உணர்ந்தார்கள். ஆகவே காடுகளை விட்டு கழனிகளை அவர்கள் நாடிச் சென்றார்கள். நதிக்கரை ஓரங்களிலும் தங்கியிருந்தார்கள்.

“ஆபிரிக்காவில் உள்ள நைல் நதியும் அதன் ஓரங்களில் ஆதி காலத்தில் வாழ்ந்த மனிதரும் சரித்திரப் பிரசித்தமடைந்திருப்பது தெரிந்ததே. நைல் நதியிலே நடந்தது ஒரு சம்பவம் அதாவது அந்த நதி ஓரத்திலே வாழ்ந்தவர்கள் அதற்கு முன்னா அறியாத நிகழ்ச்சி ஒன்று. என்ன தெரியுமா? திடீரென்று ஒருநாள் நதி பெருக்கெடுத்தது. மழை இல்லை; மப்பு இல்லை. ஆயினும் நதியிலே வெள்ளம் பிரவகித்தது. கரையோரப் பகுதிகளை விழுங்கிவிடுவது போன்ற ஆவேசத்தோடு எழுந்து பாய்ந்த வெள்ளப் பிரவாகத்தைக் கண்டவர் பயந்து போனார்கள்.

### அறிவுக்குப் புலனாகவில்லை

“ஏன் வெள்ளம் ஏற்பட்டது என்பது அவர்களுடைய அறிவுக்குப் புலனாகவில்லை. தமக்கு வாழ்வளித்துவந்த நதி குமுறக் காரணம் அறியும் திறன் அவர்களுக்கு இருக்கவில்லை. ஆளுக்காள் வெவ்வேறான அபிப்பிராயங்களைத் தெரிவித்தார்கள் சமூகத்திலே பெரியவர் என்ற மதிப்போடு இருந்தவர் ஒரு பொன் மொழி உதிர்த்தார். அதாவது ‘நதி கோபம் கொண்டுவிட்டது. பலி கேட்கிறது. கொடுத்தால்தான் அது அடங்கும். ‘நதி தேவதை’யின் கோபத்துக்கு சாந்தி செய்ய வேண்டும். இல்லையேல் நமக்கெல்லாம் நாசந்தான்’ என்று அந்தப் பெரியவர் நிதானமாகச் சொன்னார். எல்லோரும் நம்பி விட்டார்கள்.

### நதி தேவதை கொண்ட பலி

“சில குழந்தைகளைக் கதறக் கதற நதியில் போட்டார்கள். ‘நதி தேவதைக்கு பலி கொடுத்துவிட்டோம்’ இனி ஆபத்து இல்லை.அடங்கிவிடுவாள் என்றும் நம்பினார்கள். அவர்கள் அப்படி எண்ணியதற்கும் நதியில் சேர்ந்த வெள்ளம் வடிந்து முடிந்ததற்கும் சரியாக இருந்தது. அவர்கள் வாழ்ந்த சுமார் 2000 மைல்களுக்கப்பாலுள்ள அபிசீனிய பீடபூமிப் பிராந்தியத்தில் பெய்த மழை அடங்க, நதியில் சேர்ந்த வெள்ளமும் வடியத்தானே செய்யும். அப்படி இயற்கையாக வெள்ளம் வடிந்ததைக் கண்ட மக்கள் அந்த உண்மையை உணராமல் தாம் பலி கொடுத்ததாலேயே ‘நதி தேவதை’ அடங்கினாள் என்று நம்பிக் கொண்டார்கள். இதனால் ‘நதி தேவதை’ என்று ஒரு தெய்வமே உற்பத்தி செய்யப்பட்டு விட்டது. பயம் தான் அதற்கு மூலகாரணம் என்பதும் அறியாமையும் அதற்கு வழி கோலியது என்பதும் தெரிகிறதல்லவா?

### வேறு கடவுள்கள்

‘தண்ணிருக்குக் கடவுளை உற்பத்தி செய்த மனிதன் நெருப்புக்கும் அப்படியே செய்தான். காட்டிலே மூங்கில் அடர்த்தியாக வளர்ந்திருக்கும். மூங்கில் ஒன்றோடொன்று உராஞ்சும்போது தீ உண்டாகும். காடே பற்றி எரியும். இது நமக்கெல்லாம் இப்போது தெரியும். இந்த உண்மையை முற்கால மனிதன் அறியவில்லை அவனுக்கு அதற்கான அறிவு இருக்கவில்லை. மூங்கில் ஒன்றோடொன்று உராஞ்சித் தீப்பிடித்தபோதெல்லாம் அதை அக்கினிக் கடவுள் என்று கொண்டான். எரிமலை தீப்பிழம்பைக் கக்கும்போதும் அதன் உண்மைக் காரணத்தை அறியாது பூமிதேவி—மலைமகள் கோபங்கொண்டு நெருப்பைக் கக்குவதாக நம்பினான்.

“இடி முழக்கம் கேட்கிறதே! அதைக் கடவுளின் சீற்றம் என்றும் உறுமல் சத்தம் என்றும் ஆதிகால மனிதன் நம்பினான். நமக்கல்லவோ இப்பொழுது தெரிகிறது ஏன் மின்னல் முழக்கம் எல்லாம் ஏற்படுகின்றன என்று. பழங்கால மனிதனுக்கு எந்த ஒன்று அச்சமூட்டியதோ அதைக் கடவுளோடு சம்பந்

(5-ம் பக்கம் பார்க்க)

மௌலானா

அச்சடித்த சீத்தைகள்



ரமணீகரமாக காட்சியளிக்க

இன்றே தெரிவு செய்யுங்கள்

★ கண்ணைக் கவரும் டிசைன்கள்
★ சாயம் மங்காதவை
★ நீடிய உழைப்பு
★ தரத்தில் உயர்வானது

விசேஷமாக வரவழைக்கப்பட்டிருக்கும், புத்தம் புதிய டிசைன்களை, தெரிவு செய்ய இன்றே விஜயம் செய்யுங்கள்.

மௌலானா (சிலோன்) லிமிட்.

கொழும்பு. மருதானை. கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னைக் கடிதம்

## கேரளத் தேர்தல்

—சென்னை நவம்பர் 4

கேரளத்தில் அணிமையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு கொம்யுனிஸ்டுக்களை எதிர்க்க, காங்கிரஸ், பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, புரட்சிவாத சோஷலிஸ்ட் கட்சி, முஸ்லிம் லீக் ஆகியன ஒரே முகாம் அமைக்கின்றன. கேரள கொம்யுனிஸ ஆட்சியை எதிர்த்து நின்றவர்களுள் முதன்மையானவரான மன்னத் பத்மநாதன் என்பவருடைய தலைமையிலுள்ள விமோசன சமார சமித்தி என்றஸ்தாபனத்துக்கும் மேற்படி கூட்டணி அழைப்பு விடுத்துள்ளது. தேர்தல் கூட்டணி பலமுறை பல இடங்களில் கூடி வெவ்வேறு ஸ்தானங்களுக்குரிய போட்டியிடும் கட்சி விவரங்களைப் பரிசிலனை செய்து கொண்டுள்ளது. இதுவரை வெளியாகியுள்ள விவரங்களுள் பிரஜா சோஷலிஸ்ட் கட்சிக்கு 35 ஸ்தானங்களும் முஸ்லிம் லீக்கிற்கு 12 ஸ்தானங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## துண்டுபோடும் பாதையில் கொம்யுனிஸ்டுகள்

தேர்தல் சம்பந்தமாக கேரள கொம்யுனிஸ்ட் கட்சி வெளியிட்டுள்ள பிரகடனத்தில் "வடநாட்டு ஆதிக்கம் அத்துமீறியதாக விருக்கின்றது, அவர்களின் போக்கு கோள்மூட்டும் முறையாகவுமுள்ளது" என்று வர்ணித்துள்ளது.

அப்பிரகடனம் மேலும் கூறுவதாவது:- மாகாண ஆட்சியென்பது கேலிக் கூத்தாகவுள்ளது. மாகாணங்கள் தங்களுக்காகவே சட்டமியற்ற வழிவகைகளிருந்த போதும், சட்டங்களின் ஆக்கம் யாவும் மேலிடமான டில்லியில் குவிந்துள்ளது. மாகாண நலனுக்காக எந்த நன்மையையும் உண்டாக்கவல்ல எந்தச் சட்டத்தையும் டில்லி சர்க்கார் தனது தலையீட்டால் முறியடித்து விடுகிறது. மாகாணங்களுக்கான வருமானத் துறைகளிலும் மத்திய சர்க்கார் போதுமான அக்கறை கொண்டுள்ளதாகத் தெரியவில்லை"—பிரகடனத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## சென்னை மேயர்

சென்னை மாநகராட்சி மன்றத்தின் புதிய மேயர் தெரிவு செய்யும் காலம் இப்போது நெருங்கிக் கொண்டிருக்கின்றது. முன் காலங்களில் எல்லா முக்கிய துறைகளின் நிர்வாகமும் பார்ப்பனர்கள் கையிலிருந்து வந்ததால், முன்னேற்றம் யாவும் அவர்கள் மத்தியில் தான் இருந்தது. அதை மாற்றி பின் தங்கிய வகுப்பாருக்கும் நல் வாய்ப்புக்கள் அளிக்க வேண்டுமென்ற நியதி ஏற்பட்டதனால், ஒவ்வோர் வருடமும் ஒவ்வொரு புதிய மேயர் தெரிவு செய்ய வேண்டிய நிலைமை மாநகராட்சி மன்றத்துக்கு ஏற்பட்டுள்ளது

சுதந்திரன் சென்னை நிருபர்

ஈழத்தரசன்

தற்போதுள்ள சபையில் அதிகமான ஸ்தானங்களைப் பெற்றது தி. மு. க.; தி மு. கவைச் சேர்ந்த அ. பொ. அரசு மேயராகவும், பி. சிவசங்கரன் துணை மேயராகவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

மேயர் பதவி காலம் முடிவடைவதால் மேயர், துணை மேயர் ஆகியோருக்கான ஓர் பாராட்டுத் தீர்மானம் சென்னை மாநகராட்சி மன்றத்தில் கொண்டுவரப்பட்டதும், காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். அணிமையில் நடைபெற்ற இந்திய சுதந்திர தினவிழாவில் மேயர் நடந்துகொண்ட முறை தவறு என்பதை சுட்டிக் காட்டி, அதன் நிமித்தமே தாங்கள் வெளியேறியதாக காங்கிரஸ் உறுப்பினர்கள் பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிட்டனர்.

## சுதந்திரக் கட்சி மாநாடு

சுதந்திரக் கட்சி மாநாடு சென்னை. எஸ் ஐ ஐ ஏ. (S. I. I. A.) மைதானத்தில் 31-10-59 சனிக்கிழமை நடைபெற்றது. மாநாட்டில் 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

"இலங்கையில் வசிக்கும் தென்னகத்தைச் சேர்ந்த தமிழர்கள் இலங்கையின் நல்வாழ்வுக்காக அயராது பாடுபட்டவர்கள். இன்று அவர்கள் எத்தனையோ அல்லல்களுக்குட்பட்டுள்ளனர். இலங்கை நாட்டையே தாயகமாகக் கொண்டு இந்தியாவையே கண்ணுல் காணாத எத்தனையோ பேர் அங்குள்ளார்கள். இவர்களுக்கெல்லாம் பிரஜா உரிமையும், மற்றும் ஏனைய உரிமைகளும் உடனடியாக வழங்க வேண்டும். சிறுபான்மையாகவுள்ள மற்றும் ஏனைய சமூகத்தவர்களையும் மதித்து அவர்களுக்கான உரிமைகளையும் வழங்க இலங்கை சர்க்கார் முன்வர வேண்டும். இலங்கை சர்க்காரை இத்துறையில் முயற்சி எடுக்க வைக்க இந்திய சர்க்கார் வற்புறுத்த வேண்டும்" என்றுள்ள ஒரு தீர்மானத்தை ஜனுப் பிஜாப்பூரி பிரேரித்தார். இப் பிரேரணையைப் பிரேரிக்கையில், இலங்கையில் 1958-ல் நடைபெற்ற கலவரத்தின்போது தமிழ் மக்கள் பட்ட எண்ணற்ற இன்னல்களை எடுத்துக் கூறினர்.

### அதர்மத்தைப் பரப்பும் காங்கிரஸ்

மாநாட்டைத்தொடர்ந்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ராஜாஜி பேசினர். அவர் பேசுகையில் "காங்கிரஸ் அதர்மத்தை வளர்க்கிறது. தனியார்களின் தனிப்பட்ட விடயங்களிளெல்லாம் தலையிட்டு, வேண்டாத வேதனைகளை விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறது. தேர்தல் காலங்களிலெல்லாம் ஓட்டுச் சேகரிக்கையில் இல்லாதது பொல்லாதது யாவற்றையும் கூறி மக்களின் மனதைப் புண்படுத்துகின்றது.

"காங்கிரஸ் மெல்லமெல்ல கொம்யுனிஸப் போர்வைக்குள் போய்கொண்டிருக்கிறது. நேரு ஒரு சர்வாதிகாரியாக மாறி வருகிறர் இப்போக்கு ஒரு வருத்தம்போல் தோற்றி வருகின்றது. இப்பேற்பட்ட வருத்தத்தைத் தடுப்பதற்கான மருந்து தான் சுதந்திரக் கட்சி" என்று கூறினர்.

பொதுக் கூட்டத்துக்கு டாக்டர் எம். சந்தோஷம் தலைமைவகித்தார். எம். ஆர். மசானி, என். ஜி ரங்கா, எஸ் எஸ். மாரிசாமி ஆகியோரும் பேசினர்கள். ஏறத்தாழ 10,000 பேர் கலந்து கொண்டனர்.

வீரமா முனிவர் எழுதிய தேம்பாவணிக்கும் கம்பரின் இராமாயணத்திற்கும் உள்ள ஒற்றுமையை அவர் சில பாக்களின் மூலம் விளக்கினர். திரு கிருஷ்ணபிள்ளை எழுதிய 'இரட்சணிய யாத்திரிகை' என்னும் நூலிலிருந்து சில பாட்டுக்களையும் வேதநாயக சாஸ்திரியாரின் சில பாடல்களையும் விரிவுரையாகப் படித்துக் காட்டி சொல்நயத்தை விளக்கினர்.

கடைசியாக அவர் இக்காலத்தில் தமிழுக்குத் தொண்டு புரியும் கிறிஸ்தவர்களிற் சிலரைக் குறிப்பிட்டு சபையோரைத் தமிழை வளர்க்க முயற்சிக்குமாறு வேண்டிக்கொண்டார். சபையாரிற் சிலர் இலக்கியம் சம்பந்தமாகக் கேட்ட கேள்விகளுக்கு ஏற்ற பதில்கள் அளிக்கப்பட்டன.


# "ஆஸ்த்மா"வைப் பற்றிய உண்மைகள்

ஆஸ்த்மா என்ற தொய்வு ஒரு பயங்கரமான வியாதியாகும். நரம்புத்தளர்ச்சி, காலநிலை, மூக்கடைப்பு மார்பில் ஏற்படும் சளி, வயிற்றுக்கோளாறுகள் ஆகிய பல காரணங்களால் ஆஸ்த்மா, என்ற தொய்வு ஏற்படுகிறது.

பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு வியாதியைப் பூர்ணமாகக் குணமாக்கக் கூடிய "ஆஸ்தமடிக்கா" என்ற அற்புதமான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம் மருந்தின் பெருமையைப்பற்றி நூற்றுக்கணக்கான கடிதங்கள் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள்-நன்றிக் கடிதங்கள் எழுதிய தமிழன்பர்கள் யாவருக்கும் நம் நன்றி—இன்னும் சில கடிதங்கள்.

(1) டாக்டர்,

எனக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி "ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் பாவித்ததில் பூர்ண குணம்.

என் அன்பு நன்றி.

திரு. S. S. றமீது
C/o திரு. K. அப்துல் வஹாப்
(மட்டக்களப்பு பகுதிக்கு அரசாங்க கண்டிராக்டர்
11, பவுன்டரி ரோட் (BOUNDRY ROAD.) மட்டக்களப்பு)

(2) எனது மனைவிக்கு 15 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, பூர்ணசுகம் நன் நன்றி.

திரு. இ. சரவணமுத்து
பிரதம அதிகாரி
வி. சி. ஆபீஸ் பக்கியல்ல (களுவாஞ்சிக்குடி)
களுவாஞ்சிக்குடி (EP)

ஒரு பாட்டில் ஆஸ்த்மடிக்காவில் எனக்கிருந்த ஆஸ்த்மா என்ற தொய்வு பூர்ணசுகம்.

வணக்கம்
திரு. அ. ஆனந்தலிங்கம்
ரூப்பியன் தோட்டம், கம்பர்மலை
வெள்வெட்டித்துறை

அன்பர்களே அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த "ஆஸ்தமடிக்கா" என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம். ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

"ஆஸ்த்மடிக்கா"
(ஒரு நவீன சஞ்சீவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல்—ரூ. 15/-
மிக உபாதை தரக்கூடிய நாள் பட்ட ஆஸ்த்மாவுக்கு)
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-

வி. பி. பி. சதம் -/85

விபரங்களுக்கு

டாக்டர்.

# சுக ஆதார வைத்தியசாலை

MODERN CLINIC
255, காலி ரோட், பம்பலப்பிட்டிய
கன்வன்ட் எதிரில்
கொழும்பு-4.


# விக்கிரக ஆராதனையும் சாதி வேற்றுமைகளும்

## 1962 க்குள் இந்தியாவிலிருந்து ஒழிந்து விடுமாம்!

### வெள்ளவத்தை கூட்டத்தில் பேச்சு

விக்கிரக ஆதாரனை இந்தியாவிலிருந்து விரைவில் நீங்கி விடுமென்றும் சாதி வேற்றுமைகள் சட்ட முறையில் 1962-ம் ஆண்டுக்குப் பின் அகன்று விடும் என்றும் தென்னிந்திய திருச்சபையின் அத்தியட்சகர்களில் ஒருவராகிய கனம் ஐ. ஆர் எச். ஞானதாசன் எம். ஏ. பீ.ஈ. கூறினர்.

'நவ இந்தியாவும் சமயமும' என்ற பொருள் பற்றி கனம் ஞானதாசன் கடந்த இரண்டாந் தேதி வெள்ளவத்தை பரி இனேயர் கல்லூரி மண்டபத்தில் திரு. பி டபிள்யு. தம்பிராசா தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசினர்.

### முன்னேற்றம்

அவர் மேலும் பேசுகையில் நவ இந்தியா என்பது சுதந்திர இந்தியா, அதாவது 1947-ம் ஆண்டுக்குப்பின் உருவாகி வரும் இந்தியா என்பதைக் குறிப்பிட்டு அங்கே இக்காலத்தில பற்பல சமயங்களும் தனித்தனி முறையில் மறுமலர்ச்சியடைந்து வருவதை விரித்துரைத்தார். இந்தியாவில் சமூக பொருளாதார அரசியற் துறைகளிலும் இறங்கி அங்காங்கு ஆக்கம் பெறும் பல்வேறு முன்னேற்றத் திட்டங்களையும் இந்தியப் பிரதமரின் பஞ்சசீலக் கொள்கைகளையும் விளக்கினர்.

### உரைநடை

அடுத்து வணக்கத்துக்குரிய டீ ஆர். அம்பலவாணர் எம். ஏ பீ. டீ. 'கிறிஸ்தவர்களின் தமிழ்த் தொண்டு' என்ற பொருள் பற்றி ஓர் ஆராய்ச்சி விரிவுரை நிகழ்த்தினர். அவர் பொதுவாக [illegible] தமிழில் உரை நடையைத் தொடங்கினர் என்று கருதப்பட்ட பொழுதிலும் அதற்குமுன் இருவர் உரைநடையை உபயோகித்ததற்குப் பாரிஸ் நகரத்தில் சான்றுகள் உண்டென்றுகூறினர்.

# பயத்தின் காரணமாகவே...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்படுத்தி அந்தப் பிரச்னைக்கு அவன் முற்றுப்புள்ளி வைத்தான். மேற்கொண்டு சிந்திக்கவில்லை; அவனால் சிந்திக்க முடியவும் இல்லை.

### பாம்புக் கடவுள்

"பழங்கால மனிதன் ஐந்து பூதங்கள் என்று சொல்லப்படும் நீர், நிலம், நெருப்பு, காற்று, வானம் எல்லாவற்றையும் கடவுளாக்கினன். அத்தோடு அவன் நின்றுவிடவில்லை. தனக்கு தீங்கு விளைவிக்கக்கூடியவற்றையும் அந்தத் தீங்கை தவிர்க்க பயன்பட்டவற்றையும்கூடக் கடவுளாக்கினன்.

"ஆதி மனிதன் பாம்பைக் கடவுளாககியதும் அதற்கு ஐந்து தலைகள் உண்டு என்று கற்பித்ததும் ரஸமான சம்பவங்களாகும். காட்டிலே பாம்புகள் அதிகம் அல்லவா. ஒருவனை ஒரு பாம்பு எதிர்பாராதவிதமாகத் தீண்டிவிட்டது. அவன் இறந்துவிட்டான் இதை ஒருவன் பார்த்துக்கொண்டான. ஐயகோ என்று அலறித் துடித்தான். மற்றவர்களுக்கு நடந்ததைச் சொல்ல விரைந்தான் நடுக்கத்தால் வாய் திறக்க முடியாதுபோயிற்று. பாம்பு படமெடுத்து நின்றதையும் லபக் என்று தீண்டியதையும் கை சைகைமூலம் காட்டினன். எப்படி? ஐந்து விரல்களையும் கூட்டிச் சிறிது நெளித்து, தூக்கிய கையை இலேசாக ஆட்டிக் காட்டினன் இதை ஆக முதலில் வந்தவர்கள் பார்த்தார்கள் பாமபு தீண்டிவிட்டது என்பதை அதனுல் உணர்ந்தார்கள்"

### ஐந்து தலை வந்த விதம்

"பின்னர் இன்னும் சிலர் வந்தார்கள். அப்போ அவர்களுக்கும் விஷயத்தைத் தெரிவிக்க வேண்டியிருந்தது. அந்த நேரத்தில் அவனுடைய நடுக்கம் சிறிது குறைந்துபோயிற்று. பதட்டமும் முன்போல் இல்லை. ஆயினும் வாய்ப்பேச்சு முடியவில்லை, சைகைதான் காட்டினன். ஆனல் அதில் சிறு மாறுபாடு. முன்பு குவிந்திருந்த விரல்கள் ஐந்தும் இப்போது விரிந்திருந்த

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்
G. C. E.

101 வினு விடை

பரீட்சையில் சித்தி தலைவிதியைப் பொறுததல்ல. வினுக்களுக்கு ஏற்ற விடை எழுதுவதில் தங்கியுள்ளது. பரீட்சைக்கு விடை எழுதும் முறைகளுடன் கூடிய புத்தகங்கள் உங்கட்கும் சித்தியைத் தர வல்லன.

* தமிழ்ப் பாஷை ரூ. 3-00
* எண் கணிதம் ரூ. 3-00
* குடியியல் ரூ. 3.00
* சரித்திரம் ரூ. 3-00
* பூமிசாஸ்திரம் ரூ. 3-00
* சுகாதாரம ரூ. 3-00
* ஆங்கிலம் ரூ. 3-00
* பயிற்சிச் சிங்களம் ரூ 3-00
* றேமன் கத்தோலிக்கம் ரூ. 3-00
* இந்து சமயம் ரூ. 3-00
* இஸ்லாம் ரூ. 3-00

பரீட்சை
துணை நூல்கள்

கடந்தகால
வினு விடைகள்

பரீட்சை வினுக்களை அறிந்து விடைகளைப் படிப்பது சிறந்த பாடாயத்தமாகும். மாதிரி வினுவிடைகள் சித்திக்கு வழிகாட்டும்.

* தமிழ்ப் பாஷை ரூ 3-00
* எண் கணிதம் ரூ. 3-00
* குடியியல் ரூ 3-00
* சரித்திரம் ரூ 3-00
* பூமிசாஸ்திரம் ரூ 3-00
* சுகாதாரம் ரூ. 300
* ஆங்கிலம் ரூ 3-00
* பயிற்சிச் சிங்களம் ரூ 3-00
* றேமன் கத்தோலிக்கம் ரூ. 3-00
* இந்து சமயம் ரூ. 3-00
* இஸ்லாம் ரூ. 3·00

வி. பி. பி. கிடையாது
தபாற்செலவு 35 சதம்

விபரங்கட்கு:
அற்லஸ் ஹோல்,
723 மருதானைரோட் கொழும்பு

# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

தமிழியக்கத் தொண்டர்கள் ஆர்வத்துடன் பல துறைகளிலே பணியாற்றுகிறார்கள். தங்களுடைய கருத்துக்களையும் தங்கள் பணிக்கு உண்டாகும் இடையூறுகளையும் பற்றி எழுதியனுப்பியுளர். "கவலைக்குவிதியிலுள்ள உப தபாற்கந்தோரில் தமிழில் எழுதியதாகக் கட்டளை விண்ணப்பத்தை ஏற்க மறுத்துவிட்டார்" என்று வெள்ளவத்தைத் தொண்டர் ஒருவர் அறிவித்திருக்கிறார். இப்பொழுதுள்ள சட்டப்படி இலங்கையின் எந்தப் பகுதியிலும் தமிழ் சிங்களம் ஆங்கிலம் எனும் மொழிகளிற் கொடுக்கப்படும் (தந்திதவிர) எதனையும் தபாற் கந்தோர்கள் ஏற்பதற்கு மறுக்கமுடியாது. தொண்டர்கள் இதனைச் சுட்டிக்காட்டி வற்புறுத்துதல் வேண்டும். இம் மாதிரி மறுக்கும் தபாற் கந்தோர்களைப் பற்றித் தபாற் பகுதித் தலைவருக்கு அறிவித்தலும்வேண்டும். தமிழர்கள் யாவருமே தங்கருமங்களைத் தமிழிலே செய்துவந்தால் இந் நிலைமை உண்டாகாது.

## அன்பர் கடிதம்

தமிழ் மாகாணங்களிலே கூடத் தமிழர் இன்னும் தமிழிலே கருமங்களைச் செய்யாதிருப்பதாற் பின்னர் பல கேடுகள் உண்டாகும் என்பதை யாவரும் உணர்தல் வேண்டும். தமிழியக்கத் தொண்டராகச் சேர்ந்த அன்பர் ஒருவரின் தமிழ்ப் பற்றையும் அருந் தொண்டையும் அவர் எழுதிய கடிதம் நன்கு காட்டுகிறது.

"நான் இதுவரை தமிழியக்கத் தொண்டருக்குச் சேராவிட்டாலும், தங்கள் குறிக்கோளுக்காகப் பல துன்பங்களுக்கிடையே இடையறாது இயன்ற அளவு உழைத்து வருகிறேன்.

## திருந்திவிட்டேன்

"முன்பெல்லாம், ஆங்கிலத்திலே கையொப்பமிட்டேன்; முகவரி எழுதினேன்; காசுக்கட்டளை முதலாய விண்ணப்பத்தாள்களை ஆங்கிலத்தில் நிரப்பி எழுதினேன். கழனியிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. என் செயலிலே தமிழ் மணம் கமழ்ந்தது. அன்று முதல், தமிழிலே கையொப்பமிடுகிறேன்; முகவரிகள் எழுதுகிறேன்; நண்பர் சிலரையும், பன்முறை இடித்துரைத்து, வெற்றியும் கண்டுகொண்டு வருகிறேன். தமிழ் முகவரியுடன் எனக்கு வரும் கடிதங்களுட் சில, தவறிவிடுவதுண்டு; சில, பிந்திக்கிடைக்கும்; ஒழுங்காகக் கிடைப்பன பெரும்பாலன. பிந்தியோ, தவறியோ போனுல், வாளாவிரேன். அஞ்சற்றுறை முதல்வருக்கு முறையிடுவேன்; மறுமொழி ஒழுங்காகக் கிடைக்காது; விடமாட்டேன், மீட்டும் மீட்டும் எழுதி, விசாரணை நடத்தச் செய்வேன்; வேதனைப்படுவதாக மறுமொழி கிடைக்கும் கடிதங்கள் ஒழுங்காகக் கிடைக்கவும் வழி பிறக்கும்.

## தமிழ் பரவும் வகை செய்ய...

"இங்கே, பக்கத்திலே, ஆங்கிலத்தில் தந்தி அனுப்பக் கூடிய வசதியுண்டு. 2½ கல் தொலைவிலுள்ள நுவரெலி சென்று, தமிழில் தந்தி அனுப்புவேன். கொழும்பிலுள்ள வணிகக் குழுக்கள் சில, தாம் விற்கும் பொருள்கள் பற்றிய விளக்க வெளியீடுகளுக்கு எழுதும்படி செய்தித் தாள்களில் விளம்பரஞ் செய்வதுண்டு; அதற்காகத் தமிழிலே எழுதித் தமிழிலே முகவரியிட்டு அனுப்புவேன்; தமிழ் விளக்க வெளியீடுகளும் கிடைத்திருக்கின்றன; ஆங்கில வெளியீடுகளுடன், தமிழிலே விளக்கக் கடிதமும் வந்திருக்கின்றன. இந்த வெளியீடுகளால் எனக்கொரு பயனுமில்லாதபோதிலும், "தமிழ் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்பதற்காகவே, இங்ஙனம் செய்து வந்திருக்கிறேன்." இப்படிக் கடிதத்தில் எழுதியிருக்கிறார்.

## தாமதத்தை பொறுக்க வேண்டும்

இந்த அன்பரைப்போல ஆயிரக்கணக்காரேர் முயன்றால் தமிழியக்கம் எங்கும் பரவி நிலைத்து நாம் விரும்பும் பயனை நல்கும். தமிழிலே முகவரியிடப்படுங் கடிதங்கள் இப்பொழுது பிந்தாமற் கிடைக்கின்றன எனப் பல தொண்டர்கள் அறிவித்திருக்கிறார்கள். சிறிது பிந்தினாலும் அதைத் தமிழ்ப் பற்றும் தமிழ் உணர்ச்சியுமுடையவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள். இந்தச் சிறு தியாகத்தைத் தானும் தமிழுக்காக நாம் செய்ய வேண்டாமா?

## தமிழில் தந்தி

தமிழில் தந்தி அனுப்புதற்கு வசதியுள்ள தபாற்கந்தோர்களிலேயுள்ள தமிழ் உத்தியோகத்தர்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? "தமிழரில் 99 வீதமானேர் ஆங்கிலத்தில் தந்தியை அனுப்புவதாலே எமக்குத் தமிழிலே தந்தி அனுப்பும் வேலை இல்லாமற் போய்விட்டது. இதனுல் வேறு வேலை செய்யவேண்டியிருக்கிறது. சிங்களத்திலே தந்தி அனுப்புதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு வேலை கூடுகிறது. இதனுல், சிங்கள உத்தியோகத்தர்களைக் கூட்ட வேண்டியிருக்கிறது" என்கிறார்கள் அவர்கள். இதைத் தமிழர் ஒவ்வொருவரும் கவனித்து இனி யாவாகுதல் தந்திகளைத் தமி[illegible] தொண்டர்கள் கருத்தாகக் கடமையாற்றல் வேண்டும்.

## சங்கத் தீர்மானம்

தமிழியக்கம் விடுத்த வேண்டுகோளைப் பொருட்படுத்திப் பல சங்கங்கள் தமிழியக்கத்தை ஆதரிக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றியுள.

இளந் தமிழர் இயக்கத்தின் அரியாலைக் கிளை நிறைவேற்றிய தீர்மானத்தைக் கீழே காண்க.

"தமிழர் நிலையை இலங்கையில் தாழ்த்த எண்ணும் சக்திகளை முறியடித்து தமிழின் உயர் நிலைக்காகப் போராடுவதற்காக எழுந்துள்ள தமிழியக்கத்தை நாங்கள் இதயபூர்வமாக ஏற்று அதற்குரிய தொண்டர்களை தமிழர் வாழுமிடங்களிலிருந்தெல்லாம் சேர்ப்பதற்கு உழைப்போம். இவ்வியக்கம் வளர்வதற்கு எங்கள் பூரண ஒத்துழைப்பு என்றுமே இருக்கும். எங்கள் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தமிழியக்கத்தில் சேர்ந்துழைப்பார்கள் என மகிழ்வுடன் அறியத்தருகிறோம்."

இத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியது மட்டுமின்றி இக் கிளையின் செயலாளர் திரு சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஐந்து பேரைத் தமிழியக்கத் தொண்டர்களாகவுஞ் சேர்த்து உதவியுளர் மேலும் சேர்ப்பதாக உறுதி கூறியுமுளர்.

## பாடசாலை மாணவி

கொக்குவில் ஞானபண்டித வித்யாசாலை மாணவி செல்வி க. பாலசரசுவதி நாலு மாணவிகளைத் தமிழியக்கத் தொண்டர்களாகச் சேர்த்திருக்கிறார் மாணவர்களுக்கு மட்டுமின்றித் தமிழ்ப் பெண்களுக்கும் இவர் வழிகாட்டியாக விளங்குகிறார். தமிழியக்கத்திலே சேருவதற்குப் பெண்கள் பலர் முன்வரல் வேண்டும்; ஆண்களுடன் போட்டியிட்டுக் கொண்டு தமிழியக்கத்தை வளர்க்க வேண்டும்.

## கொழும்பு யூனியன் கல்லூரி மாணர் மன்றம்

மாணவர் மன்றங்கள் மாணவர்களைத் தமிழியக்கத்திற் சேர்ப்பதற்கு இப்பொழுது முன்வந்துள்ளன. 25 ரூபா பெறுமதியான பரிசிலைப் பெறுதற்குப் பல மாணவர் மன்றங்கள் போட்டியிடுகின்றன. முடிவு தேதி 1-12-59 என்பதை நினைவுபடுத்துகிறோம். முதலாவதாகப் பங்குபற்றிய மன்றம் கொழும்பிலுள்ள யூனியன் கல்லூரி மாணவர் முன்னேற்ற மன்றம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

## தொண்டர் சேர்க்கும் தொண்டர்கள்

தொண்டர்கள் யாவரும் ஆளுக்குப் பத்துப் பேரைத் தமிழியக்கத் தொண்டர்களாகச் சேர்க்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தோம். இவ்வாறு சேர்க்கும் தொண்டர்களின் பெயர்களையும் வாரந்தோறும் வெளியிடுவோம். மிருசுவில் திரு செ. அச்சுதம்பிள்ளை, அச்சுவேலி திரு ந. சிவபாதம், கொழும்பு திரு ம. சிவரத்தினம், திரு ந. அனந்ததேவன் என்போர் பத்துத் தொண்டர்களைச் சேர்த்து அனுப்பியுளர்.

தமிழ்ப் பற்றுள்ள யாவரையுந் தமிழியக்கத்திற் சேருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். உடனே உங்கள் பெயர், வயது, தொழில், முகவரி முதலியவற்றை ஓர் அஞ்சல் அட்டையில் எழுதிக் கையொப்பமிட்டுத் தமிழியக்கம், மே/பா சுதந்திரன், த. பெ. 1183, கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்புங்கள்.

181. ஆ. கெங்காசலம், மண்டூர். 182. நா. வேலன், கொழும்பு 7. 183. நா. இராமசாமி, அனலைதீவு. 184. வே. நடராசா, சண்ணுகம். 185. எம். எஸ். அந்தோனிப்பிள்ளை, கொச்சிக்கடை. 186. இ. இரத்தினருபன், உரும்பராய. 187. செ. இராசையா, திருநெல்வேலி. 188. செல்வி புனிதம் பேராயிரம், நல்லூர். 189. திரு. க. பூபாலசிங்கம், கோண்டாவில்.

190. திருமதி க. இராசம்மா, கொக்குவில். 191. க. கிருஷ்ணபிள்ளை, முறக்கொட்டாஞ்சேனை. 192. த. பரமசாமி, பூநகரி. 193. செல்வி. கா. க. அன்னபூரணி, நயினுதீவு. 194. சு. மகாலிங்கம், சரவணை. 195. சு. மணிவண்ணன், வட்டுக்கோட்டை (பத்தனை) 196. பெ. சண்முகவேலு, மாத்தளை. 197. என். பத்மநாதன, தெல்லிப்பழை. 198. சோ. இராசேந்திரம், காலி—எல. 199. பொ. யோகானந்தன், அரியாலை.

• 200. மு. பாலசுப்பிரமணியம், வட்டவளை. 201. சி. பொன்னம்பலம், காரைநகர். 202. இந்திரராசா— சுழிபுரம். 203. சி. சங்கரப்பிள்ளை, கொழும்பு 11. 204. யோன் அல்வெட் குரூஸ், ரூஜக்கடலுவ. 205. அந்தோனிக்குரூஸ், ரூஜக்கடலுவ.

மிகச் சுத்தமான பிரபலமருந்து மூலிகைகளிலிருந்து சாஸ்திர ரீதியாகத் தயாரிக்கப்பட்ட

ஆயுர்வேத மருந்துகள்

கியாவனப் பிரஸ் அவால கல்வியம் மற்றும் அஷ்டவர்கங்களும் கலந்தது.

எல்லா வயதினருக்கும், நோயின்று உடல் தேறும் எல்லாக் கட்டங்களிலும் எல்லாக் காலங்களிலும் குணமளிக்கும். சதா உஷ்ணப் பிரதேசத்திற்குரிய ஆயுர்வேத டானிக் மருந்து.

ஜுக்கண்ட் ஜெலி கல்வியத்துடன் கூடியது. வெள்ளியும் ஏலக்காயும் வன்ஸ்லொச்சாஜும் சேர்ந்தது. சகலவித உஷ்ணப் பிரதேச கோளாறுகளையும் போக்கடிக்கின்றது கண்ணிலும், உடம்பிலுமுள்ள அரிப்பையும் எரிச்சலையும் அதோடுமலச்சிக்கலையும் இல்லாமலாக்குகின்றது. இரத்தத்தை சுத்திகரித்து மூளையைக் குளிர்மைப் படுத்துகிறது. இரத்தம் கசியும் மூல நோய்க்குச் சிறந்தது.

பெபிப் ரிஎங்ஸ் வெள்ளி மயமான வில்லைகள்
மெலனே படுதலுக்கும் அங்க சம்பந்தமல்லாத சிறுநீர் தடிக்கவும் இந்திரியமான நோய்கள் எப்படிக் கடுமையானதாயினும் கண்டிக்கவல்லது.
அதோடு பலதரப்பட்ட ஆயுர்வேத மருந்துக்களும் எங்களிடம் உண்டு. பம்பாய் மெஸர்ஸ். சரக்பந்தர் ஸ்தாபனத்தாரால் உற்பத்தி செய்யப்படுவன.

விநியோகஸ்தர்கள்:
சிர்ருல் கதீர் அன் கம்பெனி,
41&43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு.
போன்: 6009&3710

## மாணவர் சேர்வு-படிவம்

1. கல்லூரியின் பெயர்..............................

2: தமிழ் மன்றத்தின் பெயர்..............................

3. மாணவர் முழுப் பெயர்..............................

4. வகுப்பு..............................வயது..............................

சொந்த ஊர்..............................

நான் என்னுடைய கருமங்கள் யாவற்றையும் தமிழிலேயே செய்வேன் எனவும் என்னுடைய ஆசிரியரையும் சுற்றந்தாரையும் நண்பர்களையும் தமிழிலேயே அவர்களுடைய கருமங்களைச் செய்யுமாறு தூண்டுவேன் எனவும் உறுதிகூறுகிறேன். என்னைத் தமிழியக்கத் தொண்டராகச் சேர்க்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

..............................
தமிழ் மன்றச் செயலாளர் கையொப்பம்

..............................
மாணவர் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழைக் கற்றுப் புலமை பெற்ற முதல்வர்

# இத்தாலிய நாட்டு அறிஞர்

## சமயப்பணி செய்யத் தமிழ் நாடு வந்த வீரமாமுனிவர் மொழியையும் வளர்த்தார்

## தேம்பாவணியும் சதுரகராதியும்

### அடிகளார் தமிழன்னைக்கு சூட்டிய வாடாமலர்கள்

*தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் அளப்பரிய தொண்டு செய்த வணக்கத்துக்குரிய வீரமாமுனிவர் தோன்றிய நினைவு நாள் 8-11-59 ஆகும். அதையொட்டி அடிகளாரைப்பற்றிய கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.*

தமிழ் இலக்கியச் சுவை ததும்பும் தேம்பாவணியெனும் உயரிய நூலைத் தமிழ் மக்களுக்குக் கொடுத்தருளிய வீரமாமுனிவர் எனும் சிறப்புப் பெயர் பூண்ட, கான்ஸ்டன்ரைன் யோசப் பெஸ்கி அடிகளாரை அறியாத தமிழர் எந்நாட்டிலும் இருக்கமாட்டார்கள். அடிகளார் இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவர். 1680ம்ஆண்டு கார்த்திகைத் திங்கள் எட்டாம் நாள் அன்று காஸ்திக்கிளிபோனே எனும் ஊரித் தோன்றினர். இளமையிலேயே இலக்கிய இலக்கணங்களைக் கற்றுப் பன்மொழிப்பண்டிதரானர். அயல் மொழிகளை இலகுவில் கற்றுக்கொள்ளும் ஆற்றல் அடிகளாரிடம் அபரிமிதமாக விளங்கியது. அடிகளார் கடவுளிடம் மிகுந்த பற்றுடையவராயிருந்தார். கல்வி கேள்விகளில் ஒப்பாரும், மிக்காரும் இல்லாது விளங்கிய இப்பெரியார் இரட்சகர் சபையில் உட்பட்டுத் திருமறையை உலகிற்கு அறிவிக்க ஆவல் கொண்டார். இவருடைய ஆவலைக் கண்ட அருள் மறைத் தலைவர் இவரைப் பாரத நாட்டிற்கு அனுப்பினர். அடிகளாரும் போர்த்துக்கேசரின் தலைநகராக விளங்கிய கோவா என்னும் ஊரை அடைந்து மெய் மறையைப் பரப்புவதற்குச்செய்முறைத் திட்டம் வகுத்தனர்.

#### தமிழில் பாண்டித்தியம்

அத்திட்டத்தில் உள்நாட்டு மொழிகளைக் கற்று நூல்கள் இயற்றி, அவைகளின் வழியாய்ச் சமயக் கொள்கைகளை மக்களுக்கு அறிவுறுத்தலும் ஒன்று. இச்செயல் நம் நாட்டிற்குப் புதிதன்று. சைனரும், புத்தரும், தங்கள் மதக் கொள்கைகளைப் பரப்பத் தென்னாட்டில் இம் முறைகளைக் கையாண்டனரென்று மணிமேகலை, சிலப்பதிகாரம், சிந்தாமணி, முதலிய தமிழிலக்கிய நூல்களாலும், நன்னூல் முதலிய இலக்கண நூல்களாலும் அறிகின்றோம். ஏறக்குறைய 245 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டிற்கு வந்த எங்கள் அடிகளாரும் முக்கியமாகப் பாண்டிய நாட்டிலேயே வாசஞ் செய்தார். திராவிட மொழிகளில் சிறந்ததாகிய தமிழ் மொழியைக் கற்கவாரஞர். பெரிய இலக்கணங்களை முறையே கற்ருர். இங்ஙனம் தமிழில் திளைத்த புலவர் பல நூல்களை இயற்ற ஆரம்பித்தார்.

#### சமயத் தொண்டும் தமிழ்த் தொண்டும்

சமயத் தொண்டிலும், தமிழ்த் தொண்டிலும் ஈடுபட்டுழைத்தும் பெரும் புகழடைந்தவர் வீரமாமுனிவர். மதுரை மடத்தில் தங்கி வீரமாமுனிவர் செய்த மெய்மறைத் தொண்டுகள் அளப்பில. தமது முப்பதாம் வயதில் தமிழ் நாட்டிற்கு வந்து 67 வயதுவரை தமிழ நாட்டில் வாழ்ந்து பல்வாற்ருலும் சிறந்த தொண்டுகள் [illegible] ஞர். அடிகளாரைத் தைரி[illegible] [illegible] திருப் பெயர் கொண்டு அழைப்பதுண்டு. இவர் தமிழுக்குச் செய்த தொண்டுகளை நாம் நன்றியறிதலுடன் என்றும் போற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

#### தேம்பாவணி

சூசை மாமுனிவரின் அரிய வரலாற்றைத் தமிழ்க் காவிய இலக்கணம் பொருந்த 3615 விருத்தப் பாக்களால் "தேம்பாவணி"

#### இறைபுகழ்வாழி

எனும் சிறந்த நூலாக [illegible] இனர். இவ்வுயரிய காவியத்தினைமுகு கற்றவர் போற்றும் தன்மையதாக அமைந்துள்ளது. இக் காவியத்தில் கவிச்சுவை பொருட் சுவை, வைப்பு முறை முதலியவைகள் உயர்ந்து விளங்குவதை நாம் காணலாம்.

#### வீரமாமுனிவர் என்ற பட்டம்

அமிழ்தினுமினிய இத் தேம்பாவணியானது சிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற பழந் தமிழ் நூல்களோடுஒப்பிடத்தக்கதாகும்.

விருத்தாசலத்துக்குச் சமீபத்திலுள்ள கோனன் குப்பம் என்னும் ஊரில் முனிவரின் முயற்சியால் ஒரு மாதா கோயில் அழகுற அமைக்கப் பெற்றதென்றும் மாதாவின் அருளாலேயே தேம்பாவணி பாடப் பெற்ற தென்றும் சொல்லப்படுகிறது. தேம்பாவணி மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப் பெற்றதென்றும் ஆங்கு குழுமியிருந்த சங்கப் புலவர்கள் இக் காவியத்தின் அருமை பெருமைகளைப் பராட்டி இந் நூலாசிரியரை "வீரமாமுனிவர்" என்று பட்டமளித்துச் சிறப்பித்தார்களென்றும் கூறப்படுகிறது.

#### சதுரகராதி

மற்றும் நம் முனிவர் கலம்பகம் மாலை முதலிய தமிழ்க் காவியங்களையும் செய்தருளினர். தனி உரை நடை நூல்களையும் எழுதினர். அவைகளில் மண விளக்கமும் மறையவர் ஒழுக்கமும் சிறந்து காணப்படும். இன்னும் நம் வீரமாமுனிவர் கற்ருேரும், மற்ருேரும் எளிதில் பொருள் உணர்ந்து கொள்ளும் பொருட்டு மேனுட்டு முறையில் "சதுரகராதி" என்னும் ஒரு அகராதியை ஆக்கி அளித்தனர். இதுவே தமிழ் மொழியில் புதுமுறையில் அமைந்த முதல் அகராதி ஆகும்.

இப் பெரியார் இலக்கிய நூல்கள் இயற்றியதோடு ஐந்து இலக்கணங்களையும் தொகுத்து, "தொன்னூல் விளக்கம்" என்னும் ஒரு சிறந்த தமிழ் இலக்கண நூலையும் ஆக்கியருளினர்.

#### லத்தினில் திருக்குறள்

நம் தமிழ் மொழியின் அருமை பெருமைகளைப் பிறநாட்டவர் கண்டு தெளியுமாறு "கொடுந் தமிழ் இலக்கணம்" என்னும் ஒரு நூலை

(15-ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் நிதி தருக

வட மாகாணத்தில் இரண்டு உப தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். திரு. வன்னியசிங்கத்தின் மரணத்தால் காலியான கோப்பாய்த் தொகுதியிலும், திரு வி சுந்தரலிங்கத்தின் ராஜிஞமாவினுல் காலியான வவனியாத் தொகுதியிலும் அந்த உபதேர்தல்கள் நடக்கும்.

இந்த இரண்டு உப தேர்தல்களும் பொதுவாகத் தமிழர்களுக்கும் குறிப்பாகத் தமிழரசுக் கட்சிக்கும் விடப்பட்டிருக்கும் சவாலாகும். எங்கள் மக்களும் கட்சியும்தமிழுக்கும் தமிழருக்கும் பரிபூரண விசுவாசமாக இருந்து, தமிழர் நலனுக்காகப் போராடக் கூடிய தகுதி வாய்ந்த அபேட்சகர்களை உபதேர்தல்களுக்கு நிறுத்த முடியுமா என்பதுதான் அந்தச் சவால் ஆகும்.

குறிப்பாக வவனியா, நன்முக உழைக்கக் கூடிய சிறந்த ஒரு தொண்டரை—அந்தப் பிராந்தியத்தைத் தமிழர் பிரதேசத்தின் ஒருபகுதியாகப் பாதுகாத்துக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க அயராது போராடக் கூடிய ஒரு வீரரை, தெரிவு செய்தாக வேண்டும். தமிழ் பிரதேசத்தின் எல்லைப்புற அரணுக அமைந்திருப்பது வவனியா.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும். அதாவது ஒருவர் அரசியல் வாதியாக இருப்பதாளுல் அவருக்கு கணிசமான அளவு ஓய்வும் சொந்த வருமானமும் வேண்டும். துரதிர்ஷ்ட வசமாக தமிழர்களுள் சொந்த வருமானம் உள்ளவர்களிடம் இலங்கையில் தமிழினம் அழிந்து போகாது பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற எண்ணம், அதற்கான உணர்வு போதிய அளவில் இல்லை. அதே நேரத்தில் தமிழினத்தின் நலனிலும் நல் வாழ்விலும் அக்கறை கொண்ட ஆண்கள்பெண்கள்—இரு பாலரிடமும் தேர்தலில் போட்டியிட்டு தம் இனத்துக்காகத் தமது முழு நேரத்தையும் செலவிட பணபலம் இல்லை. அதாவது வருமானம் கிடையாது.

இந் நிலையில், தமிழரசுக்கட்சி திறமையும் பொதுப் பணி நாட்டமும் கொண்ட ஒருவரையே வவனியாத் தொகுதித் தேர்தலுக்கு அபேட்சகராகத் தெரிந்தெடுக்க வேண்டும்; அத்தோடு அவருக்காகத் தேர்தல் பிரசாரம் செய்வதையும் பணம் செலவு செய்து உழைப்பதையும் கட்சியே பொறுப்பேற்க வேண்டி இருக்கிறது.

இதே போன்ற நிலைமைதான் கோப்பாய்த் தொகுதியிலும். நாம் அங்கு நிறுத்தும் அபேட்சகரான திருமதி கோமதி வன்னியசிங்கத்துக்கு ஆதரவு தருவது மட்டுமல்ல, அவருக்காக தேர்தல் வேலைகளைச் செய்து செலவினங்களைக் குறைக்கவும் அந்தத் தொகுதி மக்கள் ஆயத்தமாக இருக்கிருர்கள். அப்படி இருந்தும், ஒருசில ஆயிரம் ரூபாய்கள் அங்கே செலவு செய்துதான் தீர வேண்டும். தேர்தல் பிரசாரத்தின் போது அந்தச் செலவினம் தவிர்க்க முடியாததாகும்.

ஆகவே இலங்கைத் தமிழரசுக் கட்சி நிதி உதவியையும் வேறு உதவிகளையும் கோரி நிற்கிறது. கட்சி கடந்த காலத்தில் தமிழ்பேசும் மக்களுக்கு சேவை செய்திருக்கிறது; வருங் காலத்திலும் அது தொடர்ந்து செய்து வரும் எனவே கட்சியின் தேர்தல் நிதிக்கு தாராளமாகத்தந்து உதவுங்கள்.

—எஸ். ஜே. வி. செல்வநாயகம்

நிதி அனுப்பவேண்டிய முகவரி:
16, அல்பிரட் ஹவுஸ் கார்டின்ஸ்,
கொழும்பு—3.

## கந்தசாமி நினைவுச் சிலை

### புதுப்பிக்க பணமும் பாதுகாப்பும் தரவேண்டியது அவசியம்

#### கையை விரித்த அரசாங்கத்திடம் யூனியன் மீண்டும் வற்புறுத்தல்

"கந்தசாமி நினைவுச் சிலை சம்பந்தமாக, கொழும்பு மாநகரசபை மீது பழியைப் போட்டு விட்டு அரசாங்கம் விலகிநிற்க முடியாது. மேற்படி சிலையைப் புதுப்பிக்க பணமும் பாதுகாப்பும் தரவேண்டியது அரசாங்கத்தின் நீங்காக் கடமையாகும்" என்றவாறு அரசாங்க சேவை தொழிலாளர் தொழிற் சங்க சம்மேளனம் பிரதமருக்கு உறைப்பாக எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறது.

1947 வேலை நிறுத்தத்தின் போது அரசாங்க குமாஸ்தா கந்தசாமி துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரின் நினைவாக பொது மக்களிடமிருந்து நிதி சேர்த்து யூனியன் சிலை எழுப்பியது. கொழும்பு மா நகர சபை இதற்கு போதிய ஆதரவு அளித்தது.

மேற்படி சிலை பின்னர் காடையர்களால் இடித்துத் தள்ளப்பட்டது. இருந்த இடந் தெரியாமல் மறைக்கப்பட்டது. அதனால் மீண்டும் புதிய சிலை நிறுவ வேண்டிய அவசியம் யூனியனுக்கு ஏற்பட்டது.

#### பிரதமர் பதில்

பிரதமர் தஹநாயகா வுசகு இது விஷயத்தை யூனியன் எழுதி அரசாங்கத்தின் உதவியை நாடியது. அதற்கு அவர் கையை விரித்துவிட்ட

(15-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினுல் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.

உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
என்னும் அழகின் அணிகலனை அணியுங்கள்.

பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.

இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.

குண்டன்மால்ஸ்,
லிமிடெட்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1959 நவம்பர் மாதம் 8-ந் தேதி

194 ஏ, நட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183

# சுட்டத் தவறிய காரணம்

ஜனப்பிரதிநிதிகள் சபை கடந்த மாதக் கடைசியில் நாற்றமெடுத்தது! அரசாங்கத்தின் அழுகல் வாடை, மந்திரிகளின் ஊழல் மணம், காலஞ்சென்ற பண்டாரநாயகாவின் படுகொலைக்குப் பின்னணியாய் அமைந்த இரத்த வெறியின் நிண விச்சு, எல்லாம் சேர்ந்து பொது ஜனம் மூக்கைப் பிடித்து, மூச்சை அடைக்கும் அளவிற்கு துர்க்கந்தம் வீசியது! குமட்டல் எடுத்தது!

நம்பிக்கையில்லாப் பிரேரணையின்மீது நடைபெற்ற விவாதத்தையும், அப்போது அம்பலமாக்கப்பட்ட ஆசாபாச, ஆபாச, அசம்பாவித சம்பவங்களையும், சரித்திரங்களையும்தான் குறிப்பிடுகிறோம்.

இந்த விவாதத்தின் மத்தியிலே வெளியான அந்தரங்க விவரங்களையும், அரசாங்க நடைமுறைகளையும் ஆராய்ந்து பார்க்கும்போது இலங்கை ஆட்சி இவ்வளவு படுகேவலமான இழிநிலை அடைந்துவிட்டதைப்பற்றி எந்த ஒரு இலங்கையனும் பெருமைப்பட முடியாது.

இன்றைய அரசாங்கத்தின்மீது தாம் நம்பிக்கை இழந்து போனமைக்கு எதிர்க்கட்சியைச் சார்ந்த பற்பல பிரதிநிதிகளும் பல்வேறு காரணங்களைச் சுட்டிக் காட்டினார்கள். தஹநாயகா அரசாங்கத்துக்கு இந்த நாட்டை ஆளுவதற்கு பொதுஜன ஆக்ஞை (Mandate) கிடையாது என்று சுட்டிக்காட்டினார்கள். பண்டாரநாயகாவின் படுகொலைபற்றி முறைப்படி விசாரணை நடக்கவில்லையென்று சுட்டிக்காட்டினார்கள். கொலைக் கோஷ்டியோடு ஒருசில மந்திரிகள் நட்புறவும் தொடர்பும் கொண்டுள்ளார்கள் என்று சுட்டிக்காட்டினார்கள். பண்டாரநாயகா அரசாங்கத்தைப்போல தஹநாயகா அரசாங்கமும் சிறுபான்மை மக்களான தமிழ் மக்களை அடக்கியொடுக்கமாட்டாது என்பதற்கு ஆதாரம் இல்லை; அதனால் இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கை இல்லை என்றும் காரணம் காட்டினார்கள்.

இப்படிப் பற்பல காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டபோதிலும், அரசாங்கத்தின்மீது பொதுமக்கள் நம்பிக்கை இழப்பதற்கு மூலகாரணமாயுள்ள ஒரு முக்கிய காரணம்—ஜனநாயக தத்துவத்தின் ஆணிவேரையே அசைத்துவிடும் காரணம்—சுட்டிக்காட்டப்படவில்லை.

எதிர்க்கட்சியினர் சுட்டத் தவறிய ஜனநாயக விரோதமான அந்தக் காரணந்தான் என்ன? இந்த வினாவுக்கு விடை தெரிந்துகொள்வதற்கு முன்னால் ஜனநாயக கோட்பாடுகளைத் தெரிந்துகொள்வது அவசியம்.

மன்னராட்சி நடந்த இருள்சூழ்ந்த பண்டைக்காலத்தில் மக்களுக்கு சுயாதீனம் இருந்ததில்லை. மக்கள் கருத்தும், மக்கள் உரிமையும், மக்கள் அதிகாரமும் மதிக்கப்பட்டதில்லை. மன்னன் விரும்பினால் ஒரு பிரஜையின் கழுத்தை வெட்டலாம், உடைமையைப் பறிக்கலாம், மனைவியைக்கூட அபகரித்துக்கொள்ளலாம். கேட்பாரில்லை மறுக்க சட்டமில்லை. இந்த நிலை இருந்து வந்தது.

மன்னர்கள் தாங்கள் விரும்பியபடி காரியமாற்றுவதற்கு மதத்தையும், மதபீடத்தையும், மத குருக்களையும் பக்கபலமாகக்கொண்டார்கள். மத குருக்களும் மன்னர்களை மயக்கித் தம் கைப்பாவைகளாக ஆட்டிப்படைத்தார்கள். இரண்டுசாராரிடமும் சிக்கிப் பொதுமக்கள் தவித்து வந்தார்கள்.

நிக்கோலோ மெக்கியவெல்லி (Niccolo Machiavelli) என்பவன் பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு புகழ்பெற்ற இத்தாலிய ஆசிரியன். அரசியல் சாகஸங்களைப்பற்றி அவன் அருமையான நூல் எழுதியிருக்கிறான். மக்களை ஏமாற்றி, சிந்திக்க முடியாத பிற்போக்கான மந்த நிலையில் அவர்களை வைத்திருப்பதன்மூலம் அரசாங்கத்தை நடத்துவது ஒரு அரசியல் தந்திரம் என்றும் அதற்கு மதத்தைப் பக்கபலமாகக்கொள்வது இலட்சியத்தை அடைவதற்கு சுலபமான வழியென்றும் மெக்கியவெல்லி கூறுகின்றான். ஆட்சியைக் கைப்பற்றியவர், தாம் பொய் என்று கருதும் ஒரு மதத்தையும், மதக் கோட்பாடுகளையும், மத குருக்களையும்கூட ஆதரித்துக் கௌரவிப்பது இன்றியமையாதது. அது அரசியல் சாகஸம், அதன்மூலம் மக்களை மடக்கி ஆளலாம் என்பது அவன் சித்தாந்தம்.

மக்கள் யுகம் மலர்ந்து ஜனநாயகம் அரியாசனம் ஏறியதும் இந்த நயவஞ்சக சித்தாந்தம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. மக்கள் ஆணையே மகேஸ்வரன் ஆணை என்று கொள்ளப்பட்டது. மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்கள் ஆட்சியே ஜனநாயக ஆட்சி யென்ற கோட்பாடு நிலைநாட்டப்பட்டது.

மக்கள் ஆட்சி என்னும் ஜனநாயக தத்துவத்தின் உன்னத சந்நிதானம் புனித பாராளுமன்றமே தவிர மதபீடம் ஆகாது. சர்வ அதிகாரமும் கௌரவமும் பெற்றவர்கள் மக்கள் பிரதிநிதிகளே அன்றி விஹாராதிபதிகள் அல்லர். இந்த உண்மையை மறக்கும் அல்லது மறுக்கும் எந்த அரசாங்கத்தின்மீதும், எந்த மந்திரி சபையின்மீதும், எந்தப் பிரதமர்மீதும் எதிர்க்கட்சியினர் நம்பிக்கை வைக்க முடியாது. பொதுமக்கள் நம்பிக்கை வைக்க முடியாது. ஜனநாயக உலகமே நம்பிக்கை வைக்க முடியாது.

காலஞ்சென்ற பண்டாரநாயகாவை அடக்கம் செய்துவிட்டு, புதிய பிரதமரான தஹநாயகா செய்த முதல் வேலை என்ன? நேரே கண்டியிலுள்ள தலதா மாளிகாவைக்குச் சென்றார். அங்குள்ள பௌத்த பிக்குகளின் கால்களில் விழுந்து தொழுதார்; திருவாய் மலர்ந்தார்!

# சட்டங்களைத் தளர்த்தாமல் "நம்புங்கள்" என்ற வாக்குறுதியா?

## உரிமை வழங்க மறுக்கும் எந்த அரசாங்கத்தையும் தமிழினம் எதிர்த்தே தீரும்

## பாராளுமன்றத்தில் திரு. அமிர்தலிங்கம்

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தபோது வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு அ. அமிர்தலிங்கமும் பேசினார். தமிழ் பேசும் மக்களுக்கு நில உரிமை, குடி உரிமை, மொழி உரிமை, அரசியல் உரிமை ஆகியவற்றை வழங்கத் தயாராக இல்லாத எந்த அரசாங்கத்தையும் தமிழ் பேசும் மக்கள் என்றைக்கும் எதிர்க்கவே செய்வார்கள் என்று அவர் ஆணித்தரமாக எடுத்துக் கூறினார். அவருடைய பேச்சு தினப் பத்திரிகைகளில் சரிவரத் தரப்படவில்லை. நமது நேயர்களுக்கு அவருடைய பேச்சை இங்கு முழுமையாகத் தருகிறோம்.

திரு அமிர்தலிங்கம் பேசியதாவது:

கௌரவ சபாநாயகரவர்களே, இங்கு, எதிர்க்கட்சிகளுள் இரண்டாவது பெரும் கட்சியாக விளங்குகின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில், இந் நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாங்கள் ஆதரிக்கும் காரணத்தை எடுத்துக் கூற வேண்டியது எனது கடமையாயிற்று.

இங்கு பேசிய பல்வேறு எதிர்க்கட்சி அங்கத்தவர்களும், இந்த அரசாங்கத்தில் ஏன் நம்பிக்கையிழந்திருக்கின்றனர் என்பதற்கான தத்தம் கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இங்கு பேசிய ஒவ்வொரு அங்கத்தவர் வாயிலிருந்தும் காலம் சென்ற கௌரவ பண்டாரநாயகாவின் கொலை சம்பந்தப்பட்ட விஷயங்கள் ஆதியோடு வெளியாகியிருப்பதையும் நாங்கள் காண்கிறோம், ஆனால், இந்தப் பாராளுமன்றத்தின் காலந்தொட்டு காலஞ்சென்ற பிரதமரின் அரசாங்கத்தில் அவரது சகாவாக விளங்கி, இன்று அவரது பதவியிலமர்ந்திருக்கும் இன்றையப் பிரதமரின் அரசாங்கத்திலே நம்பிக்கையற்று, நம்பிக்கை வைக்க முடியாத நிலையில விடப்பட்டுள்ள தமிழினத்தின் சார்பில், அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை மீண்டும் பெறப் போராடும் ஒரு கட்சியின் பிரதிநிதியாக நான் பேசுகின்றேன்.

நான் கூறுவனவற்றை "வழக்கமான பல்லவிதான்" என்று பலர் நினைக்கலாம். "வகுப்புவாதப் பேச்சு" என்று சிலர் சொல்லலாம். ஆனால், தாங்கொணா நோயினால் வாடுபவன் அந்த நோய் தீரும்வரை தன் வேதனையைப் பற்றிய கூக்குரலைத் தானே கிளப்புவான்? அதே நிலையில்தான் தமிழினம் இந் நாட்டிலிருக்கின்றது.

சென்ற சில ஆண்டுகளில் தமிழினத்தின் நிலை மோசமான கட்டத்தையடைந்துள்ளதென்பதைக் கௌரவ பிரதம மந்திரி பத்திரிகை நிருபர்களுக்களித்த முதலாவது பேட்டியிலேயே கூறியிருக்கின்றார். ஆனால் தமிழ் மக்களுக்கு அத்தகைய அநீதிகளையிழைத்த அரசாங்கத்துக்கு அவரும் அவரது சகாக்களும் கடந்த மூன்றரை வருடங்களாக உடந்தையாக இருந்திருக்கின்றனர் என்பதை அவர் மறுக்க முடியாது. பிரதமர் கூறுகின்றார்: "I shall try my level best to heal the wounds that have been created. தமிழினத்தின் மீது ஏற்படுத்தப்பட்ட புண்களை மாற்று



திரு. ஏ. அமிர்தலிங்கம்

வதற்கு நாம் முயற்சிப்போம்" என்று. ஆனால், அப்புண்களை ஏற்படுத்தியவர்கள் இந்த அரசாங்கத்தின் முன் வரிசையிலமர்ந்திருப்பவர்கள்தாம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

"ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது" என்பதை அறிந்திருப்பவர்கள் நாங்கள். தமிழ் மக்களை ஏமாற்றலாம் என்று இந்த அரசாங்கத்தையோ, இன்னும் வரவிருக்கும் அரசாங்கங்களையோ சேர்ந்தவர்கள் நினைத்தால் அவர்கள் கனவுலகில் சஞ்சரிப்பவர்களாகத்தானிருக்க முடியும். எங்களைப் பொறுத்த வரையிலே, இவர்களது குடும்பச் சண்டைகளைப் பற்றி எங்களுக்கு அவ்வளவு அக்கறை கிடையாது. நாங்கள் இந் நாட்டிலே உரிமையிழந்தவர்களாக வாழ்ந்து வருகின்றோம்.

இங்கு நிகழ்த்தப்பட்ட பேச்சுக்கள் அனைத்தும் "யார் அதிகாரத்துக்குரியவர்" என்ற அடிப்படையிலேயே இருந்தன. எங்களைப் பொறுத்த வரையிலே பண்டாரநாயகாவும் தஹநாயகாவும் ஒரே நிலையில்தான் இருக்கின்றார்கள். இந் நிலையிலே தமிழ் மக்களுக்குப் பிரஜா உரிமை, மொழியுரிமை, குடியுரிமை, அரசியல் உரிமையாதிய உரிமைகள் யாவற்றையும் அளிக்க மறுக்கும் எந்த அரசாங்கம் ஆட்சி பீடத்திலிருக்கின்றதோ அந்த அரசாங்கத்தை நாங்கள் எதிர்த்தே தீருவோம்; அந்த அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவே மாட்டாதென்பதை இச் சந்தர்ப்பத்தில் தெளிவாகக்கூற வேண்டியது எனது கடமையாகும்.

நான் இந்நேரத்திலே, எனது பேச்சை அதிகமாக நீடித்து மற்றவர்களுடைய நேரத்தை எடுக்க விரும்பவில்லை.

திரு கொல்வின் ஆர். டி. சில்வா: (இடையில் குறுக்கிட்டு) நேரம் போகிறது. பேச்சை விரைவில் முடியுங்கள்.

திரு அமிர்தலிங்கம்: ஆனால் கௌரவ வெள்ளவத்தை கல்கிசைப் பிரதிநிதி (டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா) என்னை (இவ்வாறு) அவசரப்படுத்துவதாக இருந்தால் இச் சபையிலே ஏழு பிரதிநிதிகளைக் கொண்ட எங்கள் கட்சியின் சார்பாகப் பேசும் எனது உரிமையை நான் விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

திரு கேமிஸ்: பேசுங்க, பேசுங்க, நல்லாப் பேசுங்க.

திரு. அமிர்தலிங்கம்: இவ்விதமாகவே சமசமாஜக் கட்சியினரும் தமிழினத்தின் தாபக்குரலைத் தாழ்த்திவிடப் பார்க்கின்றார்கள். இல்லை! எங்கள் குரலும் இச் சபையிலே கேட்கவேண்டும். இதனைத் தடுக்க எவராலும் முடியாதென்பதை நான் கூறவேண்டும். வேறு எந்தப் பிரதிநிதியாக இருந்தாலும்—தமிழ் மக்களாக இருந்தாலும் தங்களை நம்பும்படி இவர்கள் கேட்கின்றார்கள். ஆனால், தமிழ் மக்களுக்கிழைக்கப்பட்ட அநீதிகளை நீக்குவதற்கு இவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்றால் அதுதானில்லை.

இன்று தமிழ் மக்களின் முதல "நம்பர்" விரோதியாக உத்தியோக மொழி

(13-ம் பக்கம் பார்க்க).

அவர் பேசிய விவரம் 5-10-59 சிலோன் டெய்லி நியூஸ் (Ceylon Daily News) பத்திரிகையில் பின்வருமாறு வெளிவந்திருக்கிறது:

The Prime Minister said: "Serving the Sasana and the monks is greater to me than the office of Prime Minister" இதன் தமிழாக்கம், "பிரதமர் பதவியைவிட பௌத்த சாஸனத்தையும், பௌத்த பிக்குகளையும் சேவிப்பதையே நான் பெரிதாக மதிக்கிறேன்" என்பதாகும்.

ஒரு ஜனநாயக அரசமைப்பில் மக்களுக்குச் சேவைபுரிவதே பிரதமர் பதவியின் மகத்தான இலட்சியமாகும்; மாபெரும் கடமையாகும். ஆனால் இந்தப் பிரதமர் மக்கள் சேவையைப் பிரதானமாகக் கொள்ளவில்லை. இந்த நாட்டில் இத்தனை குழப்பங்களுக்கு மட்டுமன்றிக் கேலிக்கிடமான ஒரு "போதிசத்துவ"ரின் உயிரைக் குடிப்பதற்கே காரணமாயிருந்த பிக்குகள் திருக்கூட்டத்தைச் சேவிப்பதே தமது முதற்பணி, பெரும்பணி என்று கொண்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட ஒருவர்மீது, அவர் தலைமைதாங்கும் அரசாங்கத்தின்மீது எப்படிப் பொதுமக்கள் நம்பிக்கை வைக்க முடியும்? இந்த மாபெரும் உண்மையை நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தில் ஏனோ எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் சுட்டிக்காட்டவில்லை? காரணம் எதுவோ என்று கேட்க விழைகின்றோம்.

## உண்மையா? பொய்யா?

### கண்டுபிடிக்கயந்திரம்

குற்றவாளிகளை பிடித்து பொலீஸார் விசாரிக்கும்போது, அவர்கள் சொல்லுவது உண்மையா? பொய்யா? என்று கண்டுபிடிக்க ஒரு அதிசய யந்திரத்தை சென்னை பொலீஸார் வாங்கி இருக்கிறார்கள்.

இந்த யந்திரத்தின் விலை ரூ. 9 ஆயிரம், அமெரிக்கா இருந்துவருகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் பிரதிநிதிகள் அரசாங்கத்தை ஆதரிப்பதா? கூடாது

## இதுவரை கொடுத்து வந்ததையும் வாபஸ்பெற வேண்டும்

### மட்டக்களப்பு முஸ்லிம் வர்த்தகர் சங்கம் வேண்டுகோள்

முஸ்லிம் பிரதிநிதிகள் அரசாங்கத்திற்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெறுமாறு கேட்டுக்கொள்ளும் சுற்று நிருபம் ஒன்று அணிமையில் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது மட்டக்களப்பு இலங்கை முஸ்லிம் வர்த்தகர் சங்கம் இதை அனுப்பியது. சங்கத்தின் இணைக் காரியதரிசிகள் இருவரினதும் ஒப்பங்களோடு சுற்று நிருபம் அனுப்பப்பட்டிருக்கிறது

அந்தச் சுற்று நிருபத்தில் மேலும் சொல்லப்பட்டிருப்பதாவது:

"கனம் தஹநாயகாவின் கீழ் இயங்கும் இன்றைய அரசாங்கம், இலங்கை வாழ் பொதுமக்களினதும் உலக அபிப்பிராயத்தினதும் நல்லெண்ணத்தை இழந்துவிட்டது. இதற்கான காரணங்கள் பலவாக இருப்பினும், அவற்றை யாவரும் அறிவர். ஆகவே இந்த அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பது இந் நாட்டின் அபிவிருத்தியில் பெரிதும் பங்குபற்றிய முஸ்லிம் இனத்திற்கு வெட்கம் தரவல்லது. இன்றைய நெருக்கடி நிலைகளை ஆராய்ந்து இந்த நாட்டை ஆளும் தார்மீக உரிமையற்ற இந்த அரசாங்கத்தின் கட்சியிலிருந்து சகல முஸ்லிம் பிரதிநிதிகளும் விலகிக்கொள்வதுடன், அளித்துவரும் ஆதரவையும் நிறுத்திக்கொள்ள வேண்டும்." — இவ்வாறு அந்தச் சுற்று நிருபத்தில் கூறப்பட்டுள்ளது.

## கோப்பாய்க்கு நியமனப் பத்திரம்

### 12-ந் தேதி தாக்கல் செய்யப்படும்

கோப்பாய்த் தொகுதி இடைத் தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் நாள் இம் மாதம் 12-ந் தேதி வியாழக்கிழமையாகும். இத்தினத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் காலஞ்சென்ற கோப்பாய் பிரதிநிதி திரு கு வன்னியசிங்கத்தின் மனைவியார் திருவாட்டி கோமதி வன்னியசிங்கம் நியமனப் பத்திரம் தாக்கல் செய்வார்.



திருவாட்டி கோமதி வன்னியசிங்கம்

நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு வேண்டிய கட்டுப் பணத்தைக் கோப்பாய்த் தொகுதி மக்களே சேகரித்து திருவாட்டி வன்னியசிங்கத்துக்கு அன்பளிப்பாகக் கொடுக்கிறார்கள். தேர்தலுக்கான இதர செலவுகள் அனைத்தையும் தமிழரசுக் கட்சியே ஏற்றுக் கொண்டுள்ளது.

### பிரமுகர்கள் சமூகம்

குறிப்பிட்ட தினத்தன்று தமிழரசுக் கட்சியின் தலைவர்கள், பிரமுகர்கள் அனைவரும் திருவாட்டி வன்னியசிங்கத்துக்கு ஊக்கம் அளிக்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் நிற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற மாகாணங்களிலுள்ள தலைவர்கள், பிரமுகர்கள், ஆதரவாளர்கள் ஆகியோர் அனைவரையும் அன்றையத் தினம் கோப்பாய்த் தொகுதிக்கு வருமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

### பிரசாரக் கூட்டம்

தமிழரசுக் கட்சியின் திருநெல்வேலிக் கிளை அன்று மாலை கோப்பாய்த் தொகுதியில் ஒரு பிரமாண்டமான பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடுகள் செய்கிறது. அவசரகாலச் சட்டத்தின்படி தொகுதிக்கு வெளியேயும், நியமன தினத்துக்கு முன்னுடியும் பொதுக் கூட்டம் நடத்த முடியாதாகையால் 12-ந் தேதி மாலை திட்டமிட்டுள்ள கூட்டந்தான் முதல் பிரசாரக் கூட்டமாக அமையும்.

### பேச்சாளர்கள்

பிரஸ்தாப கூட்டத்தில் தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு வி. ஏ. கந்தையா, திரு என். ஆர். இராஜவரோதயம், திரு ஏ. அமிர்தலிங்கம், திரு வி. என். நவரத்தினம், திரு வி. ஏ. அழகக்கோன், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் உட்பட மற்றும் தலைவர்களும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மட்டக்களப்புப் பிரதிநிதி திரு செ. இராசதுரை இக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக விசேஷமாக செல்வார் என்று தெரிகிறது.

### விளக்கம்

"இலங்கையின் இன்றைய அரசியல் நிலை யென்ன? நமது எதிர் காலம் என்ன? செயல் திட்டம் என்ன?" என்பன போன்ற வினாக்களுக்கு கோப்பாய்த் தொகுதிக் கூட்டத்தில் விளக்கம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

12-ந் தேதி யாழ்ப்பாணத்தில் கூடும் கட்சித் தலைவர்களும் பிரமுகர்களும் சோந்து வவுனியா உப தேர்தல் பற்றியும், பிரசாரத் திட்டங்கள் பற்றியும் முடிவு செய்வார்கள் என்றும் அறியப்படுகிறது.

## எலிபோல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிர்ப்பந்தம் திரு. தஹநாயகாவுக்கு ஏற்பட்டே தீரும். இப்படி அரசாங்கட்சிக்குள்ளேயே அபிப்பிராயங்கள் அடிபடுகின்றன.

உள்ளே நிலைமை இப்படியிருக்க, ஒரு பாராளுமன்றக் காரியதரிசிப் பதவிக்குத் தமது உரிமையும், தகைமையும் திரு. தஹநாயகாவினல் கூட உதாசினப் படுத்தப்பட்டு விட்டனவே என்று மூதூர் பிரதிநிதி ஜனுப் முகம்மது அலி சதா முணு முணுத்துக் கொண்டிருக்கிருர். எந்த சந்தர்ப்பத்திலும் இவர் அரசாங்கத்தைக் கைவிட்டு டாக்டர் என். எம். பெரேராவின் தாஸானு தாஸனுகவாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த பொதுத் தேர்தலில் சமசமாஜ வேஷம் போட்டுக் கொண்டு போட்டியில் குதிக்க ஜனுப் அலி ஆலோசித்து வருகிருராம்."

சுதந்திரன் நிருபர் கூறியபடிதான் காரியம் நடந்தது. தமக்கு பதவி எதுவும் கிடைக்கும் என்ற அறிகுறி காணப்படாமையால் ஜனுப் அலி, தாழும் கப்பலை விட்டு வெளியேறும் எலியைப் போல் வெளியேறினுர்.

பெரும் பான்மை இல்லாமல் தத்தளிக்கும் அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலர் அவரை மீண்டும் சந்தித்து வெகு விரைவில் அவருக்கு ஒரு பதவி பிடித்துத் தருவதாக வாக்குறுதியளித்து ராஜினுமாவை வாபஸ் பெறச் செய்திருக்கின்றனர்.

அறிமுகப்படுத்துகிறோம்

?

அடுத்த வாரம்

## "போதி சத்துவர்"

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பிரேதங்களைத் தகனம் செய்வதுதான் உயர்ந்த முறை என்று மதித்து வருகையில், திரு பண்டாரநாயகாவின் பிரேதம் கிறிஸ்தவ முறைப்படி கல்லறையில் வைக்கப்பட்டது பல பௌத்தர்களுக்கு அதிருப்தியை அளித்திருக்கிறது.

திரு பண்டாரநாயகாவின் தகப்பனர் சேர் சொலமன் ஒரு கிறிஸ்தவராக வாழ்ந்து கிறிஸ்தவராகவே மரித்ததால் அவருடைய பூதவுடல் ஹொரகொல்லையில் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. ஆனுல் மாஜிப் பிரதமர் பண்டாரநாயகா தம்மை ஒரு பௌத்தர் என்று காட்டிக்கொண்டார். அப்படியிருந்தும் அவர் சடலம் ஏன் தகனம் செய்யப்படவில்லை? காலஞ்சென்ற திரு டி. எஸ். சேனநாயகாவின சடலம் கனத்தையில் தகனம் செய்யப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கிறிஸ்தவ முறைப்படி ஒருவருக்கு இறுதி மரியாதைகள் நடத்தப்பட்டு அவரைப் "போதிசத்துவர்" என்று கூறுவது கேலிக்கிடமானதா... முகாகள் அபிப்பிராயம் தெரிவித்து வருகின்றனர்.

## பயத்தின் காரணமாகவே....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்தவர்களுக்கு விஷயம் புரிந்தவிட்டது பாம்பு தீண்டியிருக்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டார்கள் விரல்கள் விரிந்திருந்ததைக்கொண்டு புதுவித முடிவுக்கு வந்தார்கள். ஐந்து விரல்களும் ஐந்து தலையுடைய பாம்பைக் குறிப்பதாக இருக்க வேண்டும் என்று நம்பினர்கள். நம்பினவர்கள் நம்பினவர்கள்தான். இன்றும் ஐந்து தலை நாகம் பற்றிப் பேசுகிறேம்; நூல்களில் படிக்கிறேம். பாம்பைக் கடவுளாக்கியவன் அதற்கு ஐந்து தலைகளும் உண்டென்று கற்பித்துவிட்டான். நல்லவேளையாக அந்தச் சைகை காட்டிய பேர் வழிக்கு ஐந்து விரல்கள் மட்டும் இருந்திருக்கின்றன. ஆறு, ஏழு விரல்கள் அவன் கையில் இருந்திருக்குமானுல் ஆறு தலைப் பாம்பு ஏழு தலைப் பாம்புகூட உண்டு என்று கற்பித்திருப்பார்கள்.

### "போதி சத்துவர்"

"பாம்பைக் கருடன் மடக்கிவிடும் அல்லவா இதைக் கண்ட மனிதன் கருடனின் சக்தி குறித்து அதையும் கடவுளாக்கினுன். மயிலும் கிளியும்கூட அப்படிக் கடவுளாக்கப்பட்டன.

"இவை மட்டுமல்ல. கடவுளாக்கப்பட்ட பொருட்கள், விலங்குகள், பறவைகள் இன்னும் பலவுள, மன்னர்கள், போர்வீரர்கள், சாதாரண மனிதர்கூடக் காலக்கிரமத்தில் கடவுளாக்கப்பட்டார்கள். காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகாவைக் கூட போதிசத்துவர் என்கிறுர்கள். விஷ்ணுவின் அவதாரம் என்று துணிந்து சொல்லுகிறுர்கள்.

சில நோய்கள் வருவதற்கும் கடவுள்தான் காரணம் என்று நம்பினுர்கள். குறிப்பாக வைசூரி நோய் இருக்கிறதே, இது பெரிய தொற்று நோய். ஒரு இடத்தில் ஏற்பட்டுவிட்டால் எங்கும் மிக வேகமாகப் பரவி பல பேரைப் பலிகொண்டு விடும். அது ஏற்படுவதற்கான காரணம், தடுப்பு முறை இவற்றைத் தெரிந்திருக்காத காரணத்தால் பழங்கால மனிதர் அதைக் கடவுள் தரும் நோய் என்று கூறிக் கடவுளைச் சாந்தப்படுத்த எத்தனையோ காரியங்களில் ஈடுபட்டு உயிர் நஷ்டத்தோடு மேலும் பொருள் நஷ்டமும் அடைவார்கள்.

### தென்னவர் கோன்

"தொற்று நோயைப்பற்றிச் சொல்லும்போது தென்னவர்கோன்—அதாவது யமனுடைய ஞாபகம் வருகிறது. தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வீசுவது தென்றல் காற்று இந்தியாவை எடுத்துக்கொண்டால் தமிழ்நாடு பூராவையும் தழுவி வீசும் காற்றுத் தென்றல் காற்றுத்தான். மற்றப் பருவக் காற்றுகள் எல்லாப் பாகங்களிலும் வீசுவதில்லை. தமிழ் நாட்டின் தென் கோடியிலுள்ள கன்னியாகுமரியில் வைசூரி நோயோ அல்லது புளுநோயோ ஏற்பட்டுவிட்டது என்று வைத்துக்கொள்வோம். இரண்டுமே தொற்று நோய்களதாம். இங்கிருந்து கிளம்பும் காற்று கண்டிப்பாக இந்த நோய்க் கிருமிகளையும் கொண்டுதான் செல்லும். போகும் இடம் எல்லாவற்றிலும் கிருமிகளை விதைத்துச் செல்லும். தமிழ்

(11-ம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பிடி மண்

சிறுகதை—எழுதியவர்: 'அன்னை'—வை. நாகராசன்

மாலை வெயில் மங்கிச் சாயிருள் கவிந்துகொண்டிருந்தது. தெருவில் மனித நடமாட்டம் குறைந்துகொண்டிருந்தது. அந்த நேரம் தான் எங்கோ அவசரமாகப் போய்க்கொண்டிருந்த என் காதில் அந்தப் புலம்பல் கேட்டது.

"ம்.... போய்விட்டாய்...... வேண்டாம், இனி உனக்கு இந்த உலக வாழ்வு......என் வாழ்வுக்கு இனி யாரும் துணையுமில்லை, உபத்திரவமுமில்லை..."

திரும்பிப் பார்த்தேன். சாலையோரத்துக்குச் சற்றுத் தொலைவில் இருந்த குப்பை மேட்டில் ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள். ஒரு கையை உயரப் பிடித்துக்கொண்டு புலம்பினாள். அவளுடைய கையில் ஏதோ ஒரு பொருள் சிக்கி வழிந்துகொண்டிருந்தது.

அவளருகிற் சென்று அவளைக் கவனித்தேன். என்னைக் கண்டதும், அவள், தன் கையிலிருந்ததை நின்ற இடத்திலே போட்டுவிட்டு 'விர்' என்று புறப்பட்டாள். அவள் கையிலிருந்து சிறை மீண்டது ஒரு பிடி மண்! அது என்னைப் பார்த்துப் பரிதாபமாகச் சிரித்தது.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. குப்பைமேடு...புலம்பல்...ஒரு பெண்...ஒரு பிடி மண்...

குழம்பிய உள்ளத்தோடு அவளைத் தொடர்ந்துநானும் சென்றேன்.

"ஏ...கொஞ்சம் நில்லு..."

............................

அவள் வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தாள்.

என் சந்தேகம் மேலும் விரிந்துகொண்டே சென்றது. என் அவசர வேலையையும் மறந்து அவள் பின்னுலே என் மனமும் நடையும் சென்றன.

அந்த நேரத்தில், என்னையும் அவளையும் யாராவது பார்த்தால், கட்டாயமாக ஏதாவது ஒரு தவருன முடிவுக்குத்தான் வருவார்கள். நல்லவேளை! இருள் சூழ்ந்த இரவு எங்களைக் காட்டிக்கொடுக்கவில்லை. இல்லாவிட்டால், மனிதனின் இந்த எலும்பில்லாத நாக்கு, என்ன பாடுபட்டிருக்கும். ஒரு பெரும் சூறுவளியையே உண்டாக்கி எக்காளமிட்டிருக்குமே!

***

பெருந் தெருவையுங் கடந்து தியாக் குளத்தை நோக்கிப் போகும் ஒற்றடிப் பாதையில் அவள் போய்க்கொண்டிருந்தாள். அனுராதபுரத்தில் அந்தக் குளக்கரைப் பகுதி, ஏகாந்தத்திற்குப் பெயர் பெற்றது. அதுவும் இராவேளை என்ருல் சொல்ல வேண்டியதில்லை. ஏனென்ருல் அந்தப் பகுதியில்தான் சுடுகாடும் இருந்தது. மனித நடமாட்டம் மிகக் குறைவு. பிணந் தின்னும் சொறி நாய்களும் நரிகளும்தான் அந்தப் பக்கத்தைக் குத்தகைக்கு எடுத்திருந்தன.

அந்த நேரத்தில், அவளையும் என்னையும் தவிர அங்கு யாருமில்லை. இருவரும் குளக்கட்டுக்கு வந்துவிட்டோம்.

"கொஞ்சம் நில்லுங்க..." என்று குரல் கொடுத்தேன்.

அவள் திரும்பினுள். ஒரு விதமான பார்வையை என் மீது வீசிவிட்டு—

"என்ன! இன்னுமா என்னைத் தொடர்ந்து வருகிருய்?" என்று கேட்டாள்.

நான் பேசவில்லை.

அந்த நேரம், கிழக்கு வானில் பூரணச் சந்திரன் தூய தண்ணொளி பரப்ப வந்துகொண்டிருந்தான். அவனுடைய களங்கமற்ற ஒளியில் அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தேன்.

முடிந்த காலத்தில் அவள் சடந்த காட்டாறுகள் எத்தனையோ அத்தனையும் துயரச் சுருக்கங்களாக அவள் முகத்தில் தெரிந்தன. அதில் முதுமையின் முதல் வேர்கள் இழையோடி இருந்தன. வயது அவ்வளவுக்கு அதிகம் இருக்கும் என்று சொல்ல முடியாது. முப்பது முப்பத்தைந்துக்குள்தான் இருக்கும். பழுப்பேறிக்கொண்டிருந்த பரட்டைத் தலை-சற்று வெளிறிய உடல்-பலவர்ணச் சீலைத் துண்டுகளால் பொத்தப்பெற்ற உடை-கையில் நெளிந்த ஒரு சிறு மூட்டை-இத்தனையும் அவளுடைய பருவம், பதவி, அந்தஸ்து எல்லாவற்றையும் எனக்குச் சொல்லாமற் சொல்லிவிட்டன.

அவள்தான் என் மௌனத்தைக் கலைத்தாள்.

"என்ன! இந்தப் பிச்சைக்காரியை......அதுவும், உன் தாயைப்போல இருக்கும் ஒருத்தியைப் பின்தொடர்ந்தா இவ்வளவு தூரமும் வந்தாய்?"

"என்ன?......"

எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. உடலெல்லாம் வியர்த்துவிட்டது. இது என்னடா, 'தினை வெட்டப் பூதம் புறப்பட்டது'போல இருக்கிறதே என் நிலை! என்று அடித்துக்கொண்டது என் மனச்சாட்சி!

"அம்மா, மன்னித்துக்கொள், தவருன எண்ணத்தோடு உன்னைத் தொடரவில்லை நான்" என்று ஒருவாறு தடுமாறிய வண்ணம் கூறினேன். பின் அங்கு நிற்க மனமில்லாமற் திரும்பிப் போய்விட எண்ணினேன். ஆனல் அப்படிச் செய்தால் என் நிலைமையும் நோக்கமும் அவளுக்கு எப்படி விளங்கும் என்ற சிந்தனை உதிக்கவே அப்படியே அங்கு சற்றுத் தாமதித்தேன்.

அதற்குள் அவள், குளக்கரையில் இருந்த ஒரு பாறையில் அமர்ந்து குளத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

இழந்த தைரியத்தைச் சற்று மீட்டு, அவளருகிற் சென்று, "அம்மா...அந்தக் குப்பை மேட்டில்..."என்று என் சந்தேகத்துக்கு விளக்கமறிய விபரங் கேட்டேன்.

அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் முதலிருந்த கடுகடுப்போ அன்றி வேறு எந்த விதமான சினமோ இருக்கவில்லை.

"பயப்படாமற் சொல்லுங்க...என்னல் ஏதும் உதவி செய்ய முடியுமானுல் செய்வேனே தவிர உபத்திரவம் ஒன்றும் தர மாட்டேன்......" என்றேன், மீண்டும் தொடர்ந்து.

என் பேச்சில் அவளுக்கு என்ன தோன்றியதோ தெரியாது. ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். பின்னர் பேசத் தொடங்கினுள்:

"ஐயா,...நான் யாரென்று சொல்ல எனக்குத் தெரியாது. ஆனுல் நானறிய என்னைப் பற்றிக் கொஞ்சம் தெரியும். அதைக் கொண்டு ஒரு புத்தகம் எழுதலாம் என்று மட்டும் கருதாதீர்கள். ஏதோ இரண்டொரு வார்த்தைகளில் முடிக்கக் கூடியது அது..அவ்வளவுதான்." என்று சொல்லி விட்டுச் சற்று நிறுத்தினுள். அதுதான் அதுக்கு முகவுரையாகும் என்று எண்ணிக் கொண்டு அவளுக் கெதிரில் இருந்த ஒரு கல்லில் அமர்ந்தேன்.

"எனக்கு விவரம் தெரிந்த காலத்திலிருந்து இரக்க சிந்தை உள்ளவர்களுடைய [illegible] தெருவோர மர நி[illegible] திண்ணைகளும் கடைவாசல்களும் வசிக்க இடந் தந்தன; வீதிகளில் வீசியெறியப்பட்ட சீலைத் துண்டுகள் உடையாகி உடலை மறைக்கப் பயன்பட்டன. இவை போதாவா ஐயா, நான் வாழ?...நான் பேரழகியாகப் பிறக்கவில்லை. ஆனுல், பெண்ணுகப் பிறந்துவிட்டேன். காலம் எனும் பருவப் பாசியும் என்னை மொய்த்துக் கொண்டது. அது பல வீதியோர வாலிபர்களைக் கவர்ந்தது. நானும் இடங்கொடுக்க நேர்ந்தது. முதலில் அருவருப்பாகத்தான் இருந்தது. பணம் வந்ததால் பிறகு, அது பழகிப் போய்விட்டது. எனக்கு வழி காட்டினுர்கள் என் சகத் தெருவோர நண்பர்கள்.

"பாசி இப்பொழுது காய்ந்து சுருங்கிக் கொண்டு வருகிறது. ஆனுல், அதன் கீழிருந்த அழுக்கு நிறைந்த சாக்கடை இன்னும் நாற்றம் எடுக்கிறது. அது இனி, கட்டையில்தான் காயும்...... என்ன, இவள் இப்படி எல்லாம் பச்சையாகப் பேசுகிருளே என்றுதானே யோசிக்கிருய்...இதெல்லாம் உங்களைப் போன்றவர்களுக்குப் பிடிக்காது...விட்டுவிடுகிறேன்..."

நான் ஒன்றுமே பேசவில்லை, கல்லாகச் சமைந்திருந்தேன்.

அவள் தொடர்ந்தாள்: "அந்தக் குப்பை மேட்டில் என்ன நடந்தது என்று தானே கேட்டாய்?..."

"ஆமாம்!..." என்றேன் ஈன ஸ்தாயியில்.

"அங்கே என் ஐந்தாவது குழந்தையைப் புதைத்தேன்" என்று அமைதியோடு சொன்னுள்.

"என்ன, உன் குழந்தையையா? குப்பைமேட்டிலா"? என்று வாய்விட்டுக் கத்தினேன்.

"ஆமாம்...உனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும்..." என்ருள், அவள்.

நான் பேசவில்லை அவளே தொடர்ந்து பேசினுள்.

"நான்தான் அந்தக் குழந்தையை பெற்றேன். இதற்கு முன் பிறந்த குழந்தைகளை வந்த விலைக்கு விற்று விட்டேன்...இதையும் விற்கத்தான் இருந்தேன். அதுக்குள் அது போய்விட்டது... ம்... குப்பை மேடு, அதை விட என்னுல் இலகுவாகத் தோண்டக் கூடிய இடம் எனக்கு எங்கே இருக்கிறது? அது போக, இந்த மனிதக் குப்பையிலுல் தோன்றியது தானே அது, இப்பொழுது குப்பைக்கே போய்விட்டது. முன்னே பிறந்த குழந்தைகளுக்கு என்னுடலில் இருந்து பாலாக ஊறிய என் உயிரற்ற இரத்தத்தைக் கொடுத்தேன். ஆனுல், இந்தக் குழந்தைக்கு என் இரத்தமும் கொடுத்தேன்; ஒரு பிடி மண்ணுங் கொடுத்தேன்...கொடுத்து வைத்த குழந்தை!..."

"ஐயோ, நீ ஒரு தெருவோர மகளா?" என்று வாய் விட்டலறினேன்...அதில் சினம் தாண்டவமாடியது.

அவள் சிரித்தாள்.

***

அந்தச் சிரிப்பின் புதிரை இப்பொழுதுதான் என்னுல் உணர முடிகிறது.

தெருவோரத்தையும் உண்டாக்கி, தெருவோரவாசிகளையும் உண்டாக்குபவர்கள் யார்? நான் சொல்லத் தேவையில்லை.

## கொழும்பில் தமிழ் எழுத்தாளர் பொது மாநாடு

இலங்கையிலுள்ள தமிழ் பேசும் எழுத்தாளர்களின் பொது மாநாடொன்றை இவ்வருடம் டிஸம்பர் இறுதியில் கொழும்பில் நடத்துவதென்று இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைமைக் குழு தீர்மானித்துள்ளது.

இந்த மாநாடு நம் நாட்டிலுள்ள வெவ்வேறு ஸ்தாபனங்களையும், இலக்கிய வட்டங்களையும் சேர்ந்த சகல தமிழ் எழுத்தாளர்களினதும் மிகப் பரந்த மாநாடாகத் திகழும், மிக மிக விரிந்த அடிப்படையில் சகல எழுத்தாளர் பகுதிகளையும் பூரணமாகப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய எழுத்தாளர்களின் பேரவையாக இது அமைய வேண்டும் என்று கருதப்படுகிறது.

இலங்கைத் தமிழ எழுத்தாளர்களை ஒரு பொது இடத்தில் சந்திக்கச் செய்வதும், எழுத்தாளர்களுக்கிடையில் பரஸ்பரம் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளுவதும் சகல எழுத்தாளர்கள் மத்தியிலும் நேரடியான பரிச்சத்தை ஏற்படுத்தி அவர்களுக்கிடையில் நல்லெண்ணத்தையும் மிக நெருங்கிய நட்புறவையும் வளர்ப்பதும் இம் மாநாட்டின் பிரதான நோக்கங்களாகும். இலங்கையில் தமிழ்த் தேசிய இலக்கியத்தை வளர்ப்பது, எழுத்தாளர்களின் முன்னேற்றம், நமது எழுத்தாளர்கள் முன்னும் நமது இலக்கியத்தின் முன்னும் உள்ள கடமைகள் முதலிய பொதுப்பிரச்னைகள் பற்றி மாநாட்டில் விவாதிக்கப்படும்.

இந்த மாநாட்டில் எவ்வித தடங்கலுமின்று சகல தமிழ் எழுத்தாளர்களும், ஆரம்ப எழுத்தாளர்களும் கலந்து கொள்ளமுடியும். மாநாடு இரண்டு தினங்கள் (சனி, ஞாயிறு) நடைபெறும்

இந்த மாநாட்டில் பிரபல சிங்கள எழுத்தாளர்கள் சிலர் கலந்து கொள்வார்கள். அத்துடன் ஆசிய—ஆபிரிக்க எழுத்தாளர்களின் சர்வதேசிய தலைமைக் காரியாலயத்தை கொழும்பில் அமைப்பதற்காக இலங்கை வரவிருக்கும் ஆசிய—ஆபிரிக்க நாடுகளில் பிரசித்திமிக்க எழுத்தாளர்களும் பங்குபற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வைஜயந்தி பாடினர் ருஷிய மொழியில்!

ஐரோப்பிய சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பியுள்ள நாட்டிய நடிகை வைஜயந்திமாலா பத்திரிகை நிருபாகளுக்கு அளித்த விருந்து—பேட்டி ஒன்றின் போது ருஷிய மொழியில் அழகாகப் பாடிக் காட்டினர்.

தாம் சென்ற நாடுகளில் எல்லாம் மக்கள் தம்மீது அபார அன்பு செலுத்தியதாக அவர் நிருபர்களிடம் தெரிவித்தார். தமது அனுபவங்களையும் கூறினர்.

## வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்தல்

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே




● ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக் கூடிய வெருந்தி
● மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
● [illegible] பூராகவும் விற்பனையாகிறது.
● உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினீயரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனைச் சித்திரம்:

# நான் செய்ததை அல்ல, செய்யத் தவறிய கடமைகளையே நீ செய்

## அன்பு ஆட்சி நடக்கட்டும்

## பாரபட்சம் காட்டும் கொள்கை ஒழியட்டும்

### புதிய பிரதமருக்கு மாஜிப் பிரதமர் கடிதம்

என் அன்பின் தஹநா யககு,

வணக்கம். இது என்னுடைய முதற் கடிதம். சிறிமாவோவுக்கும் குழந்தைகளுக்கும் கூட இனிமேல் தான் எழுதப்போகிறேன்.

பரலோகத்திலே பரமன் முதல் பரலோகப் பிரஜைகள் அனைவரும் நல்ல சுகம். அதுபோல ஈழத்திருநாட்டு மக்களின் சுகத்துக்காக பரமனின் பக்கத்திலிருந்தே வேண்டுதல் செய்கிறேன்.

தஹநா, பரலோகத்தாரின் பண்பை என்னவென்று கூறுவது! நான் பரலோகத்தின் வாசற்படியில் காலடி வைத்தபோது திரு வன்னியசிங்கம் என்னை மலர்ந்த முகத்தோடு "வருக வருக" என்று வரவேற்றார். அவர் உள்ளத்திலே கள்ளம் இருப்பதாக எள்ளளவும் தெரியவில்லை.

அவருக்குப் பக்கத்திலே திரு டி. எஸ். சேனநாயகாவும் சிரித்த முகத்தோடு நின்றுகொண்டிருந்தார். அவர் தனது மகன் டட்லி சேனநாயகாவின் சுகத்தைக் கேட்டார்.

#### பிரச்னை இல்லை

பரலோகத்திலே மக்கள் பாகுபாடின்றி வாழ்வதைப் பார்க்கும்போது ஈழத் திருநாட்டிலே நான் செய்த தவறுகளை எண்ணி எண்ணி வருந்த வேண்டி இருக்கிறது. இங்கே மொழிப் பிரச்னை இல்லை. தமிழர் சிங்களவர் என்ற பாகுபாடு மருந்துக்குக் கூட இல்லை.

#### அன்புதான் ஆயுதம்

இங்கே இராணுவப்படை கிடையாது. அதனால் இங்கு வீரர்கள் இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய ஆயுதம் அன்பு. அன்பென்ற ஆயுதத்தால் அனைவரின் அகத்தையும் அபகரித்து விடுகிறார்கள். இவற்றையெல்லாம் நான் பார்க்கும்போது ஈழ நாட்டிலே அவசரகால நிலைமை 58-ல் நான் செய்த தவறுகளை நினைக்காமல் இருக்க முடியவில்லை.

#### தவறு செய்தேன்

நமது சிங்கள மக்களால் எத்தனை தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்! எத்தனை தமிழ் மக்கள் வாழ்விழந்து வளமிழந்து வகையற்றுத் தவித்தனர்! எத்தனை பெண்களின் பெண்மை பறிபோயிற்று! எத்தனை கன்னியர் கற்பிழந்தனர்! நான் நினைத்திருந்தால் அவற்றை முன்பே தடுத்திருக்கலாம். ஆனால் தவறு செய்துவிட்டேன்.

உதயகுமார்

#### மன்னிப்பு கிடைத்தது

இந்தக் குற்றங்களெல்லாம் பரலோகத்தில் என் மேல் சுமத்தப்பட்டன. ஆனால் என்னை மன்னித்துவிட்டார்கள். காரணம் இந்தத் தவறுக்கெல்லாம் நான் மாத்திரமல்ல, என்னைச் சார்ந்திருந்த துவேஷக் கொள்கை படைத்தவர்களும், முக்கியமாக புத்தரின் புனிதத் தன்மையைக் கெடுத்துக் கொண்டிருக்கும் பிக்குகளும் தான் இதற்குக் காரணம் என்று கூறினார்கள்.

#### புத்தர் கண்ணீர்

இது எவ்வளவு உண்மை! இந்த உண்மையையுணர்ந்துதான் இங்கே கௌதம புத்தர் கண்ணீர் விடுகிறார். இடையிட்டு அவர் பாத கமலங்களைச் சேவிக்கப் புகுந்த என் கண்களும் குளமாயின.

"நான் கொல்லாமையைப் போதித்தேன் ஆனால் அவர்கள்—பௌத்தர்கள் என் கொள்கைக் கெதிராக நடக்கிறார்கள். இந்தக் கொள்கையற்ற செயலால் பூலோகத்தில் எனது புனிதத்தன்மை கெட்டுவிடும்போல் இருக்கிறது" என்று புலம்பி அவர் கண்ணீர் விடும் காட்சியைப் பார்க்கும்போது, ஐயோ தஹநா, தாங்க முடியாத வேதனை என் உள்ளத்தை வாட்டுகிறது.

#### காந்தி வந்தார்

நல்ல வேளையாக உலக உத்தமர் காந்தித்தாத்தா என் அருகே வந்தார். என்னைத் தேற்றிவிட்டு, "எனது தம்பி செல்வநாயகம் சுகமாய் இருக்கிறாரா?" என்று கேட்டார். நான் பிரமித்துவிட்டேன்.

ஆம், ஈழத்தின் எதிர்காலக் காந்தித்தாத்தா திரு.செல்வநாயகம் என்று பரலோகத்தில் எல்லோரும் பேசிக்கொள்ளுகிறார்கள்.

#### தமிழர் பண்பு

தமிழர்கள் எவ்வளவு பண்பாடு உடையவர்கள் என்று எனக்கு முன்பே தெரியும். என்ன செய்வது கேட்பார் பேச்சைக் கேட்டுக் கெட்டுவிட்டேன். பூலோகத்தில் என் உயிரற்ற உடலைச் சுற்றித் தமிழ் மக்கள் செய்த அஞ்சலியை, பரலோகத்து ஒற்றர்கள் என்னிடம் கூறியபோது என்னால் கண்ணீர் விடாமல்இருக்க முடியவில்லை.

அவர்கள் எதிரியையும் நண்பனாகக் கருதும் இயல்புடையவர்கள். இல்லாவிட்டால் என் பிணத்தைச் சுற்றி நின்று கண்ணீர் விடுவார்களா? அவர்கள் கண்ணீர் விடுமளவுக்கு நான் அவர்களுக்கு என்ன நன்மையைச் செய்தேன்? அது அவர்களின் பண்பு; பரந்த குணம்; உயர்ந்த எண்ணம்.

தஹநா, இவற்றை எல்லாம் நன்றாக எண்ணிப்பார். உன்னைச் சுற்றி ஒரு முறை பார்த்துக்கொள், உண்மை புலப்படும். நீ ஈழத் திருநாட்டின் பிரதம மந்திரியாகிவிட்டாய். நாட்டு மக்கள் உன்கையில் அடைக்கலம்.

நான் செய்துவிட்ட தவறை நீயும் செய்து விடாதே. நான் செய்ததை அல்ல, செய்யத் தவறியவற்றையே நீ செய்து நல்ல பெயர் எடு. மக்கள் பாகுபாடின்றி இன்புற்று வாழ வழி வகுக்க வேண்டும். ஈழத்திருநாட்டு மக்கள் சிங்களவர் தமிழர் என்ற பாகுபாடின்றி வாழ வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பாகுபாடு பாரபட்சம் காட்டினால் நாம் பண்பு கெட்டவர்களாகிவிடுவோம் என்பதை மறந்து விடாதே. மீண்டும் ஒரு முறை சொல்லுகிறேன், நான் செய்யத் தவறிய கடமைகளை நீ செய்ய வேண்டும்.

தஹநா, அன்பின் நண்பனே, நண்பன் என்ற முறையிலும் உன்னிடம் கரம் குவித்து வேண்டுகிறேன்—ஈழத் திருநாட்டு மக்களின் வாழ்வு உன் கையில் இருக்கிறது. அவர்களை நல் வழியில் நடத்துவாயாக. இதுவே எனது வேண்டுகோள்.

#### வன்னியசிங்கம்

அதோ வன்னியசிங்கம் வருகிறார் இன்று பாரதக் கலை மேதை என். எஸ். கிருஷ்ணனின் நகைச்சுவை நாடகம் இருக்கிறது, பார்க்க வேண்டும். அதற்குத்தான் திரு வன்னியசிங்கம் வருகிறார்போல் இருக்கிறது. நானும் போக வேண்டும். பின்னர் எல்லாம் விவரமாக எழுதுகிறேன். என் வேண்டுகோளை மறந்துவிடாதே.

—இவ்வண்ணம்!

எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா

# பயத்தின் காரணமாகவே . . .

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் வடமுனையில் உள்ள திருவேங்கடமலைவரை காற்றுச் செல்லும்; கிருமிகளும் செல்லும். அப்படியானால் என்ன நடக்கும்? கன்னியாகுமரியில் இருந்த நோய் மற்ற எல்லா இடங்களிலும் பரவிவிடும். காற்றுச் சென்ற திக்கில் உள்ள ஊர்களில் வரிசைக் கிரமப்படி தான் நோயும் பரவும். இதனால் பலர் சாவார்கள். இப்படி நடக்கவில்லை என்று யாராலும் சொல்ல முடியுமா?

"இதை எப்படி முன்னோர்கள் அர்த்தம் செய்துகொண்டார்கள் என்றால் சாவுக்கு பொறுப்பாக ஒரு கடவுள் இருக்கிறார்; அவர் தெற்கில் உள்ளார் என்றுதான். தெற்கில் உள்ள கடவுளாதலால் தென்னவர் கோன் என்றார்கள். சாவுக்கு பொறுப்பான கடவுன் ஆதலால் கூற்றுவன்—யமன் என்றார்கள். இப்படித்தான் யமன் தோற்றுவிக்கப்பட்டான் என்று அறிவு ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு விஷயங்களை நோக்கும் அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆக, அறிவு மந்தத்தாலும் அச்சத்தாலுமே மனிதன் கடவுளைப் படைத்தான் என்பது அறிஞர்கள் கருத்து.

"இனி தலைப்பில் உள்ள மற்ற விஷயம் 'வாழ்வு' என்பது. 'வாழ்வு' என்றால் என்ன? இதுபற்றி இரண்டு கருத்துக்கள் உண்டு. ஒன்று சமயக் கருத்து. மற்றொன்று லோகாயதக் கருத்து. செத்தபின் சிவலோகம் போவது பற்றியும் கடவுளோடு ஐக்கியப்படுவதுபற்றியும் பேசப்படுவது சமயக் கருத்து. அதாவது மறுவுலக வாழ்க்கைபற்றியது அது. லோகாயதக் கருத்து அதற்கு முற்றும் மாறுபட்டது. இந்த உலகத்தில மட்டும் இன்புற, பண்புற, இசைபட வாழ வேண்டும் என்பது லோகாயதக் கருத்து. இரண்டும் இரண்டு துருவங்கள் என்று சொல்லலாம். எதைக்கொள்ளுவது; எதைத் தள்ளுவது என்ற கவலை வேண்டியதில்லை.

"இரண்டுக்கும் இடைப்பட்ட ஒன்று இருக்கிறது. அதுவும் ஒரு மதம்தான். எதற்கும் பதில் சொல்லுகிறது அந்த மதம். இடையதம் அது. நடுப்பாதை வகுக்கும் நலமான சமயம். அதுதான் வள்ளுவம். வள்ளுவத்துக்கு வடிவம் தரும் நூல் குறள் நூல், அது உலகிலுள்ள ஒப்பற்ற நூல். தகராறுக்கு அப்பாற்பட்ட சமயத்தைப்பற்றிச் சொல்லுகிறது. எந்தச் சமய நம்பிக்கை உடையாரும் ஆராய்ச்சித் துறையினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்களைச் சொல்லும் நூல் குறள். தெய்வத்தைப்பற்றிச் சொல்வதோடு அது நின்றுவிடவில்லை. மனிதன் தெய்வமாகிவிடவும் வழி சொல்லுகிறது. அது கூறுகிறது, 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்று. ஏபிரகாம் லிங்கன், புத்தர், மகாத்மா காந்தி ஆகியோர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர்கள்.

"எல்லாச் சமயங்களினதும் அடிப்படைக் கருத்துக்களை குறளிலே காணலாம். அன்பு. இரக்கம். இன்காருண்யம் இவைதான் சைவத்தின் மூலாதாரக் கொள்கைகள். இவை குறளிலே வலியுறுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். 'அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு'. 'மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப தன்னுயிர் அஞ்சும் வினை', 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்' என்பது குறள்; சுருங்கச் சொன்னால் சைவக் கருத்து வள்ளுவத்தில் வடித்துத் தரப்பட்டிருக்கிறது.

"இஸ்லாம் மதத்தின் முக்கிய கொள்கை சகோதரத்துவம். அது குறளிலே எவ்வளவு அழகாகத் தரப்பட்டிருக்கிறது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமை யான்' என்கிறது குறள்.

"பௌத்த மதப் பற்றற்ற தன்மையை பெரிதாக மதிக்கிறது. அதையும் ... குறளிலே. 'பற்றி ... பைகள் பற்றினைப் பற்றி விடாஅதவர்க்கு' என்பது குறள்.

"இனி கிறிஸ்தவ மதத்தை எடுத்துக்கொண்டால், மன்னிப்பு, பொறுமை ஆகிய பண்புகளை அது வலியுறுத்துகிறது. இந்தப் பண்புகள் குறளில் வற்புறுத்தப்பட்டிருப்பதுபோன்று வேறு எங்கும் எதிலும் வற்புறுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்' இன்னும் 'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை' இது குறள்.

"கடைசியாக இதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். சமய பேதம், சாதி பேதம், தீண்டாமைபோன்ற சாபத்தீடுகளையெல்லாம் வள்ளுவத்தால் ஒழிக்கலாம். அது எல்லோருக்கும் ஏற்புடையது. குறிப்பாக இளைஞர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'—இதையும் குறள்தான் சொல்லுகிறது"—இவ்வாறு திரு சிவநாயகம் பேசி முடித்தார்.

[தொகுத்தவர்; கே. கே. ஆர்.]


பணம்! சேமியுங்கள்!! பணம்!!!

இன்றே நாஷனல் பாட்டரிகளைப் பாவிக்க ஆரம்பித்து அதிக லாபம் பெற்று ஆனந்தியுங்கள்.





நீடியகாலம் பாவிக்கிறது

விலையோ மிகக் குறைவு

இறக்குமதியாளர்கள்:

எஸ். யூ. முகம்மது ஹாஜியார்,

20, டாம் வீதி, கொழும்பு. போன்: 7653 ★ 143, மெயின்வீதி, காலி.போன்:525.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ் சகோதரிகள் சென்னையில் ஆடுகிறார்கள்

## மியூஸிக் அக்கடமி இடமளித்து ஈழத்தை பெருமைபடுத்துகிறது

யாழ்ப்பாணம் சகோதரிகள் என்று அழைக்கப்படும் நீலா, தயா, ஈசா (லிங்கேஸ்) ஆகியோர் சென்னையிலுள்ள புகழ் பெற்ற கலை ஸ்தாபனமான மியூஸிக் அக்கடமியில் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் நடனமாடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக அறிய வருகிறது.

மியூஸிக் அக்கடமியில் பொதுவாகக் கலைத் திறமை படைத்தவர்களுக்கே இடமளிக்கப்படுகிறது. பாடகர்களோ, நாட்டியக்காரரோ, வாத்திய இசைக் கலைஞர்களோ அக்கடமியில் தமக்கு இடம் கிடைப்பதைக் கிடைத்தற்கரிய பெருவாய்ப்பாகவே கொள்ளுகிறார்கள். யாழ் சகோதரிகளும் அப்படியே என்று அவர்களை அங்கு அழைத்துச் செல்லும் முக்கியஸ்தர்களுள் ஒருவரான திருமதி சச்சிதானந்தா சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

"அக்கடமியில், இப்போது தொடங்கியிருக்கும் 'கலை சீஸனில்' இடமளிக்க அக்கடமி முன்வந்ததானது சகோதரிகளுக்குமட்டும் பெருமை தருவதல்ல. ஈழத் தமிழ்ப் பேசும் மக்கள் அத்தனை பேருக்குமே அது பெருமையாகும். ஈழத்து நடனக் கலைஞர்களும் அக்கடமியால் கௌரவிக்கப் படவிருக்கிறார்கள் என்றால் ஈழத்தவர் எவர்தான் இறும்பூ செய்தாதிருக்க முடியும்?" என்று அது விஷயம் தெரிந்தோர் அனைவரும் அபிப்பிராயம்தெரிவிக்கிறார்கள்.

### ஐந்து இடங்களில் நிகழ்ச்சிகள்

மியூஸிக் அக்கடமி தவிர தமிழ் நாட்டின் வேறு ஐந்து ஸ்தாபனங்களிலும் யாழ் சகோதரிகளின் நடனநிகழ்ச்சிகள் நடைபெறுமென்று தெரிய வருகிறது.

(1) அண்ணாமலை தமிழிசை மன்றம் (2) நாஷனல் ஆர்ட் கம்பைன்ஸ் (3) மைலாப்பூர் கவின் கலை மன்றம் (4) இந்தியன் இன்ஸ்டிடியூட் ஒவ் பைன் ஆர்ட் (5) ஆர். ஆர். சபா என்ற ஐந்துமே அந்த ஸ்தாபனங்களாகும்.

### பம்பாய்ப் பயணம்

தமிழ் நாட்டு நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு யாழ்ப்பாணம் சகோதரிகள் பம்பாய் சென்று அங்கும் சில நடன நிகழ்ச்சிகள் நடத்த உத்தேசித்திருப்பதாகவும் அறிய வருகிறது.

சகோதரிகள் மூவருள்ளும் தயாவும் ஈசாவும் நீலாவின் (நீலா சத்தியலிங்கம்) மாணவிகளாவர்.

## கவிஞர்கள் நடித்த படங்கள்!

**கவிஞர் கண்ணதாசன்**

இவர் நேஷனல் பிக்சரின், 'பராசக்தி'யில் நடித்துள்ளார்.

**கொத்தமங்கலம் சுப்பு**

ஜெமினியில் நிரந்தரமாக இருக்கும் இவர் 'மிஸ் மாலினி'. 'ஔவையார்', 'நந்தனார்', 'தாசி அபரஞ்சி' போன்ற பல ஜெமினிப் படங்களில் ஹாஸ்ய வேடந் தாங்கி பிரமாதமாக நடித்துள்ளார்.

**தஞ்சை ராமையாதாஸ்**

இவர் 'குணசுந்தரி', வாழ்க்கை ஒப்பந்தம்' போன்ற தமிழ்ப் படங்களில் நடித்துள்ளார்.

**கே. பி. காமாட்சிசுந்தரம்**

காலஞ்சென்ற இவர், என். எஸ். கே. நடித்த 'அலிபாபாவும் 40 திருடர்கள்', 'பராசக்தி', நல்லதம்பி', 'கிருஷ்ண பக்தி போன்ற படங்களில் வில்லனாகவும், விகடனாகவும் வந்து சக்கை போடு போட்டுள்ளார்.

**கம்பதாசன்**

இவர் காலம் சென்ற பி. யு. சின்னப்பா நடித்த 'மங்கையர்க்கரசி' என்ற படத்தில் நடித்துள்ளார்.

## பின்னணி பாடகிகள் நடித்த படங்கள்!

**எம். எல். வசந்தகுமாரி**

இவர் கிருஷ்ணா பிக்சரின் முதல் படமான 'கிருஷ்ண பக்தி'யில் தோன்றிப் பாடி நடித்திருக்கிறார்.

**பி. ஏ. பெரியநாயகி**

இவர் 'விசித்திர வனிதா' 'ஊர்வசியின் காதல்', கிருஷ்ணபக்தி' முதலான படங்களில் நடித்துள்ளார்.

**டி. வி. ரத்தினம்**

இவர் 'பக்த சோதா', 'கண்ணகி' போன்ற படங்களில் நடித்துள்ளார்.

**ஜிக்கி**

இவர், 'தோஷி' 'பந்துலம்மா' போன்ற தெலுங்குப் படங்களில் நடித்துள்ளார்.



"ஜில்லென்ற கடற் காற்று மெல்ல வந்து தேகத்தைத் தழுவும்போது, அட்டா சொல்லவும் வேண்டுமா, சொர்க்க போகம் கிடைக்கிறது. பட்டு மணலிலே நீச்சலுடையில் இருந்து வெயில் குளிப்பதும் வெகு குஷிதான். இந்த இன்பம் கிடைக்குமா என்று ஏங்குகிறீர்களா?" என்று கேட்கிறார் இந்த அழகு நடிகை ஆங்கிலப் படக் காட்சி.

பட விமர்சனம்:

# பாண்டித்தேவன்

பெயரைப் பார்த்தால் சரித்திரப் படம் போலத் தெரிகிறதல்லவா. அப்படி ஒன்றும் இல்லை. அசல் சமூகப் படம் பாண்டித் தேவன். பிரபல டைரக்டர் திரு கே. சுப்பிரமணியம் கதை எழுதித் தயாரித்தது. அவருடைய டைரக்ஷனிலேயே படமும் உருவாகியது.

### பல அம்சங்கள்

நாட்டுப் பற்று மிக்க ஒரு நல்லவனுடைய வாழ்க்கை சித்தரிக்கப்படுகிறது. அணைக் கட்டுதல், கள்ள மார்க்கட் பதுக்கல், கொலை சூது, மோசடி, ஆள்மாறாட்டம், தேசிய விபத்து எல்லாம் மோதி அடித்துக் கொண்டு படத்தில் வருகின்றன. காதல் கட்டிப் புரள்கிறது. இத்தனைக்கும் மத்தியில் அந்த நல்லவனுடைய இலட்சியம் நாட்டுக்கு நன்மையாக முடிகிறது. டைரக்டர் சுப்பிரமணியத்துக்கும் நிம்மதி தருகிறது. அதாவது நன்று செய்தோம் என்றநிம்மதி.

### நடிப்பு

சந்திரபாபு, பாலச்சந்திரன், ராஜசுலோசனா, பி. எஸ். சரோஜா ஆகியோர் இப்படத்தில் முக்கிய பாத்திரங்கள் தாங்கி நடிக்கிறார்கள். மற்றும் டி. பி. முத்துலட்சுமி, என். எஸ் கே. மதுரம், சஹஸ்ரநாமம், சிவதாணு முதலானோரையும் பார்க்க முடிகிறது. நடிப்பைப்பற்றி ஒரே வார்த்தையில் சொல்வதானால் 'எல்லோரும் வழக்கம் போலத்தான்' என்றே கூற முடிகிறது.

### நடனம் பாட்டு

சந்திரபாபுவின் ரொக்-அன்-ரோல் நடனமும், டி. வி. சுந்தரமூர்த்தி, சம்பராஜ் ஆகியோரின் புரவி நடனமும், சிறப்பாக இருக்கின்றன. பாடல்கள் ரஞ்சகமானவை, பட்டுக்கோட்டையாரின் பாடல்கள் ரீங்காரமிடுகின்றன. உரையாடல்

(13-ம் பக்கம் பார்க்க)



"செழியன் துறவு" என்ற நாடகத்தில் பங்குபற்றிய மாணவர்கள்.

வரலாற்று நாடகம்

# செழியன் துறவு

திரு அ. ச. ஞானசம்பந்தர் எழுதிய "செழியன் துறவு" என்ற வரலாற்று நாடகத்தை அர்ச். பெனடிக்ட் கல்லூரித் தமிழ் சங்க மாணவர்கள் அணிமையில் நடந்த மேற்படி சங்க ஆண்டு விழாவின் போது நடித்துக் காண்பித்தார்கள்.

"நடிப்பவர்கள் மாணவர்கள். ஆகவே குற்றம் களைந்து குணம் கொள்வது அன்பர் கடமை" என்று நாடகம் தொடங்கு முன்னரே அறிவிக்கப்பட்டது. குற்றத்தை எல்லாம் களைந்துவிட்டுப் பார்க்கும்போது மிச்சமாக ஏதாவது தெரிந்தால் அதற்காக மாணவர்களைப் பாராட்டித்தானே ஆக வேண்டும். நாடக நீதிபதிகள் அந்த வேலையைச் செய்தார்கள்.

### நடிப்பு


இரும்பொறையாகநடித்த பி. சந்திரசேகருக்கு முதல் பரிசையும் நெடுஞ்செழியனாக நடித்த இரா. நாராயணசாமிக்கு இரண்டாம் பரிசையும் வில்லவன் கோதையாக நடித்த கிறிஸ்தோபர் பர்னாந்துவுக்கு மூன்றாவது பரிசையும் நல்லினியாக நடித்த ரூபேர்ட் சத்தியராசாவுக்கு நான்காவது பரிசையும் அளிக்கலாம் என்றுதீர்ப்புக் கூறினார்கள்.

திரு நவசோதி எழுதிய "நடக்கிறது நடக்கும்" என்ற நகைச்சுவை நாடகமும் நடித்துக் காண்பித்தார்கள்.

### பரிசில் வழங்கல்

நாடகங்களுக்கு முன்னர் பேச்சுப் போட்டி, கட்டு [illegible]

(13-ம் பக்கம் பார்க்க)



பிடியிலே தளர்ச்சி கண்டாலும் புன்னகை புலப்படுத்துகிற தல்லவா காதல் ஆழத்தை. ? இலங்கை தேசிய கலை அரங்கத்தின் "இன்பக் கனவு" என்ற நாடகத்தில் கதாநாயகன் (கண்ணன்) எஸ். வி. பத்மநாதனும் கதாநாயகி (சிவகாமி) ஏ. எம். கலாராணியும். கடந்த ஞாயிற்றுக்கிழமை இந் நாடகம் நடைபெற்றது.

நாடக விமர்சனம் அடுத்த வாரம் வெளிவரும்.



இலட்சிய நடிகர் எதற்காக மைனாவதியின் காலைப் பிடிக்கிறாரோ தெரியவில்லை "கல்யாணிக்கு கல்யாணம்" என்ற படத்தில் வருகிறது இக் கட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை வானொலிக் கலை விழா

• தீபாவளித் தினத்தன்றும் அதற்கு முந்திய தினமும் இலங்கை வானொலித் தமிழ்ப் பகுதியினர் திருமலையில் நடத்திய கலை விழா அதை ஏற்பாடு செய்தவர்களுக்கு பாராட்டை வாங்கித் தரும் வெற்றி விழாவே, சந்தேகமில்லை.

### இசை

குறிப்பாக இசை நிகழ்ச்சிகள் மிக்க நன்முக இருந்தன. செல்விகள் பூமணி இராசரத்தினம், நேசம்மா துரைராசா ஆகியோரின் பாட்டுகள், குறத்தி நடனத்துக்கு பாடப்பட்ட பாடல், பாவர் பாட்டு முதலியன உள்ளத்தைத் தொடுவனவாய் அமைந்திருந்தன. மிருதங்கம் இசை நிகழ்ச்சிகளுக்கு உயிர் ஊட்டியது.

### ஆட்டம்

ஆட்டங்களைப் பொறுத்த வரையில் கரக ஆட்டம் கண்டோரை மயக்கியது எனலாம். குறத்தி நடனமும் அப்படியே.

### நாடகம்

இரண்டு நாடகங்களும் கலை விழாவில் இடம்பெற்றன. "சேக்கிரட்டீஸ்" என்ற நாடகம் கருத்துக்காகவும் மற்றது ஹாஸ்யத்துக்காகவும் என்று தெரிகிறது. இரண்டும் இரண்டு நாடகங்களிலும் இருந்தன. ஆனல் இரண்டாவது நாடகத்தில் ஒரு குறிப்பிட்ட வகுப்பு மக்களைப் புண்படுத்தக் கூடிய சில குறிப்புகள் சொல்லப் பட்டுவிட்டன. இன்னும், அருவருக்கத் தக்கனவும மேடையில் நின்று சொல்லுவதற்கும் ஒலிபரப்புவதற்கும் லாயக்கற்றனவுமான சில பதங்களும் உபயோகிக்கப்பட்டுவிட்டன. இக்குறைபாடுகள் தவிர்க்கப்பட்டிருக்குமாயின் அந்த நாடகத்தின் சிறப்பு இன்னும பன்மடங்காகியிருக்கும்.

### ஒலிபரப்புச் சிறப்பு

ஒலிபரப்பு மிகத் தெளிவாக இருந்ததையும் இங்கு குறிப்பிட வேண்டும். பொதுவாக வெளியூர்களில் நடத்தும் நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி அஞ்சல் செய்யும் போது நிகழ்ச்சிகளை முந்திக் கொண்டு 'கரபுர' சத்தந்தான் வருவது வழக்கம். இம்முறை அதெல்லாம் இல்லை. மொத்தத்தில் திருமலை எம். பி திரு என். ஆர். இராஜவரோதயம், திருமலை இந்துக் கல்லூரி அதிபர் திரு அம்பலவாணவர் மற்றும் திருமலைப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், பொதுமக்களின் ஒத்துழைப்போடு கலை விழாவை அளித்த இலங்கை வானொலிப் பதில் தமிழ் நிகழ்ச்சி அமைப்பாளர் திரு பாலசுப்பிரமணிய ஐயர் பாராட்டுக்கு உரியவராகிறார். இன்னும் இதுபோன்ற கலை விழாக்களை அவர் ஒழுங்கு செய்து தர வேண்டும்.

---

## இலட்சிய நடிகரோடு புதுமுகம் மீனு குமாரி

"யார் நீ?"-இலட்சிய நடிகர் கேட்டார்.

• "நானா? பெண்! தெரியவில்லை?" இப்படிக் குத்தலாகச் சொன்னார் மீனு குமாரி.

"ஓகோ அப்படீங்களா?! ஆணு ஒரு பெண்ணுக்கு வேண்டிய—" என்று அவர் முடிப்பதற்குள், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு அத்தனையும் உண்டு!" என்று முடித்தார் மீனு குமாரி.

"இருக்கும்! இருக்கும்! ஆனு வெளியே வரும்போது அதெல்லாம் வீட்டிலே அலமாரியிலே வச்சுப் பூட்டிட்டு வருவீங்களாக்கும்"

"போதும் நிறுத்தங்க சார்! ஒரு பெண் வந்து உட்கார்ந்தா அவுங்களுக்கு முதவிடம் கொடுத்துவிட்டு ஒதுங்கிக்கொள்ள வேண்டாம்?"

"உனக்கு முதலிடம் கொடுத்ததினுலேதானே எனக்கு இரண்டாம் இடம் கூட கிடைக்காமே கீழே விழுந்தேன்!" "ஷட் அப்! இரு, காலேஜ் ஸ்டுடன்ட்டுகிட்டே எப்படிப் பேசணும்னுகூட தெரியவில்லை. கொஞ்சம்கூட 'மேனர்ஸ்' கிடையாது!"

"அம்மோவ்! இங்கே பாத்துப் பேசுங்க! நீங்கள்தான் என்னமோ என்னை பினாட்பாரம் மைனர்னு நினைச்சிகிட்டு 'மேனர்ஸ்' இல்லாமே பேசுறீங்க! கொஞ்ச நேரம் 'ரெஸ்ட்' எடுக்கலாம்னு வந்தா இந்த மாதிரித் தொல்லை பொறுக்க முடியவில்லை"

இப்படி நடந்தது சங்கதி. இலட்சிய நடிகர் "தங்கரத்தினம்" என்ற பெயரில் எடுக்கும் படத்துக்கான காட்சி இது. மீனு குமாரி தனுக்கு மினுக்குத் தையலாகவும் இலட்சிய நடிகர் கட்டிளங் காளையாகவும் நடிக்கிறார்கள். மீனு குமாரி புது முகம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எம். ஏ. திருமுகம் படத்தை டைரக்ட் செய்து வருகிறார். கதை வசனம் இராதா மணுளன்.

---

## சட்டங்களை . . .

(8-ம் பக்கத் தொடர்ச்சி)
இலாகாவில் திரு. எல். கே. ஈ. செனவிரத்தின இருக்கின்றார். தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவோம் என்று கௌரவ பிரதமர் கூறுவது உண்மையானல், முதலில் இந்த உத்தியோகத்தரை நீக்கும்படி, அநீதியிழைக்கப்பட்ட ஓரினத்தின் சார்பாக நான் கேட்கின்றேன்.

தமிழினத்தினதும், தமிழ் மொழியினதும் உரிமையைப் பறித்துவிட்டு, தமிழினத்தின் குரல்வளையை நெரித்துக்கொண்டிருக்கும் சட்டங்களை ஒரு சிறிதும் தளர்த்தாமல், "நம்புங்கள்" என்று இந்த அரசாங்கம் கூறுவதில் அர்த்தமுண்டா?

அரைமந்திரிப் பதவிகளைக் கொடுத்து ஒரு சிலரைக் கொள்கை மாறச் செய்யலாம். ஆனல் தமிழினம் தனியாட்சி பெறும்வரை எந்தப் பசப்பு வார்த்தைகளாலும் அது ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்க மாட்டாது; ஏமாறத்தயாராகவுமில்லையென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறி, "எமது உரிமைகளைப் பறிக்கின்ற இந்த அரசாங்கத்தை எதிர்க்கிறேம், இந்த அரசாங்கத்தின் மீது நாங்கள் நம்பிக்கை யிழந்துவிட்டோம்" என்பதை இந்தச் சபைக்குத் தமிழ் மக்களின் சார்பாக, தமிழரசுக் கட்சியின் சார்பாகக் கூறி என் பேச்சை முடிக்கின்றேன்.

---

## பாகவதர் மறைவு

எம். கே. தியாகராஜ பாகவதர் 1-11-59 ஞாயிறு மாலை 6 மணிக்கு சென்னை அரசாங்க ஆஸ்பத்திரியில் காலமானர். அவருக்கு வயது 49 ஆகிறது. தென்னிந்திய சினிமா வானில் ஒப்பற்ற ஒரு ஸ்தானத்தைக் கைப்பற்றியிருந்த இவர் கடந்த சில வருடங்களாக நீரழிவு நோயினல் பீடிக்கப்பட்டிருந்தார். சென்ற மாதம் 26ந் திகதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

1910ம் ஆண்டு மார்ச் 1ந் தேதி பிறந்தவர், பல நாடகங்களில் நடித்தவர்; 1934ம் ஆண்டு பவளக்கொடி சினிமாவில் முதன்முதலில் நடித்தார். 2 பெண்களும் ஒரு ஆணும் இவரது மக்கள்.


இறந்து சிறிது நேரத்துக்கெல்லாம் பிரேதம் திருச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. திருச்சிக்கடுத்த மாயவரம் இவரது சொந்த ஊராகும்.

---


2-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

முருகன் (இந்துப்பிட்டி) ஒடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்) லிபர்ட்டி (பதுளை)

ஆகிய தியேட்டர்களில்



பாக்கிய தேவதை

தன் தங்கையின் நல் வாழ்வுக்காக தன் வாழ்வை தியாகம் செய்தாள் நங்கை

ஜெமினி கணேசன், சாவித்திரி, நம்பியார், ராஜசுலோசன, கோபால் நடித்தது

பின்னணி: கண்டசாலா — திருச்சி லோகநாதன் — ஜமுனுராணி — சுசீலா.



3-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் — ரெக்ஸி ஆகிய தியேட்டர்களில்



எஸ். எஸ். ராஜேந்திரன், எம். என். ராஜம், ஜி. வரலக்ஷ்மி, தாம்பரம் லலிதா நடித்த

ஏ. வி. எம். தயாரிப்பான

மாமியார் மெச்சிய மருமகள்

செல்லமஹால் திரையில்

பி. எஸ். சரோஜா, டி. கே. பாலச்சந்திரன், ராகினி, சந்திரபாபு, ராஜசுலோசன நடித்த



பாண்டித்தேவன்


---

## செழியன் துறவு

(12-ம் பக்கத் தொடர்ச்சி)
றிபெற்றவர்களுக்கு திருமதி வெ. சங்கரலிங்கத்தினல் பரிசில்கள் வழங்கப்பட்டன.

விழாவுக்கு மாவட்ட வித்தியாதரிசி திரு. வை. சங்கரலிங்கம் பிரதம விருந்தினராக வந்திருந்து சொற்பொழிவாற்றினர். கல்லூரி அதிபரும், ஆசிரியர் வித்துவான் தீ. மே. யோ. வேதநாயகமும் விழாவில் பேசினூர்கள்.

---

## பாண்டித்தேவன்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)
மூலவை ராஜமாணிக்கம் எழுதியது. ஆங்காங்கே எதிர்காட்சிகளுக்கு "சூடு" விழுகிறது. மற்றப்படி கன்தவை ஒட்டப் படமாடுகிறது. படப்பிடிப்பு டைரக்ஷன்-இரண்டுமே நலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்பழைப்பு

வளர்மதி-சுதந்திரன் மாணவர் மன்ற அங்கத்தவர்களே! அன்பொடு பண்பு மிகு மாணவ மாணவிகளே! சுதந்திரன் மாமாவின் சுந்தர மருமக்களே! உங்கள் எல்லோர்க்கும் என் உளங்கனிந்த வணக்கங்கள் என்றென்றும் உரியதாக. இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரலான சுதந்திரன் வார இதழில் பதினன்காம் பக்கத்தினை "வளர்மதி" என்னும் பெயரில் மாணவர்ராகிய நமக்கு ஒதுக்கிவிட்டார் ஆசிரியர். அவரைப் போற்ற வேண்டும். இப் பகுதி ஆரம்பமாகி எத்தனையோ ஆண்டுகளாயின. நமக்கென்றோர் ஒப்பும் மிக்குமற்ற—அன்பும் பண்பும் நிறைந்த சுதந்திரன் மாமா கிடைத்ததைப் பற்றி மகிழ்ச்சியடைய வேண்டும். இதுவரை எமக்குப் பல நல்லுரைகள் கூறி எழுத்தாளர் உலகிற்கு வழி காட்டிய நம் சுதந்திரன் மாமாவுக்கு நாம் என்றென்றும் நன்றியுடையோராய் இருத்தல் வேண்டும். உங்கள் சார்பில் இன்று நம் மாமாவுக்கு நான் எனது வணக்கத்தினைச் செலுத்திக் கொண்டு உங்களனைவருக்கும் ஓர் வேண்டுகோள் விடுக்கின்றேன். என் குரலுக்குச் செவி சாய்ப்பீர்கள் என நம்புகின்றேன்.

இது மொழியாராய்ச்சிக் காலம். உலகின் ஆதிமொழிகளில் நம் தமிழ் மொழியும் ஒன்றென்பது ஆய்ந்தோர் முடிவு. அதிலும் இலக்கிய இலக்கணங்கள் நிரம்பிய, எளிய, இனிய, சிறந்த, பழைய மொழி நம் தமிழ் தான் என்பர் அறிந்தோர். பல நாடுகளிலும் தமிழ் உண்டெனினும் அதற்குரிய சிறப்பை அது அடையவில்லை. நம் ஈழத்தில் தமிழ் அரசினரால் புறக்கணிக்கப்பட்டுள்ளது. தமிழரசுக்கட்சி தமிழுக்காகப் பாடுபட்டுவருவது அனைவர்க்கும் தெரியும். தற்போது "தமிழியக்கம்" என்றோர் புதிய இயக்கம் ஆரம்பமாகியுள்ளது. பல புதிய தமிழ்ப் பத்திரிகைகள் தோன்றுகின்றன. இவ்விதம் நம் ஈழத்தில் தமிழ் இனத்திடையே புதிய விழிப்பு ஏற்பட்டிருப்பது போற்றற்குரியது. இவ் வேளையில் வளர்மதி மாணவர்களாகிய நாம் சும்மாவிருத்தல் தகாது. நமது மொழி நமக்கு விழி. நம் மொழி வாழ்ந்தால், நம் இனம் வாழும்—நாடுவாழும் எனவே முதலில் நாம் நம் மொழி மீது பற்று வைக்க வேண்டும். பின்னர் மொழி வளர்க்கும் தொண்டில் ஈடுபட வேண்டும்.

உலக மொழியான ஆங்கிலத்திலும் அறிவு பெறவேண்டும். நாம் பிற மொழிச் சொற்களை அறிந்தவற்றை நீக்கித் தனித் தமிழில் எழுத முயல வேண்டும். உறுப்புற-பிழையற-அழகாக பொருளோடு—சுருக்கமாய்-பல்சுவை ததும்ப எழுதப் பழக வேண்டும். நல்ல தமிழில் நம்மவரோடு எப்போதும் எவ்விடத்தும் பேசிப் பழக வேண்டும். எவருக்காயினும் யாமெழுதும் மடலில் முகவரிகளைக் கூடத் தமிழிலேயே எழுத வேண்டும். முன்னேற்றமான சீர்திருத்தக் கருத்துக்களை எழுதிப் பரப்ப வேண்டும்.

அன்பேயே கோயில்—அறிவே தெய்வம்—அச்சமே பேய்—துறவே மந்திரம்—சங்க நூல்களே புராணங்கள்—விஞ்ஞானமே சாத்திரம்—உயிர்கள் மேல் வைக்கும் அன்பே பக்தி, என்ற உண்மைக் கருத்துக்களை உணர வேண்டும். நம்மில் இதுவரை 2600 மாணவர்கள்வரை வளர்மதியில் அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ளார்கள் என நினைக்கின்றேன். இவ்வளவு பேரும் ஒன்றுபட்டு பொறாமை-வஞ்சகம்-சினம் இல்லாமல் தூய நெஞ்சத்தோடு மொழிக்காகப் பாடுபட வேண்டும். நமக்குள் ஒரு தலைவரையும், செயலாளரையும் நாமே தெரிவு செய்து கொள்ள வேண்டும். நாம் ஆளை ஆள் பார்க்க முடியாத இடங்களில் இருப்பினும் அனைவரும் ஒரே உள்ளத்தோடு மொழி வளர்க்க வேண்டும். நம் மாணவர் மன்றம் ஈழத்தில் வலிமை மிக்கதோர் மன்றமாய் இருக்க வேண்டும்.

அன்புடைய சகோதர சகோதரிகளே! உங்களுக்கு யான் விடுக்கும் அன்பழைப்பு இதுதான். இனியும் காலதாமதம் வேண்டாம். இன்றைக்கே ஒரு முகப்பட்டு வாருங்கள்! செயலாற்றுவோம்! என்ன சரிதானு? தயாரா? இது பற்றிய கருத்துக்களை மாமாவுக்கு எழுதுவீர்களா? வணக்கம்.

—சோ. இராசேந்திரம்

# திருக்குறளில் ஒரு துளி

திருக்குறள் என்று கூறியதும் மக்கள் மனம் மகிழ்ச்சியினுல் துள்ளும். ஏன்? இந்நூல் யாவருக்கும் பொதுவான ஒரு உலகப் பொதுமறையாகும். இந்நூல் பண்டிதர்முதல் பாமரர்வரையுள்ள யாவரும் படித்து அறியக்கூடிய தன்மைவாய்ந்தது. இந்நூலுக்கு பல சிறப்புப் பெயர்கள் உண்டு. திருக்குறளை பல மொழிகளில் மொழிபெயர்த்திருக்கின்றார்கள்.

இந்நூலைப் புகழ்ந்து

"புத்தகம் நூறு புரட்டிக்,
களைப்புற்றுச்
சித்தம் கலங்கித்
திகைப்பதேன்? வித்தகன்
தெய்வப் புலவன்
திருவள்ளுவன் சொன்ன
பொய்யில் மொழி
இருக்கும் போது"

என்று ஒரு அறிஞரும்;

"அணுவைத் துளைத்தேழ்
கடலைப்
புகட்டிக் குறுகத் தறித்த
குறள்"

என்று ஒளவையாரும் மிக அழகாக பாடியுள்ளனர்.

இப்படியான பெருமை வாய்ந்த திருக்குறளில் இருந்து ஒரு தேன் துளியை எடுத்து அதில் கூறப்பட்ட அறிவுரைகளை கவனிப்போம்.

"எப்பொருள் யார்யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள்
காண்பதறிவு"

இதுவே நாம் எடுத்து ஆராயப்புகும் குறளாகும். இக்குறள் 43ம் அதிகாரமாகிய அறிவுடைமையில் மூன்ருவது குறளாக இடம் பெற்றுள்ளது இக் குறளினுடைய கருத்து யாதெனில், எவரெவர் வாயினுல் எந்தெந்தப் பொருளை சொல்லக் கேட்டாலும் அப்பொருளினுடைய உண்மையான பொருளைக் காண்பதே நமது அறிவாகும்.

நாம் ஒருவர் கூறுவதை கேட்க வேண்டும். ஆனுல் நாம் கேட்டபடியே செய்யக் கூடாது. அவர் கூறியவற்றின் குணநலன்களை ஆராய்ந்தறிந்து சரியானதா பிழையானதா என்பதை அறிந்தே நடக்க வேண்டும்.

நாம் தனியாக இருக்கும் போது ஒருவர் நம்மைக் கண்டு தாம் செய்வதுபோல் செய்யும்படி தூண்டுவாராயின், அவர் நம அறிவிலும் வயதிலும் அனுபவத்திலும் [illegible] கூறியது நமக்கு தகுந்ததா அல்லது அப்பாற்பட்டதா என்று அதன் உண்மைப் பொருளை ஆராய்ந்து அறிந்தே செய்ய வேண்டும்.

சிறியோராயினும் பெரியோராயினும் அறிவில் குறைந்தவராயினும் அறிவில் கூடியவராயினும் வேறு யாராயினும் என்னென்ன கூறினுலும் அவர்கள் கூறியதின் உண்மைப் பொருளை ஆராய்ந்து அறிந்து நடப்பதுவே அறிவுடைமையாகும்.

ஆகவே யார் யார் கூறினுலும் என்னென்ன பொருளைப்பற்றிக் கூறினுலும் அப்பொருளின் உட்கருத்தை நன்கு ஆராய்ந்து பார்த்து அதன்படி நடப்பது நமது அறிவுக்கு பொருத்தமாகும்.

ஒரு துளியில் இருப்பது மேற்கூறிய அறிவுரையாகும். அப்படியாயின் மிகுதியுள்ள குறள்களில் கூறப்பட்டிருக்கும் அறிவுரைகளை [illegible] அளவிட முடியாது நல்லறிவு போதிக்கும் திருநூலாகிய திருக்குறளை கற்று அதைத் தம் மனதில் நன்கு பதிய வைத்து அதன்படி நடப்போமாக.

வாழ்க தமிழ்மறை!
வளர்க திருவள்ளுவர்
திருநாமம்!

—புனிதா ஆறுமுகம்
புன்னலைக்கட்டுவன்

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

#### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 6.

பெயர்..........................................................

பாடசாலை..........................................................

விலாசம்..........................................................

..........................................................

.................................... ....................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம்    கையொப்பம்

# முயற்சி செய்

முயற்சிசெய் முயற்சிசெய் முயற்சிசெய்

அயர்வு இன்றி கல்வி, கேள்வி
அறிவு, ஆற்றல், ஊக்கத்தால்
உயர்வு பெற்றுச் சுபீட்சமுற்று
உலகில் வெற்றி காணவே... மு

தோல்வியின்மேல் தோல்வி நேர்ந்து
துன்புறுத்தும் பொழுதுமே
தாழ்வு மனப பான்மை விட்டு
சலனமுரு தென்றும் நீ··· மு

காலம், தேவை நிலைமைகளைக்
கணித்துணர்ந்து உழைத்திடில்
ஞாலமீது வாழ்வில் வெற்றி
நமது நமது நம்பி நீ... மு

உரிமைகோரி உழைத்த இனம்
உலகிற் தோற்ற தென்பதைச்
சரித்திரத்திற் கண்ட தில்லை
தயங்கிடாமற் தினந்தினம்... மு

குறியை வைத்துச் சுடுபவன்போல்
கொள்கைக்காக வாழ்ந்தவெம்
நெறியிருத்த வன்யசிங்க
நேர்மைத்தலைவன் போலநீ... மு

ஈழநாட்டி லெம்தமிழை
எழிலுடனே சந்ததம்
வாழவைப்ப துனதுகடன்
மறந்திடாமல் நிதம் நிதம்... மு

—"வன்னியூர்க் கவிராயர்"

# வளர்மதி புதிய மருமக்கள்

2626. எம். ஜே. எம். இஸ்மத், கம்பளை.

2627 செல்வி தவமணி தேவி கதிரேசபிள்ளை, மண்டூர்.

2628 எஸ். சிவஞானமூர்த்தி, அக்கரைப்பற்று.

2629 பெ. வேலாயுத பிள்ளை, பேராதனை.

2630 முத்தையா காளித்தம்பி, பருத்தித்துறை.

2631 என். பி. ஏ. சக்கூர், உக்குவளை.

2632 எஸ். சுந்தரராசா, ரக்குவானை.

2633 க. மாணிக்கவாசகர், மாதகல்.

2634. செல்வி வ. கமலரெத்தினம், மண்டூர்.

2635 முத்தையா பாக்கியநாதன், ஓமந்தை.

2636 டி. சி. தேவசகாயம், கொழும்பு—11.

2637 செல்வி ராஜாம்பிகை நடராசா, திருகோணமலை.

2638 செல்வி ச. தவமணி தேவி, அளவெட்டி வடக்கு.

2639 அ. சுந்தரலிங்கம், மாதகல்.

ஒளவை அமுதம்: 12.

## ஒளவியம் பேசேல்

பொருமை வார்த்தைகளை நீ பேசாதே என்பது இதற்குப் பொருள்.

உன்னைப்பற்றி ஒருவன் தகாத வார்த்தைகள் பேசினுல் உன் மனம் எவ்வளவு துன்பப்படும் என்பதை அறிந்த நீ பிறரைப் பற்றி தகாத வார்த்தைகள் எதுவும் பேசக் கூடாது. அது பிறரின் மனதில் வெறுப்பை வளர்க்கும்; உனக்கும் தீங்கு விளைவிக்கும்.

நல்ல எண்ணங்கள் மனசுக்குச் சாந்தியும் சுகமும் கொடுக்கும். தீய எண்ணங்கள் மனசை அசுத்தப்படுத்திப் பாவத்துள் தள்ளிவிடும்.

அன்பில்லா வார்த்தைகளால் பிறரின் கோபம், வெறுப்பு, பகை முதலியவற்றைச் சம்பாதிக்க நேரும். அது மனசை அசுத்தப் படுத்துவதோடல்லாமல் விரோத குரோதங்களையும் ஏற்படுத்தும்.

பிறரிடத்து அன் பொழுகப் பேசும் ஒருவன் பெரும் மதிப்பும் பெருமையும் பெறுவான். அது பெரும் புண்ணியமுமாகும்.

பொருமை வார்த்தைகள் பேசும் ஒருவன் பாவத்தைத் தேடிக் கொள்கிறுன். அவனுக்காக நாம் இரங்க வேண்டும். அது எம் கடமையும் கூட.

"அகழ்வாரைத் தாங்கும்
நிலம் போல த் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல்
தலை."

—ஏ. ஜீ. ஆனந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளி திருமண சபை

"மக்கள் வாழ்க்கையின் இலட்சியம் மன அமைதி பெறுவதில்தான் தங்கியுள்ளது. மக்கள் மன அமைதி பெற எங்கள் நாட்டிலுள்ள ஆலயங்கள் மிகப் பெரிதும் உதவுகின்றன. இதனுல்தான் பெரியோர்கள் கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் எனக் கூறியுள்ளனர்."

இவ்வாறு கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்ற வள்ளி திருமண சபை 24 வது ஆண்டு மகாசபைக்கூட்டத்தில் சபைக் காரியதரிசி திரு ச. சுப்பையா சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் கூறினர்.

கூட்டத்திற்கு சபைத் தலைவர் திரு வ. கார்த்திகேசு தலைமைவகித்தார். தொடர்ந்து தனுதிகாரியின் வரவு செலவு அறிக்கையை சமர்ப்பித்தபின் புத்தாண்டு நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது. போஷகர்: திரு வ. குமாரசிங்கம், தலைவர்: திரு வ. கார்த்திகேசு, உப தலைவர்கள்: அ. கந்தையா, ச. வே. சந்தசாமி, கௌரவ காரியதரிசி: ச. சுப்பையா, உப காரியதரிசி: வ. செல்வரத்தினம், கௌரவதனுதிகாரி: சி. இராசதுரை, உப தனுதிகாரிகள்: கா. முருகையா, வ. சி. செல்லையா, செ. சுப்பிரமணியம்.

நிர்வாகசபைக் குழுவினர்: திருவாளர்கள்: க. சிவசண்முகராசா, மு. வெற்றிவேல், ஆர். பி. செல்லையா, வ. இராசேந்திரம், அ. கந்தையா, நா. பெ. சதாசிவம், ஏ. முருகேசு, ஆ. நாகரத்தினம், க. சபாபதிப்பிள்ளை, கணக்குப் பரிசோதகர்கள்: திரு வ குருசாமி. க. முத்துக்குமாரசாமி, ஈற்றில் காரியதரிசி நன்றிநவில கூட்டம் இனிது நிறைவெய்தியது.

## தன்விறுவ் இஸ்லாம் புகாரிசபை

மிருவோடைஜும்மா பள்ளியில் கடந்த 15-10-59-ல் முதல் முறையாக "புகாரி சரீப்" ஆரம்பிப்பதற்காக கீழ்காணும் உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஜனுப் வை. முகம்மதிஸ்மாயில் ஹாஜியார் (தலைவர்), மௌலவி எம். எல். எம். சிஹாப்தீன் (உபதலைவர்), மௌலவி எம். ஐ. எம். ஹுஸைன் (காரியதரிசி), ஜனுப் ஏ. பி. முகம்மதுசரீபு (உபகாரியதரிசி), ஜனுப் எம். பி. எச். முகம்மது (தனுதிகாரி), ஜனுப் ஏ. பி. ஈளலெவ்வை கி. த. (போஷகர்), ஜனுப் தோ. கு. மு. முஸ்தபா லெவ்வை ஹாஜியார் (உபபோஷகர்), பதினெரு பேர்களைக்கொண்ட நிருவாகக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## இளைஞர் விவசாயக் கழகம்

தையிட்டி பாரதி இளைஞர் விவசாயக் கழகக் கூட்டம் சென்ற 24-10-59-ல் திரு வ. சிங்கராசாவின் தலைமையில் தையிட்டி சிவகுருநாத வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. திரு ப. யோகேஸ்வரலிங்கம் சென்ற கூட்ட அறிக்கையை வாசித்தார். உணவு உற்பத்தி உத்தியோகஸ்தரான திரு வி. பசுபதி "கமத் தொழிலும் கூட்டுப்பண்ணையும்" என்ற தலைப்பில் பேசினர். பின் திரு மு கதிரவேலு, திரு ப. யோகீஸ்வரலிங்கம் ஆகியோர் முறையே கழக ஒழுங்கு பற்றியும், முந்திரிகை வளர்ப்பு பற்றியும் அரிய சொற்பொழிவாற்றினர்கள்.

# கழகச் செய்திகள்

## சைவத் தமிழ்ப் பேரறிஞருக்கு வரவேற்பு

சைவாசிரிய கலாசாலை முன்னுள் தலைமைத் தமிழ் விரிவுரையாளர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு மட்டுவில் தெற்கு வேதக்கேணிக் கந்தசாமி கோயிலில் சென்ற 24-10-59-ல் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு வி. என். நவரத்தினம் தலைமையில் பாராட்டுவிழா நடைபெற்றது.

நுணுவிற் சந்தியில் இருந்து பண்டிதமணியவர்களுக்கும் சாவகச்சேரிப் பிரதிநிதியவர்களுக்கும் மலர்மாலை சூட்டப்பட்டு மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். வழி நெடுகிலும் மக்கள் பூரண கும்பங்கள் வைத்து மலர் மாலை சூட்டி வரவேற்றனர்.

சாவகச்சேரிப் பிரதிநிதி திரு நவரத்தினம் பண்டிதமணிக்குப் பொன்னுடை போர்த்தினர். பண்டிதமணி தமிழுக்கும், சைவசமயத்துக்கும் தமிழ் நாட்டுக்கும் செய்த தொண்டு ஈடு இணையற்றது என்றும் இந்த ஈழ நாட்டிலே பிறந்தது ஈழ நாடு செய்த பெருந் தவப் பயனேயாகும் என்றும் கூறினர்.

திரு நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது: சைவத் தமிழ் உலகத்துக்குச் செய்த தொண்டு அளவிடற்கரியது. பண்டிதமணியவர்கள் போன்ற பெரியார்கள் தான் நமக்கு நல்ல வழி காட்டிகளாய் இருக்க வேண்டும். தமிழ் மக்களிடையே வளர்ந்தோர் வகுப்புக்களை அமைத்து வளர்ந்தவர்களையும் சிறந்த கல்விமான்களாக்க பண்டிதமணியவர்கள் உதவி புரிய வேண்டும். நாம் வாழ, தமிழ் வாழ பண்டிதமணியவர்கள் பல்லாண்டு வாழ வேண்டுமென்று வாழ்த்துக் கூறுகிறேன்.

பண்டிதமணி தமக்குச் செய்யப்பட்ட உபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

பண்டிதமணியவர்களின் குணுதிசயங்களைப்பற்றி பண்டிதர் என். சிவலிங்கம் ஆசிரியர், என் பரராசசிங்கம் ஆகியோர்கள் மிகவும் அழகாகவும், விபரமாகவும் பேசினர்கள். தொடர்ந்து முத்தமிழ்மணி மணி பாகவதரின் கதாப்பிரசங்கம் நடைபெற்றது.

## அ. இ. பகுத்தறிவு இயக்கம்

அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்க கொழும்புக் கிளையின் செயற்குழுக் கூட்டம் கடந்த 11-10-59-ல் மருதானை திரு வி. க. நினைவுப் பள்ளி மண்டபத்தில் திரு ந. பொ. இராசையா தலைமையில் நடைபெற்றது.

திரு சி. விசயபாலன் இயக்கத்தின் புதிய பொருளாளராகவும் திரு நெல்லைச்செல்வன் துணைப் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் கீழ் வரும் தீர்மானங்கள் நிறைவேறியது:

அகில இலங்கை அருந்ததியர் சங்கம் ஆரம்பிக்கவிருக்கும் மது விலக்கு[illegible]டத்துக்கு அ[illegible]கம் முடிந்தளவு ஒத்துழைப்பு கொடுக்கும்.

பெண்கள் கள்ளுக்கடைகளில் சென்று மதுபானம் அருந்துவதை தடைசெய்ய வேண்டுமென அரசினரை அ. இ. ப. இயக்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

## மாணவர் தேர்ச்சி மன்றம்

"பொய் சொல்லக்கூடாது, களவு எடுக்கக்கூடாது, மதுபானம் அருந்தக்கூடாது என்று உங்களுக்கு, உங்கள் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுத்திருப்பார்கள். இதைத்தான் காந்தியடிகள் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து வெற்றி கண்டார். காந்தியடிகள் சட்டப்படிப்பிற்காக மேல் நாடு செல்லும்பொழுது தனது தாயாரிடம் 'மது, மாமிசம், மங்கையை தீண்டமாட்டேன்' என்று உறுதியளித்துவெற்றி கண்டார். அதைப்போல நீங்களும் தீயவைகளை தீண்டமாட்டேன் என்று உறுதியுடன் வாழ்ந்து நாட்டிற்கு நற்பணியாற்ற முன்வர வேண்டும்."

இவ்வாறு திரு வி. க. நினைவுப் பள்ளிமாணவர் தேர்ச்சி மன்றத்தின் சார்பாக அணிமையில் மேற்படி பள்ளியில் நடைபெற்ற காந்தி அடிகளின் பிறந்த தின விழாவில் அகில இலங்கை அருந்ததியர் சங்க பொதுச் செயலாளர் திரு அ. பி. சுந்தரராஜன் பேசுகையில் கூறினர். பள்ளி தலைமை ஆசிரியர் எஸ். கே. தர்மலிங்கம தலைமை வகித்தார். செல்வன் சிவஜோதியின் வாழ்த்துப் பாவுடன் ஆரம்பமாகியது. விழாச் செயலாளர் எம். எஸ். கரிகாலன் வரவேற்புரை நிகழ்த்தினர். மா. பொ. சி. மன்றத்தைச் சேர்ந்த திரு மணி. காந்தியடிகளின் திரு உருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைத்து சொற்பொழிவு நிகழ்த்தினர். திருவாளர்கள் முத்தரசு, க. ந இராசரத்தினம் முதலியோர் காந்தி அடிகளின் தொண்டைப் பற்றி விரிவாக பேசினர்கள்.

## தமிழ் மன்றத்தில் நகைச்சுவை விருந்து

"மனிதனையும், மிருகத்தையும் மாறுபடுத்தி வேறுபடுத்திக் காட்டுவது சிரிப்பு. சிரிக்கத் தெரிந்த ஒரே காரணத்தாலேதான், மிகப் பழைய காலத்திலே மிருகத்தோடு மிருகமாகக் காடுகளிலே கற்குகைகளிலே வாழ்ந்த மனிதன் சிந்தித்துச் சீர் பெற்றுச் சிறப்புற்ருன். சிரிக்கத் தெரியாத ஒரே காரணத்தால் மிருகங்கள் அன்று எப்படி வாழ்ந்தனவோ, அப்படியே இன்றும் வாழ்கின்றன; இனிமேலும் அப்படியேதான் வாழப்போகின்றன. இத்தகைய சிறப்புப் பெற்ற சிரிப்புக்குச் செலவில்லை. இருந்தும் சிலர் சிரிக்க விரும்பாது, 'குயினையன்' குடித்தவனைப்போல முகத்தை 'உம்' மென்று வைத்துக்கொண்டிருப்பார்கள். அவர்களைப் பாக்கியவான்கள் என்றுதான் குறிப்பிட வேண்டும்." இவ்வாறு சென்னை கிறிஸ்தவ மாதர் கல்லூரி தமிழ் மன்றத்தில் "நகைச்சுவை" விருந்தளித்த திரு மாஸ்டர் சிவலிங்கம் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு செல்வி. தவமணி பாக்கியம் தலைமை தாங்கினர்.

மாணவிகளின் வேண்டு[illegible] தனது [illegible] பல அறிஞர்கள், கலைஞர்களைப் போலெல்லாம் பேசி மாணவிகளை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினர்.

ஈற்றில் செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

## சாஹிரா தமிழ் மன்றம்

கம்பளை சாஹிராக் கல்லூரி தமிழ் மன்றத்தின் ஆதரவில் மேற்படி கல்லூரி மண்டபத்திலே கடந்த 12-10-59-ல் வருடாந்த பேச்சுப்போட்டி திரு மு. சிவராசரத்தினம் தலைமையில் ஆரம்பமானது. கம்பளை வட்டார வித்தியா தரிசி திரு எம். சிமியாம் பிள்ளை விசேட அழைப்பின்பேரில் பிரதம விருந்தினராக வந்து உரை நிகழ்த்தினர். திருமதி சிமியாம் பிள்ளை வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களை வழங்கினர்.

பரிசு பெற்றோர் விபரம்: ஆண்கள்: (1) எம். எஸ். எம். நவுப், (2) ஐ. ஏ சமத், (3) எம். எஸ். ஏ. ஹுசைன், (4) ஏ. எம். எம். நம்ஸீன்.

பெண்கள்: (1) செல்வி ஹலீனு சக்கேறியா, (2) செல்வி ஸவாஹிரு நசீட், (3) செல்வி செய்துல் நிசா சாலி, (4) செல்வி நயீமா லெபே.

கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ருேர்: முதற் பரிசு: குமாரி சித்தி ஸவாஹிரு நசீத் (பல்கலைக் கழகப் புதுமுக வகுப்பு) இரண்டாவது செல்வன் எம். எம். பருக் (எஸ் எஸ். ஸி) இரண்டாவது பரிசு செல்வன் எம். ஐ. எம். இஸ்மத்.

திரு பொ. தம்பு (ஆசிரியர், சென்ற் யோசேப் கல்லூரி கம்பளை) காலஞ்சென்ற கோப்பாய்ப்பிரதிநிதி திரு கு. வன்னியசிங்கத்தின் ஞாபகார்த்தமாக வழங்கிய வெள்ளிக் கிண்ணத்தை, செல்வன் எம். எஸ். எம். நஹுப் தட்டிக்கொண்டார்.

## ஜனசமூக நூல் நிலையம்

கந்தரோடை ஜனசமூக நிலையத்தின் புது அங்கத்தவர் நிர்வாகக் கூட்டம் சென்ற 10-10-59-ம் தேதி இரவு 7 மணியளவில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தமிழரசுக்கட்சித் தலைவரும் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினருமான திரு கு. வன்னியசிங்கத்தின் மரணம் குறித்து அஞ்சலி செய்யப்பட்டது. இக் கூட்டத்தில் ஜனசமூகத் தலைவர் திரு எஸ் ஆர். பாலசிங்கம் பேசும்போது மறைந்த தலைவரின் படம் ஜனசமூக நிலையத்தில் தொங்கவிடப்பட வேண்டும் என்ற பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அன்று ஜனசமூக நிலயத்தின் புது அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

# கந்தசாமி நினைவுச் சிலை....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டார். கந்தசாமி நினைவுச் சிலை சம்பந்தமாக அரசாங்கம் எதுவும் செய்வதற்கில்லை என்றும் கொழும்பு மாநகரசபைதான் அதைப் பற்றிகவனிக்க வேண்டும் என்றும் பிரதமர் பதில் அனுப்பி இருந்தார்.

### இரண்டாவது கடிதம்

அதைத் தொடர்ந்து யூனியன் மறுபடியும் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியது. அதில் அரசாங்கத்தின் கடமையை நினைவுபடுத்தி எப்படியும் அரசாங்கம் பண உதவியும் பாதுகாப்பும் அளித்தே தீரவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறது.

சட்டத்தையும் ஒழுங்கையும் அரசாங்கம் பாதுகாக்கத் தவறியதாலேயே முன்னர் இருந்த சிலையை இழக்க வேண்டியதாயிற்று என்றும் இனிமேலும் அந்தச் சிலைக்கென்று பொதுமக்களிடம் நிதி கேட்டுப் போக முடியாது என்றும் யூனியன் தெரிவித்திருக்கிறது.

### வேறு உதவிகள்

"1958 ஜூனில் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தின் விளைவாக சேதமடைந்த நாகதிபத்தைப் பழுது பார்த்துப் புதுப்பிக்க அரசாங்கம் ஒன்றரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கியது. பாணந்துறை இந்துக் கோயில் புது நிர்மாணத்துக்கு ரூபா ஐம்பதாயிரம் ஒதுக்கியது. கலவரத்தால் பாதிக்கப்பட்ட பௌத்த பிக்கு ஒருவர் பௌத்தாலயம் ஒன்றை நிர்மாணிக்க அரசாங்கம் அவருக்கு கொலன்னுவையில் இலவசமாக நிலம் கொடுத்திருப்பதாகவும் தெரிகிறது. கந்தசாமி நினைவுச் சிலை விஷயமும் இவற்றைப் போன்றது தானே. இதற்கு மட்டும் ஏன் அரசாங்கம் உதவி அளிக்கக் கூடாது?"—இப்படிக் கேட்டிருக்கிறது யூனியன்.

# தமிழைக் கற்று...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் இயற்றினர். இந் நூல் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. திருக்குறளின் அறத்துப் பாலையும், பொருட் பாலையும் லத்தீன் மொழியில் மொழி பெயர்த்து உதவிய பெருமை நம் முனிவரையே சார்ந்ததாகும். கடல்கடந்து மேல் நாடுகளில் எல்லாம் நம் தமிழ் மணம் மகிழச் செய்து அரிய சேவைகள் புரிந்த நம் வீரமாமுனிவர் போன்ருர்க்குத் தமிழ் மக்களாகிய நாம் என்றும் கடமைப்பாடுடையவர்களாவோம்.

### பல மொழிப் புலமை

வீரமாமுனிவரின் சமய உழைப்பு ஒருவகையில் தமிழ் வளர்ப்பு என்றே கூறலாம். இவர் தமிழை மட்டும் கற்றதல்லாமல் தெலுங்கு, உருது, பாரசீகம், வட மொழி முதலிய பல மொழிகளையும் கற்ருர். அவற்றில் புலமை பெற்ருர்.

# கதிரியக்க . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கால் செயற்கைக் கோள் செலுத்தப்பட்டது.

செயற்கைக் கோளில் உள்ள இரண்டு ராத்தல் புகைப் படக் கருவி ஒன்று பூமியின் படத்தை எடுத்து 40 நிமிட நேரத்தில் பூமிக்கு டெலிவிஷன் முறையில் ஒளி பரப்பியது. டெலிவிஷன் கம்பெனிகள் பயன்படுத்தும் புகைப் படக் கருவிகள் ஒரு முழுப் படத்தை 1/30 விஞடி நேரத்தில் ஒளிபரப்பிவிடும். ஆனல் செயற்கைக் கோள் கருவிக்கு 40 நிமிட நேரம் ஆயிற்று.

இவ்வாறு கிடைத்த படம் திருத்தமற்று இருப்பினும், இம்முறையில் படம் பிடித்து ஒளிபரப்புவது இயலும் என்று இம்முதல் வெற்றி நிரூபித்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4-வது மனோகரமான வாரம்!




## கிங்ஸ்லி பிளாஸா நவா

## வெலிங்டன் விஜயா வெம்பிளி
(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு) (கண்டி)

## ஸ்ரீகிருஷ்ணா மொடர்ன் லக்ஷ்மி
(திருகோணமலை) (பதுளை) (ரத்தினபுரி)

## விஜிதா நியூசினிமா சரசாவி
(மஸ்கேலியா) (குருநாகல்) (அக்கரபத்தன)

## தீவொளி ஜெமினி
(நுவரெலியா) (பொகவந்தலாவை)

ஆகிய தியேட்டர்களில்

ஆசைக்காக வாழாமல் கடமைக்காக வாழ்பவள்-பெண்

அந்தப் பெண்குலத்தில் பிறந்துவிட்ட -வசந்தி

பெண்மைக்கே உயர்வு கற்பிக்கிறாள்

## வீனஸ் பிக்சர்ஸ்
# கல்யாண பரிசு

சங்கீதம் · A.M.ராஜா
காமரா · வின்சென்ட்
ஆர்ட் · கங்கா

எடிட்டிங் · N.M.சங்கர்
ஸ்டுடியோ · விஜயா வாஹினி

கதை · வசனம் டைரக்ஷன் ஸ்ரீதர்

உள்ளத்தைத் தொடும் கதைமட்டுமல்ல நெஞ்சையே கொள்ளை கொள்ளும் -காதல்

குலுங்க குலுங்க சிரிக்க வைக்கும் -ஹாஸ்யம்




பார்த்துப் பார்த்து அனுபவிக்க வேண்டிய படம்!

புதுமையான கதைப்போக்கு! அருமையான வசனம்!!

வில்லனேயில்லாமல் விறுவிறுப்பான கட்டங்கள் சம்பவங்கள் நிறைந்தது!

இன்றே பாருங்கள்!!!

## ஜெமினி கணேசன், சரோஜாதேவி, விஜயகுமாரி, நாகேஸ்வரராவ், தங்கவேலு, நம்பியார்

நடித்தது.

பின்னணி பாடியவர்கள்:

ஏ. எம். ராஜா-ஜிக்கி-பி. சுசீலா-ஜமுனாராணி

**கதை-வசனம்-டைரக்ஷன்:**

## ஸ்ரீதர்

**சங்கீதம்:**

## ஏ. எம். ராஜா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 196-ம் இலக்கத்தில் வசிக்கும் ... அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 நவம்பர் மாதம் 8-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.